நேஷனல் புக் டிரஸ்ட் புத்தகம்

# கல்கி

(19084)

அல்லது

# நாகரிகத்தின் எதிர்காலம்

எஸ். ராதாகிருஷ்ணன்

பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்

நேஷனல் புக் டிரஸ்ட் புத்தகம்

# கல்கி

அல்லது

# நாகரிகத்தின் எதிர்காலம்

ஆசிரியர் :

எஸ். ராதாகிருஷ்ணன்

மொழிபெயர்ப்பு :

ர. இராமானுஜாச்சாரி

பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்

செய்தி - ஒலிபரப்பு அமைச்சகம்

இந்திய சர்க்கார்

பாத்ரா 1884 (செப்டம்பர் 1962)
Bhadra 1884 (September 1962)

*By kind permission of*
*the author and M/s. Hind Kitabs Ltd., Bombay-1*

Price: Re. 1.25
விலை: ரு. 1.25

KALKI; OR,
THE FUTURE OF CIVILIZATION
*(Tamil)*

PUBLISHED BY THE DIRECTOR, PUBLICATIONS DIVISION, DELHI-6
AND PRINTED AT JANATHA PRESS, 66, BELLS ROAD, MADRAS-5

# பொருளடக்கம்


பக்கம்

1. முன்னுரை ... 1
2. எதிர்மறை விளைவுகள் ... 8
3. பிரச்சினை ... 33
4. புனரமைப்பு ... 51

# முன்னுரை

அவ்வப்போது நாகரிகங்கள் நெருக்கடிகளுக்குள்ளா கின்றன என்பது வரலாறு கண்ட உண்மை. இதற் கேற்ப, இன்றுள்ள நாகரிகம் ஓர் குழப்ப நிலையினூடே செல்வதாகத் தோன்றுகிறது. உலகம் தனது பழைய உடைகளைக் களைந்து எறிந்துகொண்டிருக்கிறது. அண்மையில், ஒரு தலைமுறைக்கு முன்னர், எல்லோரா லும் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட உயர்வு தாழ்வுத் தராதரங்களும், குறிக்கோள்களும், வாழ்க்கை வரை யறைகளும் கூட இப்பொழுது மறுக்கப்பட்டு மாறி வருகின்றன். பழைய நோக்கங்கள் வன்மையை இழக் கின்றன; புதிய சக்திகள் எழுகின்றன. காலத்தின் போக்கை ஆழ்ந்து உணர்ந்த எவரும் நிகழ் காலத்தில் நிலவிவரும் அமைதியின்மையையும் நிலையற்ற தன்மை யையும், பொருளாதார - சமூக நிலைகள் பற்றிய அதிருப்தி யையும் நன்கறிவர்; இதுகாறும் உருப்பெறுத புதியதொரு திட்டத்தை அடைய விழையும் துடிதுடிப்பையும் தெளி வாகக் காண்பர். இக் கருத்துக் குழப்பமும், தெளிவுற வரையறுக்கப்படாத குறிக்கோள்களின்பால் எழும் நிலை யற்ற ஆர்வமும், மக்களினம் முன்னேற்றப் பாதையில் மேலும் ஓர் அடி முன்னெடுத்துவைக்க விருக்கிறது என்ப தைக் காட்டுகின்றன.

இத் தெளிவற்ற நிலைக்குரிய சிறப்பான காரணங்களில் ஒன்று தற்கால விஞ்ஞானமாகும். இவ்வறிவியல், நமது நாகரிகத்திற்கே புதியது என்று கூறமுடியாது. ஆயினும், அண்மையில் அதனுடைய முன்னேற்றம், நம்மை அத னோடு பொருத்திக்கொள்ள இயலாத அளவில் விரைந் தும் பரந்தும் ஆழ்ந்தும் உள்ளது. ஒரு விலங்கை அதற்கு இயல்பான சூழ்நிலையிலிருந்து நீக்கி வேறொரு சூழ்நிலை

யில் திடீரெனப் புகுத்தினால், அப்புதிய நிலைக்கேற்பத் தன்னை மாற்றிக்கொள்ளும் வரை அவ்விலங்கு அமைதியின்றி அல்லல்படுவது உறுதி. அறிவியல் சிறிதுகாலம் ஓய்வுபெற வேண்டுமென ரிப்பன் நகரத்துத் தலைமைப் பாதிரியார் (*The Bishop of Ripon*) ஒரு சமயம் கூறியுள்ளார். அவர் கூறியதன் நோக்கம், அறிவியல் மிக விரைவாக முன்னேறி நமக்குப் பல புதிய சாதனைகளை அளிக்கையில், அவற்றைப் பயன்படுத்தும் மனிதன், அவ்விரைவுக்கு ஏற்ற அளவில் தன்னைச் செம்மைப் படுத்திக் கொள்ளவில்லை என்று நமக்கு அறிவுறுத்துவதாகும்.

உலகம் வெளித்தோற்றத்தில் ஒரே தன்மை யுடையதாக ஆகிக்கொண்டு வருகிறது. ஐரோப்பாவும், அமெரிக்காவும், ஏன்—அவற்றுடன் ஆசியாவும், ஆப்பிரிக்காவும் கூட—ஒரே வழியில் செல்கின்றன. முன்னைய இரண்டும் பின்கூறிய இரண்டைக் காட்டிலும் மிக விரைந்து செல்கின்றன என்பது ஒன்றுதான் வேறுபாடு. புதிய நிலைக்குச் சிறந்த அடையாளங்களான மோட்டார் வண்டியும், ஆகாய விமானமும், திரைப்படங்களும் மிகப் பின்னிலையிலுள்ள நாடுகளிலேயும் காணப்படுகின்றன. இயற்கையின் வளங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் முறையும் அதன் ஆற்றல்களை ஆளும் திறமையும் மக்களிடம் தொடர்ந்து விரிவடைகின்றன. இந்த அடிப்படை முன்னேற்றத்தில் உள்ள நம்பிக்கையே சீனாவிலிருந்து மெக்சிகோ வரை மிகுந்துகொண்டு வருகிறது.

இந்தியாவும் சீனாவும் இந்தச் சுழல்காற்றில் இழுக்கப் படுகின்றன. துணிவான புதிய செயலில் ஈடுபடும் மனப் பான்மையாலும் ஒழுங்குபெறச் செயலாற்றும் வினைத் திறத்தாலும் தங்களது ஆதிக்கத்தை உலகத்தின் எல்லைகள் வரையில் மேலை நாடுகள் வளர்த்துக்கொண்டுள்ளன. தளர்ந்து அழிந்துவிடாமலிருக்க வேண்டுமாயின், தாமும் மேலை நாடுகளுடன் சரிநிகராக நிற்க முயலுதல் வேண்

டும் என்ற புதிய விழிப்புணர்வு கீழை நாடுகளில் காணப்படுகிறது. இதுவே அங்கு நிலவும் அமைதியின்மைக்குக் காரணம் எனலாம். வீணே அச்சத்தை விளைவிப்போர் நம்மை நம்பச்செய்ய நினைக்கும் நிலையில், கீழை நாடுகளும் மேலை நாடுகளும் மிகத் தெளிவாகப் பாகுபடுத்தக் கூடிய அளவுக்கு வேறுபடவில்லை. மனம், அறிவு இவற்றின் விளைவுகளும், பொருள்களின் இயல்பை விளக்கும் அறிவியல்களும், பொறியியல் செயல்முறை நுணுக்கங்களும், ஆட்சி முறைகளும், சட்ட திட்டங்களும், நிர்வாக ஏற்பாடுகளும், பொருளாதார நிறுவனங்களும் பல வகைப்பட்ட பண்பாடுடைய மக்களை ஒன்றாக இணைத்து ஒருவரோடொருவர் மிக நெருங்கிய உறவு கொள்ளுமாறு செய்கின்றன. இன்றுள்ள உலகம் ஒரே உயிருள்ள பொருள் போல் இயங்க முயல்கிறது. ஆயினும் புறத்தே தோன்றும் ஒருமைப்பாடு உள்ளே மனத்திலும் உணர்ச்சியிலும் ஒற்றுமையை உண்டாக்கவில்லை. நம்மைப் பிணைக்கும் புதிய உறவினால் இன்பம் மேன்மேலும் வளரவோ, மன வேறுபாடு மிகுதியாகக் குறையவோ வில்லை. ஏனெனில் மனப்பான்மையிலும் ஆன்மிக நிலையிலும் அந்நெருங்கிய உறவிற்கு நாம் ஆயத்தமாகவில்லை. 'அறிவியலும் செயல் ஆக்க விந்தைகளும்' என்ற பொருள் பற்றி உழவர் கூட்டம் ஒன்றில் சொற்பொழிவாற்றியபின் தம்மை அவ்வுழவர் சார்பில் ஒருவர் பின்வருமாறு குறைகூறியதாக மாக்ஸிம் கார்க்கி (*Maxim Gorky*) சொல்லுகிறார்: "ஆம், காற்றில் பறவைகளைப்போல் பறப்பதற்கும், தண்ணீரில் மீன்களைப்போல் நீந்துவதற்கும் நாம் கற்றிருக்கிறோம். ஆனால், புவியில் எப்படி வாழவேண்டும் என்பதை நாம் அறியோம்." சிறியதொரு கோளமாகிய இப்புவியில் அருகருகே வாழும் பல இனத்தவர், சமயத்தவர், நாட்டவர்களிடையே நல்வாழ்க்கைக்கு இன்றியமையாத நட்புணர்ச்சி இல்லை. அவர்கள் ஒருவரையொருவர் ஓரளவு பகையுணர்ச்சியுடனேயே நோக்கு

கின்றனர், மனித இனம் ஒரே தன்மையான புறத் தோற்றத்தைப் பெற்றிருந்தும் ஒரேபடியாக இயக்கு விக்கும் உள்ளுணர்வை இன்னும் அடையவில்லை. உலகம் இன்னும் ஒருமித்த மனப்பான்மை பெறவில்லை.

பலநாட்டவர்களும் தத்தம் தனித்த குறிக்கோள்களை வெளியிடும் வெவ்வேறு பண்பாடுகளைப் பெற்றிருக்கிறார் கள் என்று ஸ்பெங்கிளர் (*Spengler*) என்ற பெரியார் ''மேலைநாடுகளின் தேய்வு'' (*The Decline of the West*) என்ற தமது அரிய நூலிற் குறிப்பிடுகிறார். எல்லோருக் கும் பொதுவான ஒரு பண்பாட்டை அல்லது நாகரிகத்தை வளர்க்கலாம் என்ற நம்பிக்கையை இக் கருத்து ஓரளவு சிதைப்பதாகும். இனங்களும் பண்பாடுகளும் தனித் தனியே ஒவ்வொன்றும் தோன்றல், வளர்தல், தளர்தல், அழிதல் என்ற வரிசை முறையில் சுழன்று இயங்கு கின்றன என்ற ஸ்பெங்கிளரின் கொள்கை நயமானது தான். ஆயினும் உண்மை நிலைக்கு முற்றிலும் ஏற்றதாகக் காணப்படவில்லை. முற்காலத்தில் உலகின் குறித்த வட்டாரங்களைச் சார்ந்த நாகரிகங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்திருக்கலாம்; அல்லது அவைகள் பிள்ளை நிலை, இளமைநிலை, வளர்ந்தநிலை, மூப்புநிலை என்ற பல பருவங் களையும் கடந்து அழியும்பொழுது தங்களது வழியுரிமைப் பண்புகளைத் தங்களுக்குப் பின்தோன்றிய நாகரிகங்கட்கு விட்டிருக்கலாம். இப்போக்கிலேயே இனியும் நிகழு மென்று கொள்வதற்குப் பெரும்பாலும் இடமில்லை யென்றே சொல்லலாம். குறிப்பிட்ட பகுதிகளுக்கென நாகரிகங்கள் அமைந்த காலம் தன் முடிவை நெருங்கிக் கொண்டு வருகிறது. மக்கள் வரலாறு, தொடர்ந்து செல் லும் ஒரே இயக்கமாக இருந்து பின்னர் சூழ்நிலை, இயல் பான பண்புகள் இவற்றின் வேறுபாடுகளால் பல பிரிவுக ளாகப் பிரிந்தது என்று சிறிதளவும் உறுதியோடு சொல்வ தற்கில்லை. பண்பாடுகள் பலவும் நீண்டகாலமாகத் தத்தம்

வழியே வளர்ச்சியுற்றுப் பின்னர் ஒன்றையொன்று அநுசரிக்கத்தொடங்கி இப்பொழுது எல்லாம் ஒருங்கே சேர்ந்து வன்மை வாய்ந்த ஒரே முழு உருவம் எடுக்க விருக்கின்றன என்பதே இதுகாறும் கண்டறிந்த உண்மைகள் உணர்த்தும் முடிவாகும். எதிர்க்க இயலாதது என்று சொல்லப்படுகின்ற, விட்டுக்கொடுக்காத, விதியின் வயப்பட்டு மேலைநாடுகளின் நாகரிகம் இப்பொழுது மூப்பு நிலையைக் கடந்துகொண்டிருக்கிறது என்று ஸ்பெங்கிளர் கருதுகிறுர். இக்கூற்று ஒரு பெரிய உண்மையை அடக்கியுள்ளது. அதாவது, வட்டார நாகரிகங்கள் மறையவிருக்கின்றன, வாழ்க்கைக் கலையில் பாரகமடங்கலும் பரந்த புதிய பரிசோதனை ஒன்றை நாம் செய்யவிருக்கிறோம்என்பதே. வரலாறு கூறும் எந்தவொரு பண்பாடும் அல்லது நாகரிகமும் உலகம் முழுவதற்கும் நீக்கமற நிறைந்து பொதுவாக இருந்ததெனச் சொல்லிக்கொள்ள இயலாது. ஏனெனில் அவற்றுள் ஒவ்வொன்றும் தனித்தனி மக்கள் தொகுதியின் உயிராற்றலின் வெளிப்பாடாகும். இவற்றைப் பொறுத்த அளவில் வரலாறு கூறும் நிகழ்ச்சிகளின் காரண-காரியத் தொடர்பைத் தவிர வேறு எவ்விதத் தொடர்புமில்லை. குறிப்பிட்ட இடம், பொருள், ஏவல் என்பவற்றுக்கு உட்படாப் பொது மனிதனை வரலாற்றில் காண இயலாது. ஆகவே உலகில் ஒரே வகையான நாகரிகம் இருக்க முடியாது. மக்கள், அவர்களது வாழ்வு இவை பற்றிப் பரந்த, உயரிய குறிக்கோள்களை எதிர்கால நாகரிகம் எய்துதல் வேண்டும். பழைய நாகரிகமும் இக்கால நாகரிகமும் மக்கள் இனத்தின் உண்மையான நலன்களையே எப்பொழுதும் நாடி வந்தன என்று சொல்லுவதற்கில்லை. அவை இனம், சமயம், அரசியல் முதலிய துறைகளில் தமக்கெனத் தனியுரிமைக்காகப் பாடுபட்டன ; பெண்டிரை ஆடவரும், ஏழைகளைச் செல்வர்களும் கீழ்ப்படுத்த உதவின. மக்களினம் முழுமைக்கும் தகுதிவாய்ந்த நிலையான நாகரிகத்தை

நாம் அமைப்பதற்கு முன்னர், வரலாறு கண்ட நாகரிகம் ஒவ்வொன்றும் தன் குறைபாடுகளையும், தான் மிகச் சிறந்த உலக நாகரிகமாக விளங்கத் தகுதியற்றது என் பதையும் உணரவேண்டும்.

இயந்திரப் புத்தமைப்புக்களில் கண்ட மாபெரும் வெற்றி, எதிர்கால நாகரிகத்திற்குப் பொதுவான அடிப் படை ஒன்றை அளிக்கிறது. ஆயினும் தொன்று தொட்டு வழங்கிவரும் கருத்துவகைகள், நம்பிக்கைகள், செயல் முறைகள் ஆகியவற்றைக் கைவிடுவது ஆன்மிக ஒற்றுமையை அமைக்கும் முயற்சிக்கு இன்றியமையாத முன்னேற்பாடாகும். எங்கும் பரவி, எதையும் மாற்றி யமைக்கும் ஆற்றல் எல்லா மக்களிடமும் இருப்பினும், இளைஞர்களிடையே அது சிறந்து காணப்படுகிறது. ஏனெ னில் வயதிலும் மதிநுட்பத்திலும் மற்றவர்கள் எவ்வளவு மேம்பட்டிருந்தாலும் அவர்கள் பிடித்த பிடிக்குக் களிமண்ணைப்போல இளைஞர்கள் இணங்குவதில்லை. விரைந்து செயலாற்றும் ஓர் விழிப்பும், இதுகாறும் நாம் கொண்டிருந்த எண்ணங்களிலும் கருத்துக்களிலும் ஏதோ குறைபாடிருக்கிற தென்றதோர் உணர்ச்சியும், அதிருப்தி யும்,புதியசிறப்புக்களை வகையறியாது தேடுவதும்—இவை எங்கும் காணப்படுகின்றன. சுற்றுப்புறமெல்லாம் ஓர் நிலை குலைவே நிலவி நிற்கிறது. பழைய நம்பிக்கை வகைகள் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு நாட்டிலும் சமயத்தவரிடையேயும் ஆழ்ந்து சிந்திக்கின்ற மக்கள் இடையேயும் எதிர்காலம் சிறப்புடையதாக அமைய வேண்டும் என்ற கவலை, அவ்வாறு அமைவதை விரும்பி எதிர்நோக்கும் இயல்பு—இவற்றின் அறிகுறிகள் புலப் படுகின்றன.

மக்கள் இனம் அனைத்தும் எங்கும் எக்காலத்திலும் ஒரே அமைப்புடையது, அதன் பெருமையின் வளர்ச்சி போற்றத் தகுந்தது, யாரும் எல்லையிட்டுத் தடுக்கத் துணியமுடியாதபடி வளரும் ஆற்றல் பெற்றது என்பன

வற்றையெல்லாம், வாதத்திற்குத் தகுதியற்ற பிடிவாத வெறியர்களைத் தவிர, வரலாற்றில் இடம்பெற்ற எல்லா நாகரிகங்களின் தலைவர்களும் உறுதியாக நம்புகிறார்கள். "இந்த நாகரிகத்திற்கு ஒன்று, அந்த நாகரிகத்திற்கு ஒன்று எனத் தனித்தனியாகக் குறிக்கோள்கள் இல்லை. மனித இனம் முழுவதற்கும் ஒரே குறிக்கோள் தான் இருக்கிறது" என்பது தாந்தே (*Dante*) என்ற இத்தாலியக் கவிஞரின் கூற்று. அவ்வாறு இருக்குமாயின் எல்லோரும் ஒரே பொது மொழியைப் பேசவேண்டும், ஒரே சமயத்தை மேற்கொள்ளவேண்டும், ஒரே ஆட்சி யின் கீழ் வாழவேண்டும், எல்லோரும் மாற்றமில்லாத பழக்கவழக்கங்களைப் பின்பற்றவேண்டும் என்றெல்லாம் பொருள்கொள்ளக்கூடாது. நாகரிக ஒற்றுமை, ஒரே வடிவத்தில் காணப்படுவதன்று; ஒன்றோடொன்று இயைந்திருக்கின்ற இணைப்பில் காணப்படுவதாகும். ஒவ்வொரு பெரிய பண்பாடும் வெவ்வேறான குறிக் கோள்களையும் மனநிலைகளையும் கொண்ட மக்களின் கூட்டுறவால் அமைந்ததாகும். எகிப்தும் பாபிலோனும், இந்தியாவும் சீனாவும், கிரீசும் உரோமும் இவ்வுண்மைக் குச் சான்றாகும். பண்பாட்டுக் கூட்டுறவில் பங்குகொள்கிற வர்களின் தொகை இன்று பெருகியிருக்கிறது; உண்மை யில் உலகம் முழுதுமே இதில் பங்கு கொண்டுள்ளது எனலாம். ஒத்துழைப்பில்தான் எதிர்காலத்தின் நம்பிக்கை உள்ளது, மற்றவர்களுடன் ஒன்றி இணைந்து விடுவதில் அல்ல; மற்றவர்களுக்கு விட்டுக்கொடுக்கும் தன்மையில் உள்ளது, அவர்களைப் பின்பற்றி நடப்பதில் அன்று; சகிப்புத் தன்மையில் உள்ளது, மற்றவர்களை வலிந்து தன்வழிப்படுத்துவதில் அல்ல.

# 2. எதிர்மறை விளைவுகள்

## சமயம்

கீழை நாடுகளில் சமயத் துறையிலுள்ள நிலைமை, மிக்க குழப்பமாயும் தெளிவற்றும் இருக்கிறது. இச் சிக்கல் மேலைநாடுகளில் இருப்பதைவிட இங்கே குறைந்ததன்று. வரலாறு கண்ட சமயங்கள் பலவற்றின் பண்டைக் கொள்கை அடிப்படைகளை உளவியல், சமூகவியல், உயிரியல், மனிதவியல் ஆகிய அறிவியல் துறைகள் நிலை குலைத்துக் கொண்டிருக்கின்றன. கடவுள் என்பது மக்கள் மனத்தின் சாயலே, மனித இதயம் காணும் கனவே என்ற புதிய கொள்கையைச் சமய அநுபவத்தின் பலவேறு விளக்கங்கள் ஆதரிப்பதுபோல் தோன்றுகிறது. மறுமையைப் பற்றி நமக்குக் கூறும் சமயப் பேரறிஞர்கள் பித்தர் விடுதிகளில் ஆராய்ச்சிப் பொருள்களாக இருக்கத் தக்கவர். தொன்றுதொட்டு வந்த வாதங்கள், இன்று புதுமை மனத்திற்கு நம்பிக்கை அளிக்கவில்லை. ஒவ்வொன்றுக்கும் காரணம் உண்டாயின், கடவுளுக்கும் ஒரு காரணம் இருக்கவேண்டும். கடவுள் காரணமின்றி இருக்கலாம் என்றால், உலகமும் காரணமின்றி இருக்கலாம்.

குறைபாடுள்ள நமது உலகம் மெய்யறிவும் வரம்பில்லாத ஆற்றலும் மிக்க ஓர் ஆண்டவனது படைப்பாக இருக்க முடியாது. இறைவன் இருக்கிறான் என்பதற்கு வரலாறு சான்று பகரவில்லை. “வரலாற்றாசிரியன் கடவுளை வரலாற்றிலிருந்து அகற்றவில்லை; ஒருபொழுதும் அங்கு கடவுள் அவனுக்குத் தென்படவில்லை” என்று (*M. Loisy*) லாய்சி என்பார் கூறுகிறார். குற்றங்கள் நீக்கப்பட்டும் துன்பக் கண்ணீர் துடைக்கப்பட்டும் அமைகின்ற நேர்மையான உலகத்தை நாம் விழைகின்றோம். இந்தப் பேரவா இவ் வுலகத்திலுள்ள நேர்மையின்மையையே குறிப்

பிடுகிறது. "ஆண்டவன் அங்கே இருக்கிறார் பாருங்கள்; இங்கே இருக்கிறார் பாருங்கள்" என்று நாம் சொல்வதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. கடவுள் இருக்கிறார் என்பதற்கு வெளிப்படையான அடையாளங்கள் எங்கே என்று மக்கள் கேட்கும்பொழுது கடவுள் வாளாவிருப்பது, கடவுள் இல்லை என்ற கொள்கைக்கு வன்மைமிக்க சான்றாகும். இவ்வாறிருந்தும் கடவுள் இருக்கிறார் என்று சிலர் விடாப்பிடியாகக் கடவுள் மீது நம்பிக்கையைக் கொண்டிருப்பாராயின், அது வருந்துதற்குரியதே யன்றி வியப்புக்கு உரியதன்று. தத்தம் நலங்களில் மட்டும் நாட்டங் கொண்ட சமயவாதிகள் என்ன சொன்னபோதிலும், மேற்கண்டவர்களுடைய கடவுள்நம்பிக்கை, நீரில் மூழ்கிக்கொண்டிருப்போன் பிழைக்கக் கருதிப் பற்றும் துரும்பைப் போல வலிமையற்றதாகும்.

சமயக் கொள்கைவகைகள் கடவுளைப் பற்றிப் பல கதைகளைப் புனைந்து, மனிதனின் நம்பும் தன்மையைப் பயன்படுத்திக்கொள்கின்றன. எடுத்துக்காட்டாக, சீற்றங் கொண்ட ஒரு தெய்வம் பழிக்குப்பழி வாங்க முற்பட்டோ, தன் பகைவனோடு பயனெதிர் நோக்கியோ, நினைத்துக் கூடப் பார்க்க முடியாத, முடிவில்லாத துன்பத்திற்கு மனித குலத்தை ஆளாக்குகின்றது. மற்றொரு மனநிலையில் அது தானே அருள் கூர்ந்து இவ்வாறு தான் இயற்றிய அநீதிக்குச் செயற்கைப் பரிகாரமும் அமைக்கிறது. இவற்றிற்குக் காரணம் உலகம் தோன்றுதற்கு முன்னரே இப்படியெல்லாம் நடக்கவேண்டும் என்று அத்தெய்வமே ஒரு திட்டம் வகுத்துக்கொண்டது என்பதும், இவை போன்ற பிறவும் கட்டிக்கூறும் கதைகளே. இயற்கையை மீறியவை பற்றிய (*supernatural*) இக்கதைகள் உலகத்தின் பிள்ளைப்பருவப் புனைகதைகளே யன்றி வேறல்ல. பண்டைக் காலத்தவர் கடைப்பிடித்த விதி நூல்கள், இக்காலத்துச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அவ்வளவாகத் துணை புரிய மாட்டா. பண்டைச் சமயநூல்களை

இன்றுள்ள தேவைகளுக்கேற்ப விளக்கும் முயற்சி எதுவும் பழமைக்கு நாம் கொடுக்கும் மதிப்பைக் காட்டுமே தவிர அறிவு நேர்மையைக் காட்டாது. வளர்ச்சி பெருத, குழந்தை – மனப்பான்மையிலுள்ளவர் நாடுவதே சமய மாகும். நெஞ்சுரம் மிக்க சிந்தனையாளர்க்கும் சமயத் திற்கும் தொடர்பில்லை. கடவுள் என ஒருவர் இல்லை, நன்மை, தீமை இரண்டையும் பொருட்படுத்தாத, பற்றற்ற, திரிபில்லாத ஒன்றன் கருவிகளாக நாம் இருக் கிறோம். அதன் பிடியிலிருந்து விலகினால் நாம் பேரிருளில் மறைகிறோம்.

கடவுள் இருக்கிறார் என்பதற்குத் திட்டமான சான்று கள் இல்லையெனினும் கடவுள் இல்லையென்று உறுதியாகக் கூறமுடியாது என்று சொல்வோரும் உளர். ஆகவே நாம் எதையும் ஒப்புக்கொள்ளவோ, எதையும் மறுக் கவோ வேண்டியதில்லை. சமயத்தின்பால் விருப்பம் கொள்ளும் மனப்பான்மையுடையவர் இத் துன்ப நிலையில் கடவுளைக் கைவிட மனங்கொள்வதில்லை. ஐயப்பாடு கொண்ட நிலையில், கடவுள் இல்லை என்பதைக் காட்டி லும் கடவுள் இருக்கிறார் என்ற கூற்றை ஏற்பது நலம் என்பர். எவ்விதமாயினும், கடவுள் யார் அல்லது எது என்றுகூடத் தெரியாத நிலையில், நிலையற்ற எளிய மனிதன், கடவுள் இல்லையென்று சொல்லுவது வரம்பு மீறியதாகும் என்பர் (*agnostics*). இவர்கள் கடவுள் இல்லை, கடவுள் உண்டு என்ற இரண்டு தீவிரக் கொள்கைகளுக் கும் இடையில் நிற்பர். இரு சாராருடைய உறுதியான நம்பிக்கையும் இவர்களுக்குக் கிடையாது; இந்தச் சிக்கல் தமக்கு அப்பாற்பட்டது என்றே நினைப்பர்.

கடவுளின்மேல் நம்பிக்கை வைத்தல், அல்லது கண் ணுக்குப் புலனாகாத பரம்பொருளிடம் கலத்தல் என்ற வகையில் சமயம் பயனற்றது என்று சிலர் கருதினாலும், அவர்கள் ஆத்திக வாதத்தைப் பயன் கருதி (*pragmatic*) ஏற்பர். உலக முன்னேற்றத்தில் நாம் எத்துணை ஆர்வம்

காட்டுகிறோமோ அத்துணை ஆர்வம் ஆன்மா வீடு பேறடைய வேண்டும் என்பதில் நாம் கொள்வதில்லை. சமூக அமைதிக்கும் முன்னேற்றத்திற்கும் சமயம் உதவுவதால் அவை நிறைவேறுவதற்குச் சமயத்தைப் பயன் படுத்தலாம். சமயவழி நிலவும் ஒவ்வொரு சமுதாயத்திலும் பெரும்பான்மையோர் சமயவழி தரும் சில பயன்களையே எண்ணி, சிந்தித்துப் பார்க்கும் சிரமத்தை ஏற்காமல், குருட்டு நம்பிக்கையைக் கைக்கொள்கின்றனர். மக்களது அநுபவ ஞானத்தின் ஈட்டம் முழுவதும் பண்டைக் காலத்திலேயே திரண்டிருப்பதாகக் கருதி அவர்கள் பழமையையே நோக்கி நிற்பர். இறந்த காலத்தனவே உண்மையில் வாழ்கின்றன. அவைகளே இன்றுள்ளவற்றை ஆளவேண்டும். ஆன்மிக விடுதலைக்காகச் செய்யும் முயற்சியில் தம் தனி வழியையே (*Individualism*) பலரும் தீவிரமாகக் கருதி நிற்பர். ஏனையோர் இயற்கை வாதத்தை (*Naturalism*) ஏற்கின்றனர். மற்றும் சிலர் ஐய வாதத்திலும் (*Scepticism*) மறுப்பு வாதத்திலும் (*negations*) மனநிறைவு கொள்வர். ஆகவே எங்கும் நிலவி நிற்பது குழப்பமே!

## குடும்ப வாழ்க்கை

கடந்த போரினால் விளைந்த சீர்குலைவு, திருமணத்தை ஒத்திவைக்க ஏதுவான பொருளாதாரச் சூழ்நிலைகள், தனது கருத்துக்களையும் இயல்பினையும் (*self-expression*) வெளிப்படுத்துவதில் மனிதனுக்குள்ள பேரார்வம், பெற்றோரின் கண்காணிப்பிலே தளர்ச்சி, ஆண் பெண் உறவு பற்றிப் போதிய அறிவின்மை, பிராயிடு (*Freud*) என்பாரின் உளவியல் கொள்கைகள், இயற்கை விளைவுகளினின்றும் நம்மைக் காக்கும் கருத்தடை முறைகள் பற்றிய அறிவு ஆகிய இவை போன்ற பல காரணங்கள் வாழ்க்கைத் தரத்தில் ஒரு நெகிழ்ச்சியை ஏற்படுத்தி

யிருக்கின்றன. ஆடவர்களுக்குரிய நியதிவரம்புக்கு மாருன வேருெரு வரம்புக்குக் கட்டுப்படப் பெண்டிர் மறுப்பது சரியே. ஆடவர், பெண்டிர் இயல்புகளுக்கும், அல்லது ஆண் மனத்திற்கும் பெண் மனத்திற்கும் இடையே அடிப்படை வேற்றுமை ஒன்றை வற்புறுத்திய பழைய கொள்கைகள் இன்று கைவிடப்படுகின்றன. பெண்டிர்க்கு உரியதென ஆடவர்கள் வற்புறுத்தி ஏற்கச் செய்துவந்த கன்னித்தன்மை யெனும் குறிக்கோள் இன்று பெரும்பாலும் தன் பிடிப்பை இழந்துவிட்டது. ஆண்களைப் போலவே பெண்களும் மனம்போன போக்கில் நடப்பவர் கள், வேட்கை மேலிட்டவர்கள், தமக்கென உள்ளதை விட்டு இணைவிழைச்சுத் துறையில் புதுமை காண விரும்பு கிறவர்கள் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. உறுதி யிலும், உறுதிக்குறைவிலும் அவர்கள் நம்மை ஒத்தவரே யன்றி மேலானவருமல்லர், கீழானவருமல்லர் என்று மிகத் திண்மையுடன், பெரும்பாலும் அனைவரும் ஒத்துக் கொள்ளும் வண்ணம் அவர்கள் வற்புறுத்திவருகின்ருர் கள். இணைவிழைச்சு (புணர்ச்சி) துறையில் வரம்பின்மை ஒரு தொன்மையான பழக்கம், மனித குலம் தோன்றிய நாள் முதலாக இருந்து வருவது. ஆனல் அதற்குத் தன் னியல்புகளின் வெளியீடு *(self-expression)* என்ற புதிய பெயரைத் தந்து அது சரியெனச் சாதிக்கிருேம். கட்டுப் பாடற்ற நடத்தை சிறந்த கதைகளிற் பாராட்டப்படு கின்றது. சமுதாயத்தின் உயர்ந்த வட்டாரங்களில் அது ஒப்புக்கொள்ளப்படுகின்றது.[1] தனது மனச்சாட்சியை

[1] இருபத்தாறு ஆண்டு காலமாக டென்வர் (கொலராடோ) 'சிறுவர்கள் மற்றும் இல்லற நீதிமன்றத்'துடன் தொடர்புள்ள நீதிபதி பென். பி. லின்சே (Ben. B. Lindsay) மன அமைதி யைக் குலைக்கும் தம்முடைய நூலான "தற்கால இளமையின் புரட்சி" (The Revolt of Modern youth) என்பதில், "பதினன்குக் கும் பதினேழுக்கும் இடைப்பட்ட வயதுள்ள இளம் பெண்களில் பத்தில் ஒருத்தி இணைவிழைச்சுக் குற்றமிழைத்தவளாக இருக்கிருள். இப்படிப்பட்டோரின் சதவிகிதம் பதினேழுக்கும் இருபத்தொரு வயதுக்கும் இடைப்பட்ட பெண்களிடம் இன்னும் அதிகம்" என்று

ஓரளவு காத்துக்கொண்டு அதே நேரத்தில் தனது கீழ்த்தரமான விருப்பங்களையும் நிறைவேற்றிக்கொள்வதில் ஆர்வங் கொண்டவள், வறுமையினால் வாழ்க்கையில் வழுக்கி வீழ்பவளை அவளுடைய பரத்தமைத் தொழிலினின்றும் விரட்டி விடுகிருள். மணமானவளுக்குப் பல காதலர்கள் இருத்தல் வேண்டும் என்ற எண்ணத்திஞல்தான் பலர் ஒழுக்கம் தவறுகின்ருர்களேயன்றி வெறும் காமத்திஞல் அல்ல. சில வட்டாரங்களில் இணைவிழைச்சுத் துறையில் வரம்பின்மை ஒரு சமூகக் கடமையாகக் கூடக் கருதப்பட்டு வருகிறது. சமூகத்தின் சட்ட திட்டங்கள் ஆடவருக்குச் சார்பாகவும் பெண்டிர்க்கு எதிராகவும் அமைந்திருப்பதால், பெண்டிரிற் பெரும்பான்மையோர் அவற்ருல் கட்டுண்டு கிடக்க விரும்பவில்லை. சமூக விதிகள் எவ்வளவு தளர்ந்திருப்பினும், ஒருதலைச் சார்புடையதாயிருப்பினும், அக்காரணத்தால் அநீதியாக இருப்பினும் அவற்றை எதிர்ப்பது கடினமானது மட்டுமன்று, அபாயகரமானதுமாகும். பொருளாதார உரிமையையும்; திருமணக் கட்டுப்பாடுகள், தாய்மைப் பொறுப்புக்கள் இவற்றிலிருந்து விடுதலை பெறுவதையும் வளர்ந்து வரும் பகட்டான இளநங்கையர் குழாம் விரும்பி நாடுகிறது. திருமண விலக்குகளின் எண்ணிக்கை மிகுந்து கொண்டே வருகிறது. தமக்கிடையே நேர் தொடர்பின்றி வழக்கறிஞர்

---

கூறுகிருர். "இளம்பருவத்தினரில், விருந்துகளுக்கும் நடனங்களுக்கும் போகின்றவர்களிலும் கார்களில் சேர்ந்து செல்பவர்களிலும் 90 சதவிகிதத்துக்கு அதிகமானவர்கள் முத்தமிடுதல், தழுவுதல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். ஏறத்தாழ இவர்களில் பாதிப்பேர் இதனேடு நிற்பதில்லை." "டென்வருக்குப் பொருந்தும் இந்நிலை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் எல்லாப் பெருநகரங்களுக்கும் ஊர்களுக்கும் மிகவும் பொருந்தும்" என அவர் வலியுறுத்திஞலும், உள்ளபடி நிலைமை அவ்வளவு மோசமில்லை என்று நாம் எண்ணலாம்; இது சற்று மிகைப்பட உரைத்தது என்று நம்பவும் இடமுண்டு.

கள் வாயிலாகத் தொடர்புகொண்ட பெற்ருேரிடையே குழந்தைகள் இங்கும் அங்கும் தள்ளப்படுகின்றனர்.

இதையொட்டி நான்கு வேறுபட்ட மனப்பான்மைகள் புலனுகின்றன. அடிப்படைவாதிகள் (*Fundamentalists*) தொன்றுதொட்டு வழங்கும் கருத்துக்களை மீண்டும் வலியுறுத்தி, காதலற்ற திருமணம் துன்பமயமாயின் திருமணமில்லாக் காதல் இவ் வையகத்தையே நரகமாக்கும் என்று பக்தி ஆரவாரத்துடன் சொல்வர். காதலினுல் ஓரளவு செம்மை பெறினும், திருமணத்தினுல் தூய்மைபடாத சேர்க்கை ஒரு குற்றமாகும். ஒரு சிறிதேனும் காதலுணர்ச்சி யற்றிருப்பினும், எந்தவிதமான திருமணமும் சிறந்ததேயாகும்.

மாறிக்கொண்டே யிருக்கும் உலகத்திற்கு ஒரு நிலையான அறநெறி இருக்க முடியாது என்று சமூக இலட்சியவாதிகள் (*Social Idealists*) கூறுகின்ருர்கள். மிக உயர்ந்த குறிக்கோள்களையே தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. நடைமுறை நிலைக்கு இறங்கி வந்தோமாஞல் ஆரவாரமிக்க கோட்பாடுகளுக்கும் செயலில் காணப்படும் தளர்ச்சிக்கும் இடையில் இருக்கும் வேறுபாட்டை அறியலாம். தொன்றுதொட்டு ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கைகள் பெண்டிரிற் பெரும்பான்மையோருக்கு மனநிறைவான காதல் வாழ்க்கையை அளிக்கவில்லை. எடுத்துக் காட்டாக, பிரிட்டன் போன்ற நாட்டில் ஆடவரைக் காட்டிலும் இருபது லட்சம் பெண்கள் மிகுந்து இருக்கின்றனர். இவ்வாறு மிகுந்திருப்பவர்க்குச் சமயத் திருநிலையங்கள் (*Religious orders*) சமய வாழ்க்கையில் ஈடுபடும் வாய்ப்பை அளிக்குமென எதிர்பார்க்கலாம். ஆனுல், சமய வாழ்க்கையில் மக்களின் நம்பிக்கைத் தளர்ச்சி இவ்வாய்ப்பைக் குறைத்துக் கொண்டு வருகிறது. இச்சூழ்நிலையில் நாம் ஒருதார முறையை (*monogamy*) வற்புறுத்தினேமானுல் பெண்டிரிற் பலரை வாழ்நாள் முழுதும் கன்னிப் பெண்களாக

இருக்கவேண்டிய நிலைக்கு ஆளாக்கிவிடுவோம். சூழ்நிலையின் வற்புறுத்தலால் ஏற்பட்ட மணவா நிலை கன்னியாக வாழவிரும்பும் நோன்பு முறைக்கு முரண்பட்டதாகும். சமூக மரபு விதிகளால் தொல்லைப்பட்டவர்கள் காதலின்பத்தை அறவே இழக்க விரும்புவதில்லை. இதன் பயனுகச் சிலர் மனநோயால் பிடிக்கப்படுவர். காரணம், புலனுகர்ச்சி இன்றேல் மனநோய் மிகும். மணம் செய்துகொள்ள முடியாதவர்கள் பலரும் தமது வேட்கையைத் தணித்துக் கொள்வதற்கு வேறு வழிவகைகளை நாடுகின்றனர். நாம் அவ்வொழுக்கக் கேட்டிற்கு உடந்தையாக இருக்க வேண்டியவர்களாகிறோம். பலரை மணத்தல் சட்டத்திற்கு மாருயினும் நடைமுறையில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. நடைமுறையில் பலதாரமானது *(polygamy)*, இழிந்த ஒழுக்கம், வஞ்சனை, நோய் ஆகியவற்றை வளர்த்து, இதில் தொடர்புகொண்ட எல்லோரையும் இழிவுபடுத்துகிறது. மேலும், 'மரணம் பிரிக்கும் வரை இணை பிரியோம்' என விளைவறியா மணமக்களை உறுதிமொழி கூறச்செய்வது அறிவின்மையாகும். நிலையான கடமைகளை உள்ளடக்கிய ஒப்பந்தமெதுவும் இல்லாமலிருந்தால்தான் காதல் இடரின்றி மலரமுடியும். பரீட்சார்த்தத் திருமணங்களை *(trial marriage)* மேற்கொள்ளுதலே சமுதாயத்தின் அமைதிக் குறைவைத் தீர்க்கவல்ல ஒரேவழியாகத் தோன்றுகிறது.

ஐயக்கொள்கையினர் *(Sceptics)*, நாம் மீண்டும் பழைய நிலையைப்பெற இயலாது என்று துணிந்து கூறுவர். ஆனல் இப்போதுள்ள நிலையைக் கண்டு அவர்கள் மனம் சோர்வர். திருமண விலக்கு நீதி மன்றங்கள் *(divorce courts)* தொடர்ந்து குடும்பங்களைக் கலைத்து, இவ்வாறு பிரிந்தவர்கள் மீண்டும் புதிய சேர்க்கை கொள்ள உரிமை அளிக்கின்றன. பெற்றோர் கண்காணிப்பும் வழிகாட்டும் முறையும் இல்லாத புதிய இல்லங்களில் குழந்தைகள் அலமந்து நிற்கின்றனர். இவற்றை

யெல்லாம் கண்டு ஐயக் கொள்கையினர் நம்பிக்கை யிழந்து சோர்ந்து கைவிரிக்கின்றனர். நிலைமையை எப்படி ஒழுங்குபடுத்துவது என்பதை அறியாது, நடக்க வேண்டியவை நடந்தே தீரும் என்று புகலற்று நிற்பர். அவர்கள் முன்னேருமல், சூழ்நிலைகள் இழுக்கும் வழியில் செல்வார்கள்; ஏதேனும் வழி பிறக்காதா என்று காத் திருப்பர்.

துணிவுக் கோட்பாடுடையவர்கள் (*bolder spirits*) வாழ்க்கையின் குறிக்கோள் வாழ்க்கையே எனக் கூறுவர். வாழ அஞ்சும் கோழைகள் இரக்கத்திற்கு உரியவர்கள், காரணம்:- அவர்கள் வாழ்க்கையின் கிளர்ச்சியையும் இன்பத்தையும் இழந்துவிடுகின்றனர். அவர்கள் வாழ்க் கைச் சிக்கல்களை நேரில் பாராமல், வாழ்க்கையை எப்படியேனும் கழித்தால் போதும் என்றிருப்பார்கள். நெஞ்சழுத்தக்காரர்கள் தவறி நடப்பதில் தனித்த மகிழ்ச்சி கொள்வர். காம உணர்ச்சியே காம வாழ்க் கைக்குப் போதிய காரணம் ஆகிறது. களங்கமறியாத உட லின் இன்பங்கள் ஆன்மாவின் மாசுகளாகா. எவருடன் நமக்கு அறிவுத் துறையில் ஒற்றுமையும் மன உறவும் உண்டோ அவர்களுடன் உடலுறவு நாடுவதில் தவ றென்றுமில்லை. மக்கள் சிலவற்றைச் சரி என்றும், சிலவற் றைத் தவறு என்றும் கொள்ளலாம். ஆனல் இயற்கையோ எல்லாவற்றையும் சரியெனக் கருதுகிறது. இயற் கைக்குப் புறம்பாகக் கடவுள் என்ற ஒருவர் இல்லையென்ற கொள்கையினர் பின்வருமாறு கூறுவர்: தற்செயலாகப் பௌதிக சக்திகள் எப்படி, எவ்வித நோக்கமுமின்றிச் சேர்ந்து அழகிய மனித உடலமைப்பை உருவாக்குகின்ற னவோ அவ்வாறே எவ்வித நோக்கமுமின்றி எப்போதாயி னும் பிரியக்கூடும். ஆகவே வாய்ப்பு இருக்கும்போது அதனைப் பயன்படுத்திக்கொள்வது நன்றென்பர். நிறை வாகவும், அழகாகவும், துணிவாகவும் வாழ்க்கையை நடத்த நாம் விரும்பினுல், வாழ்க்கைக் கிண்ணத்தைச்

சாவு பறித்துக்கொள்ளு முன்னர் நாம் அதனிலிருந்து ஆழ்ந்து சுவைத்துப் பருகவேண்டும். ஒருவன் தனது ஆசைகளை மறைத்துவைப்பது நல்ல பண்பின் அடையாளமென இனிக் கருதமுடியாது என்பர் இக்கொள்கையினர். ஆசைகளைத் தடைப்படுத்துவதற்கும், மூடிமறைப்பதற்கும் தேவையே இல்லை. வாழ்க்கை ஒரு துணிவுப் போக்கு. ஆற்றலைப் பயன்படுத்துவது ஒன்றே நன்மையாகும். தொன்றுதொட்டு வந்த அறவழியை ஆதரிப்பவர்கள் குருதிக் குறைவினால் வருந்துகின்றனர். தம் இயற்கை தம்மைத் தூண்டாதவற்றிற்கு மற்றவர்கள் உள்ளாவது ஏன் என்று அவர்களால் புரிந்துகொள்ள இயலவில்லை. தீவிரத் தனிமை வாதத்தை ஆதரிக்கும் இவர்கள் தங்களது ஆசைக்கு ஏற்படக்கூடிய தடைகளைப் பொறுக்க முடியாதவர்களாகின்றனர். தங்கள் மனம் போன போக்கிற்கு இடையூறு விளைவிக்கும் எத்தகைய வாதத்தையும் அவர்கள் வெறுப்பர். நன்னெறிக் கட்டுப்பாடுகளைப் பழங்கால மோசடி என்றும், கடவுட்பற்றை மூடநம்பிக்கை என்றும் தள்ளுவர். அலவை (*adultery*) எனப்படும் கூடாவொழுக்கம் அகவுரிமையின் அடையாளமாகும். மனித வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் முறைகள் வாழ்க்கைக்கு மிக வலிய பகைவர்களாகின்றன, எனவே மிகச் சிறந்த சமூக முறையை உருவாக்குமுன் இவற்றைத் தகர்த்தெறிய வேண்டும்.

## பொருளியல் தொடர்புகள்

தலையிடாமைக் கொள்கை (*laissez faire*) மெல்ல வலிவிழந்து வருகின்றது. தங்குதடையின்றி ஒப்பந்தம் மேற்கொள்ளவும், போட்டியிடவும் வாய்ப்பளிக்கும் சக்திகளின் செயல்முறை மூலம் சமூகம் தானே சரிசெய்து கொள்ளக்கூடிய ஓர் இயந்திரம் எனக் கருதமுடியாது. பொருளாதாரத் தனியுரிமையானது (*economic individua-*

*lism*) சமூகத்தின் மேற்பரப்பில் சிலர் எளிதில் திருப்தி யடையாது ஆடம்பர வாழ்க்கையை நடத்துவதற்கும் காரணமாகியுள்ளது. இந்நிலை, தவிர்க்கவொண்ணாத தன்று. நமது கட்டுப்பாட்டிற்கு அடங்காத புறம்பான நிலைப்பாடுகளால் தனிமனிதனும் சமூகமும் உருவாக்கப் படுகின்றன என்ற கொள்கை பொதுவாக இப்பொழுது ஒப்புக்கொள்ளப்படுவதில்லை.

இயந்திரங்கள், அறிவுக்கு இடமில்லாத கடிய உட லுழைப்பிலிருந்து நம்மை விடுவித்து, பண்பாடு, கலை ஆகியவற்றை நாடிச் செய்யும் முயற்சிகளுக்கு அதிக இடம் தருமென எதிர்பார்க்கப்பட்டன. அவை மனித னின் வேலைச்சுமையைக் குறைத்திருக்கின்றன என்பதில் ஐயமில்லை; அதே நேரத்தில் அவனது சலிப்பான உழைப்பையும் ஓரளவு அதிகரித்துவிட்டன. நுணுக்க மான உழைப்புப் பங்கீட்டை அடிப்படையாகக் கொண்ட புதிய தொழில் முறை, தொழிலாளியினுடைய தொழில் திறனூக்கத்தைப் பறித்து விட்டது. மறைவுணர் நாட்டம், அழகு, பணிவு, இவற்றுக்குத் தொழிற்சாலையில் இட மில்லை. தொழில் திறன் வாய்ந்தவன் வெறும் பொறி இயக்கி ஆகிவிட்டான்; உற்பத்திப் பெருக்கத்திற்குக் கேவலம் ஒரு கருவியாகிவிட்டான். சலிப்பைத் தரும் ஓரே மாதிரியான வேலை, மனத்திற்கு இன்பம் அளிக்கா தது மட்டுமல்லாமல் உடலுக்கும் சோர்வைத் தருகிறது. திறமையான ஆக்கவேலையினால் விளைந்த அறிவு, ஒழுக் கம் இவற்றின் வளர்ச்சியினை இப்பொழுது வேறு துறை களிற் பெறமுயல்கிறோம். தொழிலாளர்கள் தங்கள் தொழிலுக்குப் புறம்பானவற்றில் மகிழ்ச்சியை நாடுகின்ற னர். அவர்கள் அதிக ஊதியமும், மிகுந்த ஓய்வும், கல்வி அறிவூட்டம், இன்பப் பொழுதுபோக்கு, இளைப்பாறல் ஆகியவற்றுக்குப் போதிய வாய்ப்புக்களும் வேண்டு கின்றனர். இத்துணை முயற்சியுடன் பெற்ற ஓய்வு நேரம் வீணான உணர்ச்சியைத் தூண்டும் வழிகளில் கழிக்கப்படு

கிறது. ஓய்வை விரட்டி ஒழிக்கவும், அன்றாட வாழ்க்கையின் உயிரற்ற வெறுமை நிலையிலிருந்து ஓரளவு தப்பவும் டைம்ஸ் ஸ்கொயர், (*The Times Square*) பிக்கடில்லி சர்க்கஸ், (*The Piccadilly Circus*) சௌரிங்கி (*The Chowringhee*) போன்றவை மிகுந்த செலவுதரும் கேளிக்கைகளை அமைக்க அல்லும் பகலும் பாடுபடுகின்றன. [1] உழைக்கும் வேளையில் நசுக்கப்பட்டோ, அடக்கப்பட்டோ கிடக்கும் உயரிய மனப்போக்குகளைத் திருப்தி செய்வதற்கு ஓய்வுநேரம் பயன்படுத்தப்படுவதில்லை. ஆகவே, உண்மையில் அது போற்றற்குரிய நன்மைதானு என ஐயுற நேரிடுகின்றது. தொழிற்சாலை வேலையாட்கள் தூய்மையற்ற சேரிகளில் வசிக்கின்றனர். கூடியாடிப் பொழுதுபோக்கும் பொது இல்லங்களிலும், கள்ளுக்கடைகளிலும் தங்கள் அறிவிற்கு வேலையின்றிக் காலத்தை வீணுக்குகின்றனர். "எங்கு உங்கள் நிதி (கருவூலம்) இருக்கிறதோ, அங்கு உங்கள் நெஞ்சமும் இருக்கும்" என்ற நிறைமொழி தனிமனிதரிடத்துப்போல் மக்கள் தொகுதிகளுக்கும் பொருந்தும். ஒரு மனிதன் எவற்றை மதிக்கிருன் என்றும், சமூகம் எவற்றை மிக உயர்வாகக் கருதுகிறது என்றும் அறிய விரும்பினுல் எவ்வாறு ஓய்வுநேரம் செலவிடப்படுகிறது என்றுமட்டும் நாம் அறிந்துகொண்டால் போதும். ஏமாந்து மனமுடைந்த மக்கள் நிலை, அஞ்சத்தக்க அளவில் எங்கும் நிலவி நமது மனமகிழ்வைக் குலைக்கிறது. ஒவ்வொரு மதமும் உழைப்பு, ஓய்வு, வழிபாடு இவை மூன்றும் மனிதனது இன்றியமையாத தேவைகள் என்று கூறுகின்றது. இணைந்து செய்

[1] வில்லியம் ஆர்ச்சர் பொருத்தமாகக் கூறுகிருர்: "சலிப்பு, சோம்பல் மிகுந்த மூளையை அல்லது ஆன்மிக உணர்வும் உற்சாகமும் இல்லாத வேலையினுல் முடமாக்கப்பட்ட மூளையை, ஆட்கொள்ளும் வெறுமை உணர்ச்சி, அயர்வு ஆகியவற்றினின்றும் தப்ப, தீய பண்பு ஒரு புகலிடமாக விளங்குகிறது." அறிவும் நன்னடத்தையும், பக்கம் 5, நல்லொழுக்கக் கல்விச் சங்கம், இலண்டன் 1916.

யும் பொதுமுயற்சியில் உழைப்பின் மூலம் ஏனைய மக்களை அறிந்துகொண்டு அவர்கள் நலத்திற்கு நாம் உதவ வேண்டும். ஓய்வின் மூலம் நாம் உரிமையுடன் சிந்திப்பதனாலும் சுய மன உறுதியினாலும் நம்மை உணர்ந்து கொள்ள வேண்டும். வழிபாட்டினால் உலகத்தை ஊடுருவி நிற்கும் ஆற்றலையும், அனைத்தினுடைய நோக்கத்தையும் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். ஆனால் சமயங்கள் எதிர்பார்ப்பதற்கு மாறாக மனிதனை மனிதனிடமிருந்து பிரிப்பதற்கும், சமூக இயல்பூக்கங்களை அழிப்பதற்குமே உழைப்பு இன்று கருவியாக இருக்கிறது. மனக்கண்களை மறைக்க ஓய்வு பயன்படுத்தப்படுகிறது. இழிவானவற்றைப் பொருட்படுத்தி ஏற்பதனால், வழிபாடு ஆன்மிகத் தன்மையின் தரத்தைக் குறைக்கப் பயன்படுகிறது. தனித்திருப்பதைப் பொறுத்துக்கொள்ள நம்மால் இயலவில்லை. உழைப்பு, ஓய்வு, வழிபாடு இவற்றில் நாம் தனித்து ஈடுபடுவது முற்றிலும் வீணெனத் தோன்றுகிறது. நாம் தொழிற்சாலைகளில் பணியாற்றியும், மக்கட் கூட்டங்களிடையே இன்பமுற்றும், கூட்டமாகக் கேளிக்கைகளில் ஈடுபட்டும், உடனிருப்போருடன் கூடிக் குற்றம் புரிந்தும், தொகுதியாக வழிபட்டும் வாழவேண்டியிருக்கிறோம். இல்லத்தில் அமைதியாக மாலை நேரத்தைக் கழித்தல், ஊர்ப்புறத்தே தனித்து உலாவுதல், ஆன்ம குணங்களை வளர்த்தல், தியானஞ் செய்தல் ஆகியவை சலிப்பைத் தருகின்றன. உண்மையில் நமது தலைமுறை உறக்கமிழந்த ஒன்றாகும். அறிவியல், புதியன ஆக்குதல் ஆகியவற்றுக்குத் தேவையே பிறப்பிடமாகும் என்பதைப் போல, கலைகளுக்கும் மெய்யறிவிற்கும், இலக்கியத்திற்கும் சமயத்திற்கும் ஓய்வு பிறப்பிடமாகும். ஆற்றல் மிக வாய்ந்ததொரு நாகரிகத்தின் கொடுங்கோன்மை மனத்தின் அறிவார்ந்த அலுவல்களுக்குப் பெரும்பாலும் இடமளிப்பதில்லை. மேலும், உண்மையான சிந்தனைக்கு இன்றியமையாதவையான இளைப்பாறுதல், பற்றின்மை,

மனதை ஒருமுகப்படுத்துதல் ஆகியவற்றிற்கு நாகரிகத்தின் கொடுங்கோன்மை பகையாகும். அறிவின் மிகுதி மதிநுட்பத்திற்குக் காரணமாகவில்லை.

மேலும், செல்வத்தை வழிபடுவோராக நம்மை இத்தொழில்யுகம் ஆக்கியிருக்கிறது. செல்வர்களாக ஆனால்தான் ஊசியின் காதில் நுழையலாம் [1] என்று நாம் உறுதியாக நம்புகிறோம். செல்வமே வீடு பேறடைய அநுமதிச் சீட்டாகும். எந்த வழியிலேனும் சென்று எதையும் எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்து வெற்றிகாணுவதே நமது குறிக்கோளாகிவிட்டது. பொங்குநற்பேற்றினால் அல்லது திறமையினால் எவனொருவன் பணம் ஈட்டுகிறானோ அவனே சமூக மதிப்பில் உயர்ந்த இடம் பெறுகிறான். தொழிற்புரட்சிக் காலத்திற்குமுன் சமூக மதிப்பை அளவிட நாம் வேறு அளவைகள் கொண்டிருந்தோம். கடவுளடியார்கள், கல்வியிற் சிறந்தோர், கவிஞர் பெருமக்கள், மெய்ப்பொருளியல் வல்லுநர் ஆகியோர் சமுதாயத்தில் உச்ச நிலையிலிருந்தனர். இலக்கியம் அல்லது ஆன்மிகத் துறையில் மேன்மை பெற்றவர், பொருட்செல்வம் பெற்றிடாவிடினும் சமூகத்தில் தலைமைதாங்கி நடத்த உரிமை கொண்டிருந்தனர். ஏழைகள் கூடத் தூய்மையுடனும் உடல் நலத்துடனும், வாழலாம் என்றிருந்த காலம் கடந்துவிட்டது. பொருளீட்டுதல் என்பது யாருக்கும் உகந்த உலகத் தொழில்களில் ஒன்றாகிவிட்டது.

தொழில் இயக்கத்தால் ஏற்பட்ட மிகக் கொடிய விளைவு இல்வாழ்க்கையின் மறைவேயாகும். அமெரிக்காவிலும், ருசியாவிலும் நாம் அதைக் காண்கிறோம். ஒவ்வொரு உறுப்பினரும் பொருளாதார விடுதலை பெற விழை

---

[1] "........ஐசுவரியவான் கடவுளுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவது எளிதென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்". இது இயேசுநாதரின் வாக்கு - மத்தேயு 19,24, மார்க்கு 10 - 25.

யும்போது குடும்பப் பிணைப்புகள் வன்மை இழக்கின்றன. ஆடவரும், பெண்டிரும் தங்கள் வீட்டிற்குப் புறத்தே பணியாற்றுகின்றனர். குழந்தைகள் வீட்டில் உறங்காதபோது பள்ளிக்கூடங்களிலே வேலை செய்வர் அல்லது உதைபந்தாடுமிடத்திலோ, திரைப்பட நிலையங்களிலோ இன்புறுவர். ருசியாவைப் பொறுத்தஅளவில் டிராட்ஸ்கி (*Trotsky*) கூறுவதைக் கேட்போம். "மாபெரும் நிகழ்ச்சிகள், உதாரணமாகப் போரும் புரட்சியும், குடும்பத்தின் பழைய உருவத்தை மாற்றியுள்ளன. கூடி வாழ்வதற்கேற்பப் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் முன்னினும் மிகுதியாக நமக்குத் தேவை. அத்தகைய நிலையிலேதான் இப்பொழுது குடும்பத்தை வருத்திச் சிதைக்கும் கடமைகளினின்றும், பொறுப்புகளினின்றும், அதனை நாம் விடுவிக்கலாம். ஆடைகளைத் தூய்மையாக்கப் பொதுச்சலவை நிலையங்கள் தேவை; உணவு அளிக்கப் பொது உணவு விடுதிகள் வேண்டும்; தையல் வேலைக்குப் பொதுத் தொழிற்சாலை தேவை. தங்கள் பணியில் உண்மையான பற்றுள்ள அரசாங்க ஆசிரியர்களால் குழந்தைகள் கற்பிக்கப் பெறவேண்டும். அப்பொழுதுதான் கணவன் மனைவி இவர்களிடையே உள்ள பிணைப்பு நேரடியாகத் தொடர்பில்லாத புற நிகழ்ச்சிகளிலிருந்தும் தற்செயலாக ஏற்படும் காரியங்களிலிருந்தும் விடுபடும். ஒருவர் மற்ருெருவர் வாழ்க்கையைக் கவர்ந்துவிடாமலிருப்பர்" என்று 'வாழ்க்கைச் சிக்கல்கள்' (*Problems of Life*) என்ற தமது நூலில் டிராட்ஸ்கி குறிப்பிடுகிருர். சுருங்கக் கூறின், இல்லம் ஆண், பெண் இருவருக்கும் ஏற்ற இடமன்று.

புதிய தேவைகளை வளர்ப்பதில் தொழில்யுகம் நம்பிக்கை கொண்டிருக்கிறது. நுகர்வோருடைய பசி, உண்பனவற்ருல் வளரும். மிகுதியாக நாடி, மிகுதியாகப் பெறுவதுதான் பொருள்துறை முன்னேற்றத்திற்கு வழி. கிளர்ந்தெழும் போட்டியினுலேயே வாழ்க்கையின் வெறுமையினின்று நம்மை மறைத்துக் கொள்ளுகிருேம். நமது

பொறியுகம் தனிமனிதனுடைய விருப்பங்களை விடுத்து மக்களின் பொதுத் தேவைகளையே நிறைவேற்றுகிறது. கலை நலிவுறுகின்றது.

## அரசியல்

குடியரசு (*Democracy*) ஒரு சோதனைக் கட்டத்தில் இருக்கிறது. அரசியல் திட்டம் என்ற முறையில் அது பொதுமக்களால் விரும்பப்படவில்லை. இத்தாலியிலும், ஸ்பெயினிலும் அது நசித்துவிட்டது. ருசியாவும், சீனுவும் அதற்கு ஆதரவு காட்டவில்லை. பொதுமக்கள் பிரதிநிதியாட்சி (*Representative Government*) ஓரளவு நிலவுகிறது என்று கருதப்படுகின்ற கிழக்கு ஐரோப்பா, தென் அமெரிக்கா ஆகிய நாடுகளின் சில பகுதிகளிலும்கூட குடியரசில் மிகுந்த அவநம்பிக்கை தென்படுகிறது. ஸ்விட்ஜர்லாந்து, ஸ்காண்டினேவியா போன்ற சிறிய நாடுகளில் தவிர மற்ற இடங்களில் உண்மையான மக்களாட்சி மலர முடியாது என பிரைஸ் பெருமகனுர் (*Lord Brice*) ஐயுறுகிருர்.

தன்முனைப்பாட்சியிலிருந்து (*autocratic rule*) விடுதலை பெற நாம் மக்களாட்சியை வரவேற்கிறேம்; ஆனால் இன்று அதன் செயல்முறை நமக்கு மனநிறைவு அளிக்கவில்லை. ஆட்சி ஒரு நுட்பமான கலை, அதில் திறமையுள்ளவர்களே ஆட்சியாளராகலாம் என்று நாம் உணரத் தொடங்கிவிட்டோம். ஆனால் இப்படித் தகுதிவாய்ந்தவர்கள் நாட்டை ஆள மக்களாட்சி செயல்முறையில் இடமளிப்பதில்லை.

அரசியல் துறையிலும்கூட இது பொறியுகம் எனலாம். மக்களாட்சி என்ற பெயரில் அதிகாரிகளை அடக்கியாளும் ஒரு சிறிய குழு மறைமுகமாக நாட்டை ஆளுகிறது. தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளுக்குச் சுயேச்சையோ, பணி தொடங்கும் உரிமையோ கிடையாது. ஏனென்றல்

அவர்கள் ஒரு பெருத்த இயந்திரத்தின் திக்கற்ற கருவிகளாவர். தாமே ஆய்ந்து கண்ட முடிவுகளையொத்தோ, சட்டசபையில் நிகழும் வாதங்களையொத்தோ, தமது தொகுதி மக்களது கருத்துக்களையொத்தோ அவ்வுறுப்பினர்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துவதில்லை. சட்டசபைகளில் நிகழும் ஆய்வு வாதங்கள் உண்மைநிலையைக் குறிக்கவில்லை; விவாதங்கள் தேவையற்றனவாய் உள்ளன; எனவே மக்களாட்சி பெயரளவில்தான் இருக்கிறது.

மக்களாட்சியின் பொதுப்பயன்கள் தனிமனிதனின் சுதந்திரத்திற்கு ஏற்ற வகையில் இல்லை. மக்களாட்சிக்குப் பெயர்பெற்ற தனித்தன்மைக் கொள்கை சிறந்து விளங்குவதாகக் கூறப்படும் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தனி மனித வாழ்க்கை ஒரு சிறிதும் பொருட்படுத்தப் பெறவில்லை. விடுதலைவாய்ந்த நாட்டில், அடிப்படைக் கொள்கையும் (*Fundamentalism*) அயல் இனத்தாரை எதிர்க்கும் இரகசியக் குழுவும் (*Ku Klux Klan*), ஆரியரல்லாத இனங்களையும் பண்பாடுகளையும் தாக்குதலும் (*Nordic assaults*) காணப்படுகின்றன. தமது கருத்துக்களுக்கு இசைய மறுக்கும் அரசியல்வாதிகளைப் பழிவாங்க மன்றங்கள் இருக்கின்றன. சோவியத் ருசியாவில் தாம் செய்ய விரும்புவதைத் தேர்ந்தெடுக்க ஒருவருக்கும் உரிமையில்லை. தொழில் திறமையே குறிக்கோளாதலால் ஒவ்வொருவரும் இயந்திரத்தில் எப்பகுதிக்குப் பொருத்தமென வழிகாட்டுவோர் சிலரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்கான பயிற்சியும் பெறுகின்றனர். அங்கே செய்கருமத்தை எண்ணித் துணியும் சுதந்திரமும் மனச்சாட்சி உகந்ததை ஏற்கும் சுதந்திரமும் இல்லை.

அறிவின்மை, கட்டுப்பாட்டுக் குறைவு, தாழ்ந்தவற்றைப் பெரிதாக மதிப்பது என்பனவற்றோடு மக்களாட்சியும் ஒன்றென மயங்கும் நிலை ஏற்பட்டுளது. நம் செய்தித்தாள்களே இதற்குச் சான்றாக இருக்கின்றன. திருமண

விலக்குகள், கொலைகள், நாட்டிய மன்றங்கள், காவல் நீதிமன்றங்கள் இவற்றைப் பற்றியே மிகுதியாகச் செய்தித் தாள்களிற் படிக்கின்ற மக்கள் கொண்ட குடியரசு மேலெழுந்தவாரியான பண்பாடு கொண்டதே எனலாம். கல்வி வாய்ப்புகள் பெருவாரியான மக்களுக்குக் கிட்டியிருந்தும் பண்பாட்டின் நிலை உயரவில்லை. கல்லூரியிற் சேர்வது மிக எளிதாகிவிட்டது, ஆனால் உண்மையான கல்வி வளர்ச்சி பெறுவது கடினமாகிவிட்டது. நமக்குப் படிக்கக் கற்றுக்கொடுக்கிறார்கள், ஆனால் சிந்திப்பதற்குப் பயிற்சி அளிக்கவில்லை. செய்தித்தாள், திரைப்படம், வானொலி முதலியவற்றின் உதவியால் பொதுமக்கள் பல்வேறு பொருள்களைப் பற்றி, நன்கு தொடர்புறாத அறிவுத் துணுக்குகளாக ஓரளவு கற்கின்றனர். பிராய்டு (*Freud*), யூங் (*Jung*) ஆகிய உளநூல் வல்லுநர் கொள்கைகள், நடத்தை வாதம் (*Behaviourism*), கருத்தடை, முதலியவற்றைப் பற்றியும் மற்றும் பலதரப்பட்ட சிறு பொருள்களைப் பற்றியும் கற்கின்றனர்; என்றாலும் இவற்றை நன்கு உளங்கொண்டார்களென்று சொல்வதற்கில்லை. கற்றுணர்ந்தோர் வாய்விட்டுப் பேச அஞ்சிப் பொது மக்களின் மனப்பான்மையோடு இசைகின்றனர். மக்களது செயல்முறைகளை உருவாக்கிவந்த மதிப்பிற்குரிய அபிப்பிராயங்கள், தொன்றுதொட்டுவந்த பழக்கங்கள் இவையகன்று அவற்றினிடத்தைச் சாதாரண மக்களின் ஆராயப்பெறாத உணர்ச்சித்தூண்டல்கள், கூட்டமன வெழுச்சிகள், வகுப்புவாத வெறுப்புணர்ச்சிகள் இவை கவர்ந்துகொண்டுவிட்டன. நம்முன் எதிர்ப்படும் சிக்கல்களை மதிப்பிட நமக்குக் காலமுமில்லை, தகுதியுமில்லை; அன்றியும் தக்கமுறையில் நோக்கும் திறமைவாய்ந்த தலைவர்களிடம் நம்பிக்கை வைக்கும் மனப்பாங்கும் நமக்கு இல்லை. பொதுமக்களே சமுதாயத்தில் மிகச் சிறப்பிடம் பெறுவர்களாதலினாலே அவர்தம் கொள்கையே ஏற்கப்படுகிறது. நன்றாகச் சிந்திக்கும் சிறுபான்மையரது

கொள்கை ஏற்கப்படுவதில்லை. விரைவாயும் தீயனவாயும் கொள்கைமீறி உணர்ச்சி வயப்பட்டனவாயுமுள்ளவை, மேன்மையான நன்கு ஆராயப்பட்ட கொள்கைகளைத் தொடர்ந்து வெளியேற்றுகின்றன. பொருளாதாரத் துறையிலுள்ள கிரஷாம் விதிபோல் (*Gresham's Law*) இது மனத்துறையில் ஒரு விதி எனலாம்.

எண்ணங்கள் நம்பிக்கைகள் இவற்றை ஒருபடியாக்கும் தன்மை குடியரசு நாடுகளெங்கும் நிலவிவருகிறது. நமது உள்ளங்கள் இயந்திரம்போல் இயங்குகின்றன. உள்ளத்தை இவ்வாறு இயந்திர நிலைக்கு உள்ளாக்குவது படைப்பு வேலைக்கெல்லாம் அழிவு கோலுவதாகும். மிக உயர்ந்த கற்பனைகள், குறித்த ஒரு முறையில் சிந்தனை செய்வதன் பயனால் விளைந்தவையல்ல. ஆனால் மக்களில் மேம்பட்டோரது நுண்மாண் நுழைபுலத்தினாலும், கடினமான சிந்தனையாலும், தனித்திருந்து மேற்கொண்ட தியானத்தாலும் ஏற்பட்டவை. முரண்பட்டதுபோற் காணப்படினும் செயல்முறையில் மக்களாட்சி அதற்கு மாறாகவே இயங்கிவருகிறது. மக்களாட்சியின் மையக் கருத்து தனிமனிதனுக்கு மதிப்பு கொடுத்தலே. "மனிதா, நீ நீயாக இரு" என்றார் இப்ஸன் (*Ibsen*). சற்றேறக் குறைய வழக்கமான முறை ஒன்றைக் கடைப்பிடிக்கும்படி நமது குடியரசுகள் நம்மை வற்புறுத்துகின்றன. இதனால் அகவாழ்க்கைக்கே குந்தகம் விளைந்துவிடுமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது. நாம் அனைவரும் நமது கருத்துக்களில் ஒத்துப்போகத் தொடங்கினால் சிந்தனையில் முன்னேற்றம் இருக்கமுடியாது.

பொருளாதாரத் துறையில் இத்துணை ஏற்றத்தாழ்வுகள் இருக்கையில் அரசியலில் ஒத்தநிலை அடைய முடியாது. மேலும் சிறந்ததொரு சமூக அமைப்பை நிலைநிறுத்தும்பொருட்டு தொழில் (*labour*), கூட்டுடைமை (*socialist*), பொதுவுடைமை (*communist*) முதலிய இயக்கங்கள் அரசாங்கத்தையும் அதன் ஆள்வினை அமைப்புகளை

யும் (*machinery of state*) கைப்பற்ற முயலுகின்றன. ஆகவே தேசீயத்தடைகள் தகர்க்கப்பட்டுத் தொழிலாளி-முதலாளியென்னும் வகுப்புப் பகைகள் வலியுறுத்தப்படுகின்றன. நாட்டுப்பற்று சுயநலங் கருதும் இடைநிலை வகுப்பினரின் மனப்பான்மையாகும். தொழிலாளரிடையே தேசீய நலங்களென நிலவும் தவருன எண்ணப் பிணைப்புகளைத் தகர்த்தெறியவேண்டும். "எனது நாடே எனது வகுப்பு" என்று பொதுவுடைமை வாதி (*bolshevist*) கூறுகின்ருன். வகுப்புப் பகைகள் ஒழிக்கப்படும்வரையில் உண்மையான மக்களாட்சி இருக்கமுடியாது.

ஒரு மக்கள் தொகுதியின் அரசியல் வாழ்க்கை அதன் உறுப்பினர்களில் எவ்வளவுபேர் தன்வயத்தராய் எண்ணித் துணிகின்றனரோ அவர்களது எண்ணிக்கையைச் சார்ந்தது. ஒரு சமூகத்தின் நலத்திற்குத் தங்குதடையற்ற சிந்தனையும் செயலும் இன்றியமையாதவை. ஆனல் இப்போதைய அமைப்பில் இவற்றைப் பெறமுடியாது. மனித வாழ்க்கைமுறைகளை நடத்த, குலுக்குச் சீட்டுப் போன்ற தேர்தல் பெட்டியைவிடச் சிறந்ததொரு வழியைப் பெற நாம் முயலவேண்டும்.

## சர்வதேச உறவுகள்

மனித சமுதாயத்தினிடம் மாருத அன்பு கொண்டவருக்கு இன்றைய உலக நிலைமை ஊக்கம் அளிக்காது. நாடுகள் அமைதியைப் பற்றிப் பேசுகின்றன ; ஆனல் போருக்கு ஆயத்தங்கள் செய்கின்றன. போரிடத் தூண்டும் மனப்பான்மையை அவை விட்டுவிடத் தயாரில்லை. இருப்பினும் மற்றவர்களைப்போல் தாங்கள் கெட்டவர்களாக இல்லை என்று கடவுளுக்கு நன்றி செய்கின்றனர். தாங்கள் எந்த இனத்தைச் சேர நேர்ந்திருக்கின்றனரோ அதுவே மிக்க தூய்மையும், சிறப்பும் வாய்ந்தது என்றும், தாங்கள் எந்த மதத்தில் தோன்றினரோ அதுவே உலகம்

உய்யும் வழி என்றும், தமது நாட்டவரே மனித சமுதாயத்திற்குத் தலைமைபூணத் தக்கவரென்றும் அவர்கள் உறுதியாக நம்புகின்றனர். கொடிகளைப் பறக்கவிடுதல், கொம்பூதுதல், நாட்டுப்பற்றுப் பாடல்கள், பகையுணர்ச்சிப் பாக்கள் ஆகியவை மூலம் குழவிப் பருவத்திலிருந்து நாம் தேசீயச் செருக்கை வளர்க்கிறோம். கடந்த போரில் பங்குகொண்ட ஒவ்வொரு நாடும் தான்மட்டில் நாகரிகத்தைக் காக்கப் போரில் ஈடுபட்டதாகச் சொல்லிக்கொண்டது. அதன் பெயரால் ஒவ்வொரு நாடும் எதையும் சரியெனத் துணிந்தது; படுகொலையும் பேரழிவும் உட்பட எல்லாவற்றையும் மன்னித்துவிட்டது. ஒரு வேட்டை நாய் எப்படிக் கொடூரமாயும் பயங்கரமாயும் குள்ளநரியை வேட்டையாடிக் கொல்லுமோ, அவ்வாறு தன்னை விலங்காக்கிக் கொண்டு மனிதன் தனது உடன்பிறப்பாளனைத் தாக்கிக் கொல்ல முயல்வதற்கு முன்னர்ப் பகைமைத் தீயாலும் வெற்றி வேட்கையாலும் அவனது உயரியல்பு எரிக்கப்பட்டுவிடுகிறது. அரைகுறை உண்மைகள், பொய்கள் இவற்றை மிக்க திறமையுடன் பரப்புவதன் மூலமாயும் இடையறாது பிறநாடுகளையும் அவற்றின் பண்பாடுகளையும் பற்றித் தவறுகப் பேசுவதன் மூலமாயும் மக்கள், காட்டுமனப்பான்மைக்குத் (*temper of the jungle*) தூண்டிவிடப்படுகின்றனர். எத்துணைத் திறமையுடனும், எந்த நோக்கத்துடனும் ஸீஸரது இரத்தக் கறைபட்ட போர்வையை ஆண்டனி (*Antony*) எடுத்துக்காட்டினாரோ, அதே திறமையுடனும், நோக்கத்துடனும் சில தெருப் பேச்சாளர்கள், கதைகளையும் நிகழ்ச்சிகளையும் பயன்படுத்துகிறார்கள். "ஆ என்ன வருந்தத்தக்க காட்சி! குருதிக் கறை! கொடுமை! பழிவாங்குங்கள்! கொளுத்துங்கள்! தீ வையுங்கள்! கொல்லுங்கள்! வெட்டுங்கள்!" படை அணிவகுப்பின் சிறப்பைக் கண்டுகளிக்கத் தன்னை அழைத்துச்சென்ற ஹைனிடம் (*Heine*) அவரது இளம் புதல்வன் "இப்போர் மறவர்கள் முன்பு மனிதராக

இருந்தவர்கள்தானே" என்று கூறியது எத்துணை உண்மை! அவர்களுக்கு இப்பொழுது எண்ணித்துணியும் உரிமையில்லை, ஆன்மா இல்லை. நம்பிக்கை அற்ற நிலையில் எந்த இயந்திரத்தின் பகுதிகளாக இருக்கின்றனரோ அதன்முன்னர்த் தலைகுனிவதுடன் அதை ஏறக்குறைய மனமொப்பி வழிபடுவர். பகுத்தறிவுள்ள மக்கள் மனவுறுதியற்ற அடிமைகளாக்கப்படுகின்றனர். போர் முரசு முழங்குகையில் நாகரிகப் போர்வை விலகுகிறது. மனிதன் வேறு வழியின்றி விலங்கு நிலைக்கு மீள்கிறான். பாழாக்கப்பட்ட புலங்கள், அழிக்கப்பட்ட நகரங்கள், கோடிக்கணக்கில் இறந்தவர்கள், அதற்குமேல் பல்கோடி முடவர்கள், காயம்பட்டவர்கள், மனமுடைந்த மாதர், தூய்மையிழந்த பெண்டிர், இயற்கையான ஆதரவிழந்து பசிப்பிணி வாய்ப்பட்ட குழந்தைகள், வெறுப்பு, சூழ்ச்சி ஆகியவை நிறைந்த சூழ்நிலை, இவைகளை உடன் கொண்டுவரும் போர், மனிதத் தன்மைக்கே இழிவு தருவதாகும். இப் பேயாட்டத்தை நாம் வெறுக்காதவரையில் நாம் நாகரிகமானவர்களெனச் சொல்லிக்கொள்ள முடியாது. விசைத் துப்பாக்கிகளால் மக்களைத் திரள் திரளாய் வீழ்த்தித்தள்ளவும், முதியோர், வலிமையற்றோர், பெண்டிர், குழந்தைகள் உட்பட போரிற் பங்குபெறாதவர்களையும் நஞ்சுக்கிரையாக்கவும் முன்வருகிறோம். இவையனைத்தும் எதற்காக? கடவுளின் மேன்மைக்காகவா? நாட்டின் பெருமைக்காகவா? இழிவு! இந்நிலையில் விலங்கினத்திற்கு உறுகண் செய்தலைத் தடுப்பது, நோயாளிகளுக்கு மருத்துவ மனைகள் கட்டுவது, திக்கற்றவர்களுக்கு ஏழை விடுதிகள் கட்டுவது என்பன போன்றவற்றால் பயனேதுமில்லை.

போரை நம்மால் தடுக்க இயலவில்லை. ஆகவே அதைக் கட்டுப்பாடு செய்ய முயலுகின்றோம்; ஆனால் இம்முயற்சி வெற்றிபெற முடியாது. ஏனென்றால், போர் என்பது எதிர்த்து நிற்கும் இரு நாடுகளுக்கிடையே உள்ள

பிளவு மனப்பான்மையின் அடையாளம். இப்பூசல் வலிமையினுல் தீர்க்கப்பட வேண்டியதொன்ருகும். எதிர்ப்பை அடக்க வன்முறையே ஏற்றவழி என்று விலங்கு வலிமைக்கு இடங்கொடுத்தால், வலிமைகளுள் ஒன்றிற்கொன்று உயர்வுதாழ்வுடையது எதுவெனக் கூறமுடியாது. நம்மிடத்தேயுள்ள எல்லா வலிமையையும் திரட்டியே எதிர்ப்பை அடக்கவேண்டும். தடிக்கும், கத்திக்கும், அல்லது வெடிமருந்துக்கும் விஷப்புகைக்கும் உண்மையில் வேறுபாடு இல்லை. எதிர்ப்பை அடக்க இதுவே யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட முறை என்றிருக்கும் வரையில் ஒவ்வொரு நாடும் அழிக்கும் கருவிகளை மேன்மேலும் திறமுடையவையாகவே செய்யும். போர் ஒன்றே பிளவை ஒழிக்க ஏற்றவழியாகும். வெற்றிபெறுவதே அதன் மிக உயர்ந்த அறமாகும். ஒவ்வொரு நாடும் பயங்கரமும், கொடூரமும் நிறைந்த இவ் வழியிலேயே நடந்தாகவேண்டும். போரை ஒப்புக்கொண்டு அதன் முறைகளை மட்டும் கண்டிப்பது, ஓநாயை ஆட்டுக்குட்டியைத் தின்ன அனுமதித்து அது உண்ணும்போது கடைப்பிடிக்க வேண்டிய முறைகளைக் கடைப்பிடிக்கவில்லை, என்று சொல்வதைப்போல் இருக்கிறது. போர் போர்தான்; விதிமுறைகளை ஒட்டி விளையாடவேண்டிய விளையாட்டு அன்று.

உண்மையில் சர்வதேச உணர்ச்சி வளர்ந்து வருகிறது. போரினுல் இலாபமில்லை என்று பொருளாதார வல்லுநர் கூறுகின்றனர். அது பயனற்ற தொழில். இருந்தாலும் கொள்கைக்காக நம்மில் சிலர் சமாதானவாதிகளாகிருேமே யன்றி நம்பிக்கையாலல்ல. சர்வதேச உணர்ச்சி உள்ளத்தின் ஆழத்திலிருப்பதில்லை, வெளித்தோலோடு நின்றுவிடுகிறது. கடந்த போரில் ஒவ்வொரு நாட்டிலும் அதன் கொள்கைக்கென வைராக்கியமுடன் வாழ்ந்த ஒரு சிலரைத்தவிர மற்றவர்கள் மனிதத்தன்மையை நாட்டின் பலிபீடத்தில் வீணே பலியிட்டனர்.

சமயத் தலைமையில் இருந்தவர்கள்கூட "கடவுளுக்காக கோயில் கட்டி, ஆனால் அவர் சொல்லை இகழ்ந்து புறக் கணித்த" மெபிஸ்டோபில்ஸ் (*Mephistopheles*) என்பவரது குழாத்தினைச் சார்ந்தவரெனவே தங்களைக் காட்டிக் கொண்டனர். மாதா கோயில்கள் போருக்குப் படை திரட்டும் நிலையங்களாக மாறின. எல்லாத் திசைகளி னின்றும் எல்லாம்வல்ல இறைவனுக்கு ஆர்வத்துடன் விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள் கடவுளையே குழப்பத் திற்கு உள்ளாக்கியிருக்கவேண்டும். இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தோரது மனநிலையை ஜே. சி. ஸ்கொயர் (*J. C. Squire*) என்பவரின் பின்வரும் பாட்டு நன்கு சித்தரிக்கிறது.

*செங்குருதி சொட்டுகின்ற போர்க்களத்தில்*
*சந்தித்த தேசத்தார் முழக்கம் செய்தார்*
*"இங்கிலாந்து தேயத்தை முற்றுகைசெய்*
*இறைவா" "எம் அரசைக்காப் பாய் தேவா"*
*இதைச் செய்க, அதைச்செய்க, பிறசெய்க*
*எனுங்குரல் கேட்டு, "ஏ அப்பா! யானியற்றும்*
*எழிற் பணிகள் பலபுரிதல் உரைத்த தென்ன"*
*இறைவன்றன் தனக்குள்ளே சொல்லிக்*
*கொண்டான்.*

நமக்கொரு சர்வதேச சங்கம் இருப்பது உண்மை தான். ஆனால் அது வெறும் இயந்திரமேற்கூடு. இனித் தான் அவ்வுடலில் உயிர் வளரவேண்டும். எங்கும் தீய எண்ணமும் நம்பிக்கையின்மையும் பரவியுள்ளன. சர்வ தேச உணர்ச்சி ஒருசிலரால் மட்டும் பேணப்படுகிற கருத்தாக இருக்கிறதே தவிர, பொது மக்களின் மனோ தர்மமாக அது இன்னும் ஆகவில்லை. சமாதானத்திற்குப் பின் பத்தாண்டுகள் கடந்துவிட்டன. எனினும் போர் மேகங்கள் சூழ்ந்திருந்த 1914-ம் ஆண்டு ஆகஸ்டு திங் களைக்காட்டிலும் இன்றும் வானம் தெளிவாக இல்லை.

ஐரோப்பாவில் போருக்கு முன்னிருந்ததைவிடப் பத்து இலட்சம் பேர்கள் அதிமாகப் படைவீரர்களாக இருக்கிறார்கள். மக்களிடையே போர்களை வளர்க்கும் மனப்பான்மையான தாமே மேம்பட்டவர் என்ற உணர்ச்சியையும், தமக்கே உலகத்தை உய்விக்கும் பொறுப்பளித்தும் என்ற அகந்தையையும் குறைக்க எந்த நாடும் கவலைகொள்ளவில்லை. ஒவ்வொரு நாடும் "நாமே தேர்ந்தெடுக்கப்பட்டவர்" என்று கூறுகின்றது. "ஒரு குடிமகன் தன் நாட்டிற்கு மட்டும் சிறப்பாகக் காட்டக் கடமைப்பட்டவற்றை மற்றப் பிறநாடுகளுடன் பகிர்ந்துகொள்வது ஒழுங்கீனமும் அவமதிப்புமாகும். இது கணவனொருவன் தன் மனைவிக்கே உரித்தான அன்பை வெறொருத்தியுடன் பகிர்ந்துகொள்வதற்கு ஒப்பாகும்," என்று வலியுறுத்திக் கூறுகிறார் தியோடார் ரூஸ்வெல்டு (*Theodore Roosevelt*). இந்தக் கருத்தைப் பின்பற்றுபவனே நாட்டுப் பற்றுடையவனாக மதிக்கப்படுகிறான். நாடுகளிடையே பகைமையும் பேராசையும் இருக்கும்போது சமாதானம் வெறும் தாற்காலிக ஒப்பந்தமே.

எதிலும் நம்பிக்கையற்றுக் குற்றமே காணும் மாக்கியவெல்லியின் (*Machiavelli, an Italian Political Philosopher of the 16th century*) கோட்பாடுகளே அரசாங்கத்தின் கொள்கைகளை ஆளுகின்றன. நாடுகள் தன்னலங்கருதாது ஒத்துழைக்க மனங்கொள்ளவில்லை. மாறாக, தன்னலங் கருதிப் பிறர்மேல் ஆதிக்கம் செலுத்தவே முற்படுகின்றன.

# 3. பிரச்சினை

பரந்த பொருளில் நோக்குமிடத்துத் தத்துவம், மெய்ப்பொருளறிவு என்பது நாகரிகமெனும் அமைப்பின் அடிப்படையாகும். அந்த அடிப்படை எளிதில் புலப் படாததாகும். தத்துவம் தனக்குத்தானே மெல்ல மெல்ல ஓர் உடலை அமைத்துக்கொள்ளும் உயிர் எனலாம். ஒரு சமுதாயத்தின் ஒழுங்குபடுத்தப்பட்ட பழக்கங்களும் நிறு வனங்களும் அச் சமுதாயத்தின் உறுப்பினர் சீரியவை யெனத் தேர்ந்த நலன்களை அடைவதற்கும், வாழ்க்கை யின் குறிக்கோளையும் பயனையும் உணர்வதற்கும் உதவு கின்றன. நாம் ஒரு நாகரிகத்தைப் பாராட்டுகிற பொழுதோ, கண்டிக்கிறபொழுதோ அதன் தரவரிசைகளை மனதிற்கொண்டே அவ்வாறு செய்கிறோம்.

தனிமனிதன், அண்டத்தின் ஒரு சிறு வடிவம் என்று இந்திய தத்துவ வல்லுநரும், கிரேக்க அறிஞரும் ஒருமன தாகக் கூறுகின்றனர். மனிதனுக்கு உலோகங்களைப் போல் நிறையும் அளவும் கொண்ட உடலும், தாவரங் களைப்போல் அமைப்பும் கட்டுப்பாடும் உண்டு; விலங்கு களைப் போன்று உணர்ச்சியும் இயக்கமும் உண்டு; இவை தவிர அவனுக்குப் பகுத்தறிவும் ஆன்மிக நாட்டமும் உண்டு. பொதுவாகக் கூறுமிடத்து ஒரு மனிதனை உடல், உள்ளம், ஆன்மா இவைகளின் முக்கூட்டு (*Trinity*) என லாம். மனிதக்குரங்கின் உடல்நிலையினின்றும் பெரிதும் வேறுபடாத நமது உடல்நிலை, விலங்குகள் தாவரம் இவைகளின் மரபில் நாம் தோன்றினோம் என்பதற்குச் சான்றுகின்றது.

சிம்பான்சி என்ற ஒருவகைக் குரங்கின் மூளையிலே காணப்படாத எவ்விதப் புதிய அமைப்பையும் மனிதனது மூளையில் நாம் காணவில்லை என்று பேராசிரியர் எலியட்

ஸ்மித் (*Professor Elliot Smith*) கூறுகிருர். நம் உடன் பிறந்த சோம்பலும், வீணே உண்டு கிடத்தலும், இடப் பற்றும், சினம், அச்சம் முதலிய வலிய உணர்ச்சிகளின் வயப்படுதல் ஆகிய நம் மனத்தின் இயல்புகளும் நாம் விலங்கு உலகத்தோடு உறவுகொண்டவர்கள் என்பதைக் காட்டுகின்றன. காணுதவற்றில் நமக்கு உள்ள வேட்கை, ஆன்மிக விழைவு, துணிவுச்செயல், நம்மை நாம் உயர்த்திக்கொள்ள மேற்கொள்ளும் முயற்சி இவைகளும் மனிதத் தன்மையின் உண்மையான கூறுகளாகும். இவைகளே நமது புராணங்களுக்கும், தத்துவ சாத்திரங்களுக்கும், சமயங்களுக்கும், கலைகளுக்கும் காரணமானவை. மனிதனுடைய பரிணமம் (*human evolution*) முழுவதிலும் நமது பாரமார்த்திக விருப்பங்கள் விடாது தொடர்ந்துவந்து, இழிந்த மூட நம்பிக்கைகள், எதனையும், உயிருள்ளதென்று வழிபடுதல் (*animism*), கட்டுக்கதைகள், செம்மையும் விரிவுமுடைய தத்துவக்கொள்கைகள், இக்கால ஒழுக்கப் பண்பாடுகள் எனப் பல்வேறு உருவங்களில் வெளிப்பட்டிருக்கின்றன.

விலங்குப் பரம்பரையினின்றும் வழிவழியாக நாம் பெற்றவையெனக் கருதக்கூடிய இயல்புகள் பற்பல நம்மிடையே காணக் கிடக்கின்றன. எனினும் மனிதன், மனிதன் என்ற முறையில் விலங்குகளின்றும் வேறுபட்டவனே. நமது தீய குணங்களும், தூய குணங்களும் சிறப்பான முறையில் மனிதனுக்கே உரியவை. புலன்கள் வாயிலாகப்பெறும் இன்பமே வாழ்க்கையின் குறிக்கோள் என நாம் கருதும்போது மக்களாகக் கருதப்படாது பெரும்பாலும் விலங்காகவே கூறப்படுவோம். ஆனல், இன்பத்தை வாழ்க்கையின் குறிக்கோளாக அமைத்துக்கொண்டு, அதை மனிதன் நாடுவதுபோல் எந்த விலங்கும் நாட இயலாது. மேலும் விலங்குகள் மனிதனைவிட மிகச் சிறந்த முறையில் நடந்துகொள்ளும் சமயங்களும் உண்டு. சில செயல்கள் விலங்குகளுக்கு

இயற்கையானவை; அவைகளை மனிதன் எண்ணித் துணிந்த முயற்சியாலும், கட்டொழுங்கிற்கு உட்படுவ தாலும்தான் அடைகிறான். விலங்குகள் காம உணர்ச்சியை இனப்பெருக்கின் பொருட்டே பயன்படுத்துகின்றன. இவ் வகையில் காட்டுமிராண்டியும் ஆதிமனிதனும் விலங்கினை மிகுதியாக ஒத்தவர்கள். இயற்கையான சிந்தனைத்திற னும், சிறந்ததெனத் தோன்றுவதைத் தேர்ந்தெடுக்கும் ஆற்றலும் நமக்கு உண்டு. இவற்றால் விலங்குகளின் மரபை அடிப்படையாகக்கொண்டு வீரத்தின் உச்சியைப் பிடிக்கவோ கீழான நிலையில் விழவோ பெருத்த வாய்ப் புக்களைப் பெறுகிறோம். மனிதனுக்கும் விலங்கிற்கும் பொதுவான தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள மனிதன் தன் இச்சையைத் தவறாகப் பயன்படுத்துகிறான். மனிதன் விலங்கு நிலைக்கு இறங்குகிறான் என்று இதைத்தான் அணிமுறையிற் கூறுகிறோம்.

நம்மிடத்தில் இருக்கும் விலங்குத் தன்மை எப்பொழு தும் அதன் போக்கிலே செல்ல முயன்றுகொண்டிருக்கிறது. விலங்குணர்ச்சி ஒவ்வொன்றும் முழுதும் நிறைவேறும் போது விலங்குத் தன்மையின் வளர்ச்சியையும் அதன் நிறைவையும் காணலாம். ஆன்மாவை உடலென்றும் வாழ்க்கையின் நோக்கத்தை உடலின் வளர்ச்சியென்றுமே நாம் கருதினால், விலங்கு வலிமையைப் போற்றி உணர்ச்சி களை நிறைவேற்றுவதையே சிறந்ததெனக் கொண்டாடும் காட்டுமிராண்டிகளெனப்படுவோம். இவ்வாறு உடலை மட்டுமே தனித்து வளர்க்கும் பண்பு, ஆன்மாவைத் தாழ்த்தி அதன் உரிமைகளைப் பறித்துக்கொள்வதாகும். உடற்சக்திக்குத் தலைமை அளித்து அதை வளர்ப்பது, காட்டுமிராண்டித் தனத்தின் சிறப்பான அடையாளம். அத்தகைய சமூகத்தில் ஆண்கள் பெண்களை இழிவாக்கி அவர்களைத் தங்கள் நலத்திற்குப் பயன்படுத்துகின்ற னர். ஏனெனில் பெண்கள் உடல்வலிமையில் குறைந்த வர்கள். அவர்களுங்கூட விலங்கு வலிமைக்கு மதிப்

பளித்து அதன் நிறைவுக்கு இசைந்து வீரமும் தோள்வலி யும் படைவன்மையும் கொண்ட சிறந்தவர்களையே தேர்ந் தெடுக்கின்றனர்.

உயிருக்கும் உடலுக்கும் மேலாக உள்ளத்திற்குச் சிறப்பிடம்தரும் சமுதாயம், மேன்மையான இடம் பெறு கிறது. ஆனால் உள்ளம் என்பதைப் பரந்த கருத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். அழகுணர்வின் வளர்ச்சி, அறநெறி நிறைவு இவை அடங்கியதாகக் கொள்ளவேண் டும்; உள்ளம் என்பதை ஆன்மா என்பதோடு ஒத்த தெனக் கருதாதவரையில் நாகரிகத்தின் குறிக்கோளை நாம் அடையவில்லை யெனலாம். நமது அறிவு வளர்ந் திருக்கலாம்; ஆனால் அது உயர்வான ஆன்மிக நோக்கங் களுக்குப் பயன்படுத்தப் பெருமல், உயிர் உடல் இவை களின் காப்பிற்காகவே பயன்படுத்தப்படுகிறது. படிப் படியாக மிகுந்துவரும் தேவைகளை நிறைவு செய்வதில் தோன்றும் ஆசையும், உடைமைகளைப் பெருக்குவதில் உண்டாகும் நாட்டமும் நமது வாழ்க்கையை ஆளுகின் றன. மனத்துறையில் இப்போதுள்ள வாழ்க்கை, தாழ்ந்த நிலையில் உள்ளது. மனவெழுச்சிகளின் தூண்டல்களும், அறிவின் உணர்ச்சிகளும் அருங்கலைச் செயல்களும், மனக்கிளர்ச்சிகளும் நம்மைக் கவர்கின்றன; ஆனால் சிறந்த இலக்கியம், உயர்ந்த கலை இவைகளின் ஆழ்ந்த சுவை நம்மைக் கவர்வதில்லை. அறிவைத் தூண்டாத கதை அமைப்புக்கள், துப்பறியும் கதைகள், குறுக்கெழுத் துப் போட்டிகள் ஆகியவை நம்மைத் தம்பால் இழுத்து இன்புறுத்துகின்றன. இந்த இரண்டாந்தரமான சமுதா யத்தைச் சேர்ந்த ஒருவன் தானகச் சிந்திப்பதில்லை. ஆனல் பழக்க முறையிலும் அறிவற்ற வகையிலும் செய லாற்றுவான். அவனது ஒழுக்கநிலை பண்படாமலும் நன்கு வளராமலுமிருப்ப தன்றி விருப்பு வெறுப்புக்களும், அழுக் காறுகளும், முன்கூட்டியே கொண்ட எண்ணங்களும் நிறைந்த ஒரு தொகுதியாக இருக்கும். பழங்கோட்பாடு

களைக் கைக்கொள்வதன் வாயிலாகத் தன் வாழ்க்கையை உருவாக்கிக்கொண்டு இன்பமாயும், பகட்டாயும் உள்ள வாழ்க்கையைத் தவிர வேறொரு குறிக்கோளை அவன் நாடுவதில்லை. பொருளாதாரப் போட்டிகளில் வெல்வதற்குத் தகுதியாக்குகின்ற பயனைக்கொண்டே கல்வி மதிக்கப்படுகிறது. பயனுள்ள அறிவிற்காகவும், இன்பத்திற்காகவும், வசதிகளுக்காகவும், ஒழுங்குபடுத்தும் ஆற்றலுக்காகவும், பொருட்பெருக்கத்தின் பொருட்டுப் பொறிகளை வகுத்துத் தரக்கூடிய திறமைக்காகவுமே அறிவியல் நம்மால் மதிக்கப்படுகிறது.

புறப்பொருள்களை ஈட்டுதல் மனிதன் உளப்பண்பை ஏற்படுத்தாது. போர்கள் இன்னும் நடைபெறுகின்றன; ஆனால் அவை இனி மக்களது தோள்வலி பற்றிய சோதனைகள் ஆகாமல் இயந்திரங்களின் உதவியால் நடைபெறுவனவாகும். உடன் பிறந்தவர்களாக இல்லாமல் இப்போர்களால் நாம் ஒன்றையொன்று கொன்றுதின்னும் விலங்குகள்போல் ஆகிறோம். நமது தந்நலம் கட்டுப்படாத வரையில், நாம் மிக இன்னாதவர்களாவோம். ஏன் எனில் தீங்கு விளைவிக்கும் நமது ஆற்றல் ஆயிரமடங்காக மிகுந்திருக்கிறது. பண்டைய முறைகளுக்கு ஆட்பட்டு விட்டோம். ஆதலால் அடிமை மனப்பான்மை கொண்டவர்களாக இருக்கிறோம். தமது கொள்கைகளையே முற்றிலும் உண்மையென்றோ அல்லது தமது பண்பே உயர்ந்த தென்றோ ஒரு மக்கள் தொகுதி நம்பும் வரையில் அத் தொகுதியில் உள்ள ஒவ்வொருவனும் அவைகளின் பொருட்டுப் போரிடத் தயாராக இருக்கிறான். விலங்கு வலிமையில் வைத்த நம்பிக்கைதான் வாழ்க்கையில் முதலிடம் பெறுகிறது. இதற்குச் சமயத் தொடர்பான கொடுஞ்செயல்களின் வரலாறே சான்றாகின்றது. இத் தகைய சமூகத்தில் உயர்ந்த பண்புடைய மக்கள் சிலர் தோன்றுதல் கூடும். அவர்கள், மனித குலத்தின் இறுதி நோக்கம் 'அன்பே கடவுள்' என்ற கொள்கையுடைய ஓர்

உலகக் குடும்பத்தை உருவாக்குதல் என்றும், மனித சமுதாயத்தின் நலத்தையே விரும்பிப் பேணுமாறு மக்களை இனிய முறையில் திருப்பவேண்டும் என்றும், முரட்டு வலிமையை நீக்கவேண்டும் என்றும் எண்ணுவர். அவர்கள் தவருன கொள்கையினர் என்று கருதப்படுவர்; புரட்சிக்காரர் போன்று நடத்தப்படுவர். சமூகம் அவர்களை விரைவில் ஒழித்துவிடும். கோழைகள் அச்சத்திஞல் அடங்கி நடப்பர். பிணங்குவோர் அழிக்கப்படுவர். சமூகத்தின் இத்தகைய நிலை பொருளாதாரத்துறையிலும் அறிவுத்துறையிலும் காட்டுமிராண்டிப் போக்குடையதாகும். ஏனெனில், இச் சமூகம் வாழ்க்கை வசதிகளையே நாகரிகமென்றும், தொன்றுதொட்டுவரும் பழக்கங்களை அறநெறி என்றும், வழக்கமுறைகளை சமயக் கோட்பாடுகளென்றும், தொழில், சுரண்டல், விற்பனையிடங்காணல் ஆகியவற்றை அரசியல் என்றும் கருதிக் குழப்புகிறது.

உள்ளம் ஆன்மா இவைகளைப் பற்றிய உயர்ந்த மானிடக் குறிக்கோளைப் புறக்கணித்து, உயிரையும் உடலையும் பேணி, உடல் வாழ்க்கையையும் அறிவியல்-பொறியியல் ஆக்கத்திறமையையுமே பெரிதெனக்கொண்டு பொழுதைக் கழிக்கும் சமுதாயம் உண்மையில் நாகரிகம் அடைந்தது அன்று. உடலும் உள்ளமும் ஆன்மாவும் ஒரு பிரிவற்ற தொகுதியில் அடங்கிய வேறுபட்ட பகுதிகள்; இவையெல்லாம் ஒன்ருக இயைந்துள்ளதே மனித இயல்பு. மேற்குறிப்பிட்ட மூன்று கூறுகளையும் இணைப்பதே நாகரிகத்தின் உண்மையான நோக்கம். அவற்றிடையே உள்ள முரண்பாடும் பொருந்தாமையும் வருந்தத்தக்கன அல்ல; அவற்றை வென்று ஒழுங்குபடுத்துதல் வேண்டும். சீரிய உடல்நிலையும், நோயின்மையும் நிறை மனிதத் தன்மைக்குத் தேவை; போதிய பொருளாதார அமைப்பு நல்ல வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும்; ஆஞல் இவைமட்டுமே முடிந்த தனிக் குறிக்கோள்கள்

அல்ல. நன்மையையும், அழகையும், உண்மையையும் நாடி, நிறைவுபெற்ற விலங்குத்தன்மையில் திருப்தி கொள்ளாத மனிதரை உண்டாக்குவதில் உலகம் மிகுந்த துன்பத்தையும், கடிய முயற்சியையும் ஏற்றிருக்கிறது. அரைகுறை நாகரிகத்திற்கும் முழுநாகரிகத்திற்கும் இடையேயுள்ள வேற்றுமை மிகப்பெரிது; தற்காப்பு, தன்னெடுப்பு, தன்னிறைவு ஆகிய விலங்குணர்ச்சிக்குட்பட்ட குறுகிய தன்னலத்திற்கும் பிறர் நலம்பேணும் பரந்த மனப்பான்மைக்கும் உள்ள தொலைவைப் போன்றது அது. தன்னலத்தைஅகற்றிப் பொதுநலம் மேற்கொள்ளுதலும், நமது அன்ருட வாழ்க்கையை என்றும் நிலையான நோக்கத்துடன் இணைப்பதும் நம்மை உண்மை மனிதராக்கும். இம்முயற்சி எளிதன்று, மிகக் கடினமானது. ஆனுல் நமது முழு ஆற்றலையும் இப் பொது நலத்திற்குத் திருப்பியமைத்தவுடன் கடமை எளிதாகி வாழ்க்கைச்சுமை குறைகிறது. அந்நிலையில் ஒருபுதுவகையான வாழ்வும் ஒரு புதிய உயர்ந்த உணர்வும் தோன்றும். பழைய நிலைக்கும் இப் புதிய நிலைக்கும் உள்ள வேற்றுமை விலங்கு வாழ்க்கைக்கும் உணர்வுக்கும், மனித வாழ்வு, உணர்வு இவற்றுக்கும் உள்ள வேற்றுமையை ஒத்தது.

மனித இனத்தின் வரலாற்றில் முழுமையான காட்டுமிராண்டித்தனத்திற்கோ நிறைவுபெற்ற நாகரிகத்திற்கோ எடுத்துக்காட்டுகள் இல்லை. எந்தச் சமுதாயமும் முற்றிலும் காண்டுமிராண்டித்தனமாகவோ, முழுவதும் நாகரிகமானதாகவோ இருந்ததில்லை. எந்தச் சமுதாயமும் தன் முழுநெறி முறையையோ சமயச் சடங்குகளையோ சமூக அமைப்புக்களையோ வளர்க்கத் தவறவில்லை. நேர்மைக்கும் நேர்மையின்மைக்கும் வேறுபாடு தெரியாமலோ, ஒழுக்கம், கலை இவைகளின் அடிப்படைகளை அறியாமலோ ஓர் இனம் இருந்த தென்பதற்கு ஒரு சிறிதும் சான்றில்லை. காட்டுமிராண்டித் தனத்தைப் போன்றே நாகரிகம் தொன்மையானதாகக் காணப்படுகிறது. நாம் எஸ்கி

மோவையும்(*Eskimo*), சிவப்பு இந்தியனையும்(*Red Indian*) பசுட்டோவையும் (*Basuto*), பீஜித்தீவில் வாழ்பவனையும் (*Fiji Islander*) காட்டுமிராண்டிகளாகக் கருதுகிறோம். நாம் நினைப்பதுபோல் பள்ளிக்கூடங்களும் மருத்துவ சாலைகளும் நீதிமன்றங்களும், காவல் நிலையங்களும் கொண்ட சமூக நிலையை அவர்கள் அடையவில்லைஎன்ற ஒரே காரணத்திற்காகவே இவ்வாறு கருதுகிறோம். ஆனால் அவர்களுடைய வாழ்க்கை வகைகளிலும், ஒழுகலாறுகளிலும், நம்பிக்கைகளிலும் தனிப்பட்டதொரு தன்மையைத் திண்ணமாகக் காணலாம். இத்தனிச்சிறப்பு முன்னேற்றமடைந்த கிரேக்கர்கள், ரோமானியர், இன்றுள்ள பிரிட்டிஷ்காரர், ஜெர்மானியர் ஆகியவர்களிடையே உள்ளதைஒத்ததாகும். அவர்களுடைய சமூக அமைப்பு வேறுபட்டதாகவும், இயற்கையைப் பற்றிய அவர்களுடைய அறிவு குறுகியதாகவும், அவர்களுடைய கருவிகள் கரடுமுரடானவையாகவும் இருந்தன என்பதால் மட்டும் அவர்களைக் காட்டுமிராண்டிகள், நாகரிகமற்றவர்கள் என்று நாம் கூற முடியாது. இன்னும் அரசியலில் பின்தங்கிய மக்களை நாம் அரைகுறை நாகரிகமுள்ளவர்கள் அல்லது அரைகுறைக் காட்டுமிராண்டிகள் என்று கருத முற்படுகிறோம். ஏனெனில் அரசியல் சிறப்பு அல்லது பொருளாதாரச் செழிப்பு அல்லது மக்களை அழிக்கும் திறன் இவற்றையே நாம் நாகரிகத்தின் சின்னங்களாக வைத்துக்கொண்டுள்ளோம். ருசியாவை எதிர்த்துப் போரிட்டு வெற்றியடைந்தபோது ஜப்பான் மிக நாகரிகமடைந்ததாகக் கருதப்பட்டது. ஆனால் இக்கொள்கையின்படி, சூங் வம்சத்தைத் (*Sung Dynasty*) தோற்கடித்த டார்டார்களும், (*The Tartars*), ரோம்பேரரசைப் படையெடுத்துப்பற்றிய மிலேச்சர்களும் நாகரிகம் அடைந்த மக்களுக்குச் சிறந்த உதாரணங்களாகக் கூறப்படவேண்டும்.

மிகவும் தொன்மையான சமுதாயங்களிலும் நாகரிகத்தின் ஆரம்ப அறிகுறிகள் இருக்கின்றன. அவ்

வண்ணமே நாகரிகம் நிரம்பிய சமூகங்களிலும் காட்டு மிராண்டித்தனம் பெருத்த அளவிற்குத் தங்கி நிற்கிறது. நாம் ஹூணர்களையும் (*Huns*), காத்தியர்களையும் (*The (Goths*), வாண்டல்களையும் (*The Vandals*), டர்கோமன் களையும் (*The Turcomans*) காட்டுமிராண்டிகள் எனக் கொள்கிறோம். ஆனால் வருங்காலத்தில், ஒருவேளை இன்றிருப்பதைவிட மிகுந்த முன்னேற்றமடைந்த ஒரு மனித இனம் இப்போதைய நமது நாகரிகத்தை வியப்புடனும் அருவருப்புடனும் நோக்கலாம். தற்போதைய நாகரிகத்தின் பெரும்பகுதியை நாகரிகமடையாத சமூகத்தின் மூடப்பழக்கங்கள் என்றும், தீச்செயல்கள் என்றும் எண்ணக்கூடும். இவ்வாறு எண்ணமாட்டார்களென உறுதியாகக்கூற முடியாது. விலங்குகளுடன் மனிதரைப் போரிடச் செய்த ரோமானியர்களின் முற்கால விளையாட்டை நாம் இகழ்வதுபோல் விலங்குகளிடையே போட்டிச் சண்டைகளை நடத்தி நாம் இன்புறுவதையும், நமக்குள் பரிசுக்காகப் போட்டிச் சண்டையிடுவதையும் நமது பின் சந்ததியார் இகழ்வர். நமது உயர்தரக் கொலையாகிய போரைப் பற்றிக் கூறவே வேண்டியதில்லை.

நாகரிகம் என்பது நம் உள்ளத்தில் உள்ள தொன்றும்; நமது நன்னெறிபற்றிய எண்ணங்களிலும், சமயக் கருத்துக்களிலும் சமூக நோக்கிலும் அதைக் காணலாம். நீராவிக் கப்பலையும், புகை வண்டியையும், தொலைபேசியையும், தட்டெழுத்துப் பொறியையும் பயன்படுத்துவதால் மாத்திரம் நாம் நம்மை நாகரிகமானவர்கள் என்று கூறிக்கொள்ள முடியாது. மிதி வண்டியை ஓட்டவும், குவளையிலிருந்து குடிக்கவும், குழாய்மூலம் சுருட்டுக்குடிக்கவும் ஒரு குரங்கு பழக்கப்பட்டிருந்தாலும் அது குரங்கேயாகும். தொழில் நுணுக்கத் திறமைக்கும் ஒழுக்க வளர்ச்சிக்கும் சிறிதும் தொடர்பில்லை. பண்டைய இந்தியாவிலும் கிரேக்கத்திலும் இடைக்கால இத்தாலியிலும் வாழ்ந்த மக்கள் நம்மைவிட அறிவியல், பொறியியல் முதலிய துறைகளில் மிகத்தாழ்ந்த

வர்களே. ஆயினும், அவர்கள் ஆன்மிகக் குறிக்கோள்கள், வாழ்க்கைக்கலை இவற்றில் நம்மைவிட உயர்ந்திருந்தனர் என்பதை மறுக்கமுடியாது. புதியனவற்றில் பரபரப்பான நாட்டத்தையும், செல்வம் சேகரிப்பதில் காட்டும் வெறியையும் நாகரிகமெனக் கொள்ளுதல் கூடாது. இக்குழப்பத்தை அகற்றிவிட்டால் பல சிறந்த படிப்பினைகளை இந்தியா, சீனு, பண்டைய கிரேக்கம் ஆகிய நாடுகளிலிருந்து கற்றுக் கொள்ளலாம். இதிலிருந்து இந்நாடுகளில் குறைபாடுகளே இல்லையென்று கூற இயலாது.

ஓய்வுநேரமும் அறிவொளியும் ஆகிய சிறப்பு பண்டைய கிரேக்கர்களுக்கு எப்படி வாய்த்தது எனின், அந்நாட்டு மக்களில் பெரும்பாலோர்க்கு இவ்வசதி மறுக்கப்பட்டு அவர்கள் சமூகத்திற்கு இன்றியமையாத கடினமான வேலைகளில் ஈடுபட்டு அடிமைத்தொழிலாளர்களாக ஆனதனுல். பல்வேறு பகுதிகளில் உள்ள வழக்கங்களுக்கும் நம்பிக்கைகளுக்கும் மதிநுட்பத்துடன் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை மூலம் இந்து நாகரிகம் நாட்டின் பழங்குடி மக்களையெல்லாம் ஒன்றுக இணைத்தது. இப்படி இணைத்திருந்தும் பின்தங்கிய மக்களின் கல்வியைக் கவனிக்கவில்லை. இந்துசமயக் குறிக்கோள்கள் போற்றுதற்கு உரியனவாயிருந்தபோதிலும் பொதுமக்களிடையே ஊடுருவிச் செல்லவில்லை. பிற்காலத்தில் தான்தோன்றித்தனமான அரசாட்சியின் பயனுக மக்களின் உரிமை குறைக்கப்பட்டு, இந்துக்களின் உயர்ந்த குறிக்கோள்களில் வீழ்ச்சி ஏற்பட்டது.

இக்கால நாகரிகம் பொருளாதாரக் காட்டுமிராண்டி நிலையில் இருக்கிறது எனலாம். ஆன்மாவையும் அதன் நிறைவையும் கருதாது உலகத்திலும் அதன் வலிமையிலும் இக்கால நாகரிகம் மிக்க நாட்டம் கொள்கிறது. நாம் மேற்கொண்டுள்ள அலுவலை மிகச்சிறப்பாகச் செய்யும்படி அது தூண்டுகிறது, ஏனெனில் முதலும் முடிவுமான தத்துவங்கள் நமது அறிவுக்கு அப்பாற்

பட்டன. வாழ்க்கையின் வெளித்தோற்றங்களைச் செம்மைப் படுத்துவதும், உலகின் பொருளாதார வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதும், இனிய வாழ்க்கை வசதிகளை உலகெங்கும் பரப்புவதும், இயற்கையின் ஆற்றல்களை மனிதனுடைய நோக்கங்களுக்கேற்ப அடக்கியாளுதலும் ஒரு முடிவில்லாத, கவலை நிறைந்த முயற்சியாகும். உயிரின் மேலும் உயிரற்ற பொருளின் மேலும், உள்ளம் ஆதிக்கம் செலுத்துகிறது. ஆனல் உள்ளத்தையும் உயிரையும் உடலையும் ஆன்மா ஆளவில்லை. உயிரையும் உடலையும் அடக்கியாள, அவற்றின் செயல்முறைகளையும் அவற்ருல் என்ன இயலுமென்பதையும் நாம் அறிந்துள்ளோம். முன்னேற்றத்தில் முதல் வெற்றி கண்டவுடன், மெய்ப்பொருள் அறிவை ஒதுக்கித் தள்ளவும் ஆன்மிக சிந்தனையைப் புறக்கணிக்கவும் அறிவியல் முற்பட்டது. அத்துடன் சமயத்தை ஏறக்குறையக் கொலை செய்வதில் வெற்றியும் கண்டதெனலாம். நம் முன்னேர்களைவிட நாம் மிகக் கற்றவர்களாகவும் அறிவியல் அறிவுள்ளவர்களாகவும் இருப்பினும், அவர்களைக் காட்டிலும் முரட்டுத்தனத்தில் குறைந்தவர்களாயும் கருணை மிக்கவர்களாயும் இருக்கிருேம் என்று சொல்லிக்கொள்ள முடியாது. நமது கல்வி, அறிவுத்துறை அடிமைத் தளைகளினின்று நம்மை விடுவிக்கவில்லை. கல்வி மனதைத் தூண்டிவிடுகிறது, ஆனல் நிறைவளிப்பதில்லை. நாம் கவிதை படிக்கிருேம்; கட்டுக்கதையை ஆர்வத்துடன் விழுங்குகிருேம்; திரைப்படங்களைப் பார்க்கிருேம்; ஆகவே பண்பாடுள்ளவர்கள் என்று நம்மைக் கருதுகிருேம். நமது பகுத்தறிவு, பாசாங்கேதவிர உண்மையல்ல. நமது இயல்பூக்கங்களைச் (*instincts*) சிறப்பித்துக்காட்ட நமது பகுத்தறிவைப் பயன் படுத்துகிருேம். நாம் செய்ய விரும்பும் செயல்களுக்கு ஏற்பச் சமாதானங்களைக் கற்பிக்கிருேம். ஏற்க விரும்பும் கொள்கைகளுக்குத் தக்க வாதங்களைத் தொடுக்கிருேம். நன்மை செய்துகொண்டே போவதில் நமக்கு

மிக்க நம்பிக்கை உண்டு. ஆனால் நன்மை செய்வதைக் காட்டிலும் 'போதல்' தான் மிகுந்துள்ளது. மனித குலத்தின் குறிக்கோள்களைப் பற்றித் தங்குதடையறப் பேசிக் கொண்டும் நடைமுறையில் உள்ள கவர்ச்சியான சொற்றொடர்களைக் கூறிக்கொண்டும் மேலெழுந்தவாரியான வாழ்க்கை நடத்துகிறோம். ஆனால் உயர்ந்த குறிக்கோள்கள் நமது மனதில் புகுவதில்லை. ஒழுங்குமுறைக்குக் கட்டுப்படவேண்டும் என்பதை உணருவதில்லை. அறிவின்றியும், உணர்ச்சி வயப்பட்டும் எதையும் நம்பக் கூடியவர்களாகவும் இருந்த முற்கால மக்கள், சிற்சில சமயங்களில் சிறந்த செயல்களைப் புரிந்தனர் எனினும், பெரும்பாலும் நம்பமுடியாத தீச்செயல்களில் ஈடுபட்டனர். அவர்களுக்கும் நமக்கும் பெருத்த வேறுபாடில்லை. போட்டியிடும் இயல்புடைய மனிதனின் விலங்குத் தன்மை இன்னும் மாறவில்லை. பொருளாதார வெற்றியே நமது உயர்ந்த குறிக்கோள் ஆகிறது. நமது போர்கள் அனைத்தும் பெரும்பாலும் பொருளாதாரக் காரணங்களின் விளைவுகளே. பொருளாதாரமே நமது சமயம். பேரரசை வளர்த்தல் உண்மையில் பொருளாதார அலுவலேயாகும். நமது வணிகத்தை வளர்க்கவும், நாட்டை விரிவுபடுத்தவும், பிறநாட்டைப் பெறவுமே நாம் போர்புரிகிறோம். வணிகத்திற்காகவும், பொருள் விற்பனைக்கு இடங்கள் பிடிக்வுகம் நமது அறிவுச் சுதந்திரத்தையும் (*intellectual freedom*), இரக்க உணர்வையும் (*sympathy*), கற்பனைத் திறனையும் (*imagination*) பலிகொடுக்கிறோம். ஏனெனில், அறிவுச் சுதந்திரம் ஐயப்பாட்டைக் கிளப்பக் கூடும்; ஒத்துணர்வு, தொழிலாளர்களைச் சுரண்டுவதிலும் பின் தங்கிய இனங்களை ஆளுவதிலும் நமக்குள்ள திறனைக் குறைக்கக் கூடும்; கற்பனையோ நமது மனவுறுதியைத் தடைசெய்யக் கூடும். தனிப்பட்ட மக்களிடையேயும் இனங்களிடையேயும் உள்ள போட்டிகளையும் போராட்டங்களையும் வெற்றியினால் உண்டாகும் மகிழ்ச்சியையும் அடிப்படையாகக்

கொண்ட நமது நாகரிகம் பிறர் மீது ஆதிக்கத்தையே நாடுகிறது. இந்நாகரிகம் விரைவும், வீரமும் தீரச்செயலும், மனக்கிளர்ச்சியும், ஆர்வமும், செயலும், ஆலோசனையற்ற முழக்கமும் இணைந்த ஒன்ருகும். ஆனால் இதன் ஆசை நிறைவேற இயலாதது; ஒருபோதும் அது நிறைவேறக்கூடாது என விதிக்கப்பட்டுள்ளது போலும்.

விரைவு, அளவு, ஒருதரமாக்குதல், புறப்பொருளில் ஈடுபடுதல் ஆகிய பொறியியல்புகள் (*mechanical virtues*) ஆன்மிகத்தைக் குறைத்து விட்டன. மன ஒற்றுமைக் குறைவினுலும் பொதுவான உள்ளக் குழப்பத்தினுலும் நாம் வருந்திக்கொண்டிருக்கிருேம். உரிமை, அழகு, அன்பு, நற்பண்பு ஆகியவை பொலிந்த உண்மையான மானிட வாழ்க்கையின் ஆன்மிகக் குறிக்கோளை வெளிப்படையாக நாடுகிருேம். ஆனால் அதனுடன் உடலைப்பேணுவதிலும், அதன் முக்கியத் தேவைகள் தூண்டுதல்கள் ஆகியவற்றை நிறைவு செய்வதிலும் அறிவற்று நாட்டம் கொள்ளுகிருேம். புலனறிவும் உணர்ச்சிகளும் கொண்ட தாழ்ந்த மனப்பானைமயுடனும், பயனே குறியாக உள்ள செயல்முறைகளுடனும் அவ்வாறு செய்கிருேம், உடலைச் சார்ந்த காட்டுமிராண்டித்தனம் கூட முழுதும் மறைந்துவிடவில்லை. "தூய காமம்" (*Sacred lusts*), தெய்விகத்தீ (*divine fire*) 'பாதாளக்கோயில்' (*subterranian shrine*), இயற்கைக்கு மிக நெருங்கிய கண்ணியமான காட்டுமிராண்டி (*noble savage*) 'பௌதிக உலகத்தின் குரல்' (*Voice of the elemental world*) ஆகியவற்றை நாம் பாராட்டுவதிலும், நம் உடல்மேல் காட்டும் புதிய நாட்டத்திலும் இக் காட்டுமிராண்டித்தனம் நம்மைக் காட்டிக் கொடுக்கிறது. உணர்ச்சியின் தூண்டல் புனிதமாகக் கருதப்படுகிறது; அறிவுக்கு முரணுனது, 'தூய்மை' என்ற போர்வையால் மறைக்கப்படுகிறது.

உலகம் குருட்டுத்தனமாயும் தொடர்பற்றதாயுமுள்ள ஆதிக்கத்தில் இல்லை. அதற்கும் வரலாற்றின் ஒழுங்கு

என்பது ஒன்றுண்டு. மூவாயிரம் ஆண்டுகளை ஒதுக்கி விட்டு நானூறு ஆண்டுகளை மட்டும் கருதுவதன்மூலம் ஒரு மெய்யறிவுக் கொள்கையை நாம் தோற்றுவிக்க முடியாது என்று ஆக்டன் பெருமானுர் (*Lord Acton*) 'வரலாற்றின் ஆய்வு' (*The Study of History*) என்ற நூலில் நமக்கு எச்சரிக்கை செய்கிருர். கடந்த நாகரிகங்களின் தோற்றத்தையும் மறைவையும் ஆராய்ந்து பார்த்தால் தங்களுடைய ஆற்றல்களை அரசியல் வாதத்திலும், நாட்டுப்பற்றிலும், ஒருவரையொருவர் அழித்தலிலும் செலவிட்ட நாடுகள் தங்களுக்குள்ளே ஏற்பட்ட நிகழ்ச்சிகளாலோ புறம்பானவற்ருலோ தம்மைத்தாமே அழித்துக் கொண்டன என்பதைக் காண்கிருேம். மேற்கு ஐரோப்பா கற்காலத்தினின்று (*Stone Age*) மீள்வதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே எகிப்து, பாபிலோன், அசிரியா, கிரீட், சால்தியா இவைகளின் நாகரிகம் மிக உயர்ந்த நிலையை அடைந்திருந்தது. அண்மையில் அறிஞர் அலெக்சாண்டர் இர்வின் (*Alexander Irvine*) என்பவர் கூறியதுபோல், கடந்த 6000 ஆண்டுகளைக் கவனிக்கும்போது, கடிகாரத்தில் ஒவ்வொரு நிமிடமும் நூறு ஆண்டுகளுக்குச் சமமாகப் பாவித்துக்கொண்டால், கடிகாரத்தின் முட்கள் பன்னிரண்டிலிருக்கும்போது எகிப்தும் பாபிலோனும் உலக நாடக மேடையில் இடம் பெறுவதைக் காணலாம். பன்னிரண்டு அடித்து ஐந்து நிமிடங்களானதும் கிரீட் (*Crete*) அவற்றினும் சிறந்து முன்னேறும்; பன்னிரண்டு பத்திற்கு அசிரியாவும் (*Assyria*), பன்னிரண்டு பதினைந்துக்கு சால்தியாவும் (*Chaldea*) மிக முன்னணியில் விளங்கும். சீன, இந்திய நாகரிகங்களின் தொன்மையைப் பற்றிய ஐரோப்பியரின் மதிப்பீட்டை நாம் ஒப்புக்கொண்டால், சீனுவும், இந்தியாவும் மெதியாவும் (*Medea*) பன்னிரண்டு கடந்து இருபது நிமிடங்கள் அளவில் முக்கிய இடம் பெறுகின்றன. பன்னிரண்டு இருபத்தைந்திற்குப் பாரசீகம் முன் நிற்கும்; பன்னிரண்

டரை மணிக்குக் கிரேக்கம் சிறப்பிடம் பெறும். பன்னிரண்டு முப்பத்தைந்திற்குச் சில சாம்ராஜ்யங்களை உலகப் படத்தினின்று அலெக்சாண்டர் அழித்துக்கொண்டிருப்பார்; பன்னிரண்டு நாற்பதிற்கு ரோமாபுரி ஆட்சி செய்யும். பன்னிரண்டே முக்காலிற்குப் பலம் பொருந்திய தற்கால ஐரோப்பிய அரசுகளின் ஆரம்பத்திலிருப்போம். அடுத்த பத்து நிமிடங்களில் ஒவ்வொரு நிமிடமும் ஒரு சாம்ராஜ்யம் அல்லது அரசாங்கம் உலகப்படத்திலிருந்து அகல மற்ருென்று தோன்றும். ஒருமணி அடிக்கச் சில விஞடிகளிருக்கும்போது உலகப் பெரும்போர் நடக்கிறது. ஆசிய நாகரிகங்கள் பிழைத்திருப்பது மனித ஆன்மிக மதிப்புக்களின் உயிர்ப்பிக்கும் தன்மையைக் காட்டுகின்றது. அந் நாகரிகங்களிலும் போர்களும் போரில் முனைந்த மன்னர்களுமிருந்தனர். எனினும் அவர்கள் மேம்பட்ட வாழ்க்கையின்மீது கொண்ட பற்று, போர் முயற்சிகளில் மோகத்தை உண்டாக்கவில்லை. ஆனுல் ஐரோப்பிய மக்களிடையே இம்மோகம் நீடித்திருக்கிறது. உலகம் முழுவதையும் படைபலத்தால்ஆதிக்கம் கொள்ளவேண்டும் என்று மேன்மேலும் அதிகரிக்கும் பாழும் ஆசையினுல் பிடிக்கப்பட்ட அசிரியா சிதைவுற்றது. ஏனெனில் அளவுக்கு மீறியதைச் செய்ய அந்நாடு முற்பட்டது. பண்டைய கிரேக்கத்திலே ஓயாத போர் நாட்டின் அழிவைக் கொணர்ந்தது. மக்களுக்கு அப்போது தெரிந்திருந்த நிலப்பகுதி முழுவதையும் கைப்பற்றி, மேற்றிசை, கீழ்த்திசை நாடுகளிலிருந்து எதிர்ப்பின்றிக் கப்பம் பெற்றுக்கொண்டிருந்த காலத்தில் ரோம் உலகம் முழுமையும் வென்றது; ஆனுல் தனது ஆன்மாவை இழந்ததென்னலாம். ரோமானியரின் ஆடம்பர வாழ்க்கையின் உச்ச நிலையிலும் அவர்களது வீழ்ச்சிக்கு அடிகோலிய காலத்திலும் காணப்பட்ட விவாகப் பொறுப்பின்மை கொடுமையானது. ஒருவன் தனது இருபத்து மூன்ரும் மனைவியை ஏற்றதாகவும், ஒரு பெண் தனது இருபத்தொன்ருவது கணவனை மணஞ்செய்து கொண்ட

தாகவும் வரலாறு குறிப்பிடுகிறது. மண ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு, முறிக்கப்பட்டு மீண்டும் வேறு ஒப்பந்தங் கள் செய்யப்பட்டன. திருமணம், மேஜை நாற்காலி முதலியவற்றை மாற்றிக்கொள்வதுபோல் கருதப்பட்டது போலும். அம் மக்களிடையே இருந்த சிந்தனையாளர்கள் அதனுடைய ஆன்மிக இளைப்பைக் குறித்து ரோமானி யரை எச்சரிக்கை செய்தனர். வரலாற்று ஆசிரியர் லிவி (*Livy*) அழகுறச் சொன்னார்; "நமது குணக்கேடு களையோ அவற்றைச் சீர்படுத்தும் முறையையோ நாம் பொறுத்துக்கொள்ள முடியாது." அக் காலத்தின் கதி யற்ற நிலையை டாசிட்டஸ் (*Tacitus*) என்ற வரலாற்று சிரியர் பயங்கரமாகச் சித்திரித்துள்ளார். ஜுவெனல் (*Juvenal*) என்பவர் நன்றாக மனதில் உறைக்கும்படி ஏளனம் செய்தார். ஆனால் பொதுமக்கள், மெல்லிய மனச் சாட்சியின் சிறு குரலுக்குச் செவிசாய்க்கவில்லை. புகழின் உருவெனக் கூறக்கூடிய ரோம் அழிக்கப்பட்டது. முழு உலகத்தின் மேலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்த விரும் பிய பேராசையால் பேரரசுகள் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாக அழிந்தன. ஆன்மிகத் துறையின் வறுமையால் நாகரிகங்கள் ஒவ்வொன்றாகச் சரிந்தன. விஷ்ணு புரா ணம்[1] என்ற ஓர் இந்துமத நூலின் ஆசிரியர், நம்மைச் சிந்திக்குமாறு அழைத்து, சமூகம் பின்கூறப்பட்ட நிலை யை அடையும்போது அடுத்த அவதாரமாகிய கல்கியை எதிர்பார்க்கலாமென்கிறார்: அந்நிலையில், சமூகத்தில் சொத்து மட்டுமே உயர் நிலையைக் கொடுக்கும், பொருட்செல்வம் மட்டுமே நற்பண்பிற்கு மூலமாகும்; காமம் ஒன்றே கணவன், மனைவி இவர்களை இணைக்கும்

---

[1] அர்த்த ஏவ அபிஜன ஹேது, தணம் ஏவ அசேஷ தர்ம ஹேது, அபிருசிர்/ஏவ தாம்பத்ய ஸம்பந்த ஹேது, அன்ருதம் ஏவ வியவகார ஜயஹேது, ஸ்திரீத்வம்/ஏவ உபபோக ஹேது, பிரம்ம சூத்ரம் ஏவ விப்ரத்வ ஹேது, லிங்கதாரணம் ஏவ ஆச்ரம ஹேது (விஷ்ணு புராணம்).

கட்டாகும்; பொய்மை வாழ்க்கையின் வெற்றிக்குக் காரணமாகும்; பால் உணர்ச்சியே இன்பத்திற்கு ஒரேவழியாகும்; வெளிப்படையான அலங்காரங்களே அகச்சமயமெனக் குழப்பப்படும்; இந்நிலையில்தான் கல்கி அவதாரம் தோன்றலாம். மட்டரகமானதும் காட்டுமிராண்டித்தனமானதுமான குறிக்கோள் வெகுகாலம் நீடிக்குமாயின் நமது வாழ்க்கை தடைப்படும். நமது நாகரிகம் அதனுடைய கொடுமையின் சுமையினுலேயே அழிந்துவிடும். உண்மைகள் தெளிவாக உள்ளன. வரலாற்றின் விதிகள் இரக்கமற்றவை; அவை நமக்குச் சுயேச்சை அளிப்பதில்லை. வாளை எடுப்பவர்கள் வாளாலேயே மடிவார்கள். ஒரு நாகரிகம் வெற்றி அடையுங்கால் அவ்வெற்றி அதன் ஆன்மிக ஆற்றலாலன்றி உடல் வலிமையாலன்று. அது வீழ்ச்சியடையும்போது ஆன்மிக வலிவும் வனப்பும் குன்றல் அந்நலிவுக்குக் காரணமாகும். ஆன்ம சக்தியால் அரசாட்சி செய்யாது வாளின் மேல் நமது நம்பிக்கையை வைக்கும் வரையில் எதிர்காலம் இருண்டுதானிருக்கும். பொருளீட்டுவதில் நாட்டங்கொண்ட சமூகம் போட்டியை அடிப்படையாகவும், வலிமையைச் சச்சரவு தீர்க்கும் நடுவராகவும் கொள்கிறது. அங்கு சிந்தனை மேலெழுந்தவாரியானதாகவும், கலை வெறும் உணர்ச்சியளவினதாகவும், ஒழுக்கம் தளர்ந்ததாகவும் இருக்கும். இத்தகைய சமூகம் தோள் வலியையே பாராட்டும் ராஜச நாகரிகமாகும். ஆன்மிக வலிமையைச் சார்ந்த சாத்விகமாகாது. ஆகவே அது நீடித்து நிற்காது. பேராபத்தை அடையவிருக்கும் உலகத்தை ஆன்மிகப் புனரமைப்பு ஒன்றுதான் காப்பாற்ற முடியும். தீர்க்கதரிசியின் (*The Prophet*) வார்த்தைகள் நமது நினைவிற்கு வருகின்றன. "திரும்புங்கள், திரும்புங்கள், ஏன் நீங்கள் மடியவேண்டும்." "மனித இனம் வரலாற்றிலிருந்து ஒன்றையும் அறிந்து கொள்வதில்லை என்பதை வரலாற்றிலிருந்தேதான் தெரிந்து கொள்ளு

கிறேம்", என்ற ஹெகலின் (*Hegel*) பயங்கரக்கூற்றைப் பொய்த்துப் போகச் செய்வோமா அல்லது நாமும் அதற்குச் சாட்சி அளிப்போமா? நாகரிகத்தின், ஏன் மனித இனத்தின், எதிர்காலம் ஆபத்தில் இருக்கிறது. ஆனாலும் அது நமது கைகளால் உருவாக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. உலகத்தை அச்சமின்றி வாழ்வதற்கேற்றதாக அமைக்கும் பொறுப்பு நம்முடையது.

நம்பிக்கை இழக்கத் தேவையில்லை; இப்புவியில் நாம் வந்து சேர்ந்தது அண்மைக் காலத்தில்தான்; எனவே நாம் அறைகுறை நாகரிகமுள்ளவர்களாக இருப்பது வியக்கத்தக்கதன்று. நமக்கு முன்னே போதிய காலம் இருக்கிறது. இக்கோள் மனிதர் வாழத்தகுதியற்றதாகப் போய்விடக் காரணமில்லையென்றும், சூரியன் இன்னும் நூறு கோடி ஆண்டுகளுக்குள் மறைந்துவிடாதென்றும் வானியல் வல்லுநர் கூறுகின்றனர். உடலில் மட்டுமல்லாது உள்ளத்திலும் ஆன்மாவிலும் முன்னேறிக் கொண்டு போவோமானால் மனித குலத்தின் எதிர்காலம் மிகவும் சிறந்ததாக இருக்கும். தற்கால எழுச்சி இறுதியில் உலகத்தின் நன்மையையே வளர்க்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எந்த முன்னேற்றத்திற்கும் நமது நாகரிகத்தையும் அதன் கூறுகளையும் வெளிப்படையாக அலசிப்பார்ப்பதும், அதை உள்ளபடியே திறனாய்வு செய்தலும் இன்றியமையாததாகும். சோம்பேறித்தனப் பிடிவாதக் கொள்கையை ஆட்டியசைத்துப் பார்த்தால், வழக்க முறைகளுக்குச் சவால் விடுதல், பழங்காலப் பிணைப்புக்களால் வளரும் மனத்தைக்கட்ட விரும்பும் மக்களுடன் விறுவிறுப்பாக வாக்காடுதல், ஆகிய இவைகளை நாம் வரவேற்கவேண்டும். ஏனெனில் உண்மையுடனும் பெருந்தன்மையுடன் தவறுகளை ஒத்துக்கொள்ளுதல் எல்லா முன்னேற்றத்திற்கும் முதற்படியாகும். எவரும் எதிர்காலத்தை வெகு ஆழ்ந்துகாண இயலாது, என்றாலும், நம்மால் இயன்றவரை நம்மெதிரிலுள்ள நீண்ட பாதையின் முதற்படிகளையேனும் அறிந்து கொள்ளலாம்.

# 4. புனரமைப்பு

## சமயம்

சமயத்துறையில் பெரிய ஆக்க முயற்சி ஒவ்வொன்றுக்கும் முன்னர் நம்பிக்கைக் குறைவு வலுத்த அலை போல் வீசியிருந்திருக்கிறது. தொன்று தொட்டுவரும் பழக்கமுறையில் ஏற்பட்ட அழிவு சமயத்துறையில் புதிய நம்பிக்கைத் திட்டத்திற்கு வழிவகுக்கிறது. அசைக்க வொண்ணுதவற்றை அறியவேண்டி, மற்றெல்லாம் ஆட்டி அசைக்கப்படுகின்றன. சமயம் ஆய்ந்து ஆராய்வதற்குப் புறம்பானது என்று விலக்குவது பயனற்ற செயலாகும். மனத்தைக் கொல்வதனுல் அதனைத் திருத்த முடியாது. சமயத்தைச் சார்ந்த பழங்கொள்கைகளை (சிந்தனையின்றி) ஏற்பதும், அவற்றை ஆலோசனையின்றி மறுப்பதைப்போல்,எதிர்காலத்தில் நிற்கக்கூடியது அல்ல. சமயத்தை நாம் ஒருபொழுதும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. காணப்படாத உண்மைப் பொருளைப் புரிந்து கொள்ளத் தூண்டும் இடையருத அவா மக்கள் உள்ளத்தில் இருந்து வருகிறது. உயர்நிலை எய்தலை எதிர்பார்த்து ஆர்வத்துடன் விரும்பி வாழ்க்கையினுட் பொருளையும் அதன் பொறுப்புக்களையும் சிந்தித்து மனிதன் மனிதனுக வாழும் வரையில் சமயம் மறைந்துவிடுமென்ற அச்சம் இல்லை. சமயத்தின் விளக்கத்தை மாற்றி அமைப்பது ஒன்றே பிரச்சினை. இன்றைய அறிவிற்கும் திறனுய்விற்கும் பொருத்தமான முறையில் உலகப்பொது உண்மைகளைப் புதிய முறையில் நாம் கூறுதல் வேண்டும்: நமக்கு இரு கடமைகள் இருக்கின்றன; ஒன்று தொன்று தொட்ட பழக்கங்களின் கொடுமையை வெல்லுவது. மற்றொன்று, மனிதரது பிளவுக்கு வழிகோலும் தனிமனப் போக்கினுல் உண்டாகும் குழப்பத்தைத் தவிர்ப்பது.

காரண காரியத் தொடர்பான காலச்சங்கிலியில் முதன்மையானதொரு வளையம் உண்டென்று காரண வாதம் (*causal argument*) நிரூபிக்க விழையும்போது, அதன் உண்மையை நாம் மறுக்கலாம். ஆனால் காரண வாதம் வாழ்க்கை உலகில் உள்ளவற்றுக்குத் தருக்க ரீதியான அடிப்படையுண்டென்றோ அல்லது உலகத்தைத் தாங்கும் அடிப்படையான முதற்பொருள் ஒன்று உண்டென்றோ அறுதியிடும்போது அவ்வாதம் எளிதில் மறுக்கக்கூடியதன்று. மூக்குக்கண்ணாடியைத் தாங்கும் பொருட்டே மூக்கு திட்டமிட்டு அமைக்கப்பெற்றிருக்கிறது என்று அனுமானிக்கும் முறையில் உதாரணங் காட்டி நோக்க வாதத்தைப் (*teleological argument*) பக்குவமற்ற முறையில் விளங்குவதை வால்தேர் (*Voltaire*) என்ற பெரியார் ஏளனஞ் செய்தார்; இம்மாதிரி பக்குவமற்ற முறையில் விளக்கும்போது நோக்கவாதம் அபத்தமானதே. ஆனால் நோக்கவாதம் உலகத்தின் சீரான ஒழுங்குமுறையும் போக்கும் முன்வகுத்ததொரு திட்டத்தையும் நோக்கத்தையும் குறிப்பிடுகின்றன என்று கூறும்போது அது கவனிக்கத் தகுந்ததாகும். அவை தற்செயலாக அமைந்த நற்கால விளைவுகளே எனக் கூற இயலாது. உலகத்தைப் பற்றி அறிவியல் நமக்குத் தரும் விளக்கம் எவ்வகையிலும் நாத்திகத்திற்கு (*atheism*) இடமளிக்காது; திட்டமாகக் கூறுமிடத்து, உலகின் அடிப்படையான இருப்பைப் பற்றிய அல்லது காரணத்தைப் பற்றிய சிக்கலான பிரச்சினைகளுடன் ஒருவிதத்தொடர்பும் கொள்வதில்லை. உயிர்வாழ்தலின் சிலபகுதிகளைப் பற்றி மட்டும் அறிவியல் விளக்கம் கூறி, ஏனைய அடிப்படையான கேள்விகளைத் தத்துவ சாத்திரம், சமயம் இவைபோன்ற மற்ற துறைகளின் ஆராய்ச்சிக்கு விட்டு விடுகிறது. உலக இயக்கத்தைத் தெளிவுபடுத்தும் அறிவிற்குப் பொருத்தமான இரு விளக்கங்கள் கிடைக்குமானால் அவற்றுள் எது மக்களின் உள்ளே உறங்கும்

உயரிய ஆற்றல்கள் விரிவடைய உதவுகிறதோ அதுவே ஏற்றுக்கொள்ளத்தக்க தென்பதற்கு யாதொரு தடையு முல்லை. அறிவியலின் நோக்கங்களையும் சாதனைகளையும் உண்மையாக உணர்ந்தோமானால், உலக இயக்கத்திற்கு அடிப்படையாகச் சொல்லால் விளக்க முடியாததாயும் மனத்தால் அறிவதற்கு அரிதாயும் உள்ள மேலான உண்மை ஒன்று இருக்கின்றதென்ற நம்பிக்கை ஏற் பட்டே தீரும். நிலைகுலைவு, தேக்கம், கொடுமை, மடமை ஆகியவை அடிக்கடி தோன்றினாலும், உயிரும் அதன் பின் படிப்படியாக வெளித்தோன்றும் குணங்களாகிய மனது, புத்தி, உள்ளுணர்வு ஆன்மா ஆகியவை சடப் பொருளாகிய (*matter*) உடலுக்கு அளிக்கப்பட்டிருப்பது படிப்படியான முன்னேற்றத்தையே காண்பிக்கிறது. உயிரினங்களின் பரிணமம் பொதுவாக மேன்மேலும் வளர்ந்து நிறைவுபெறும் நிலையை நோக்கிச் செல்லுகிறது. மனோதர்மத்தில் முன்னேற்றம், சமூகக் கடமையை உணர்வதில் வளர்ச்சி, பிறர் துன்பத்தை உணர்தல், பல் வேறு சமூகப்பிரிவுகளின் ஓர்மை முதலியன சிறந்தவை யென வாழ்க்கையில் மதிப்பிடப்படுகின்றன; இக்குணங் கள் தொடர்ச்சியாக வளர்ந்து வருகின்றன. அறநெறிக் குரிய ஓர் இயல்பு இயற்கையினுள்ளேயே அடங்கியிருப் பதுபோலத் தோன்றுகிறது. உலக இயக்கத்தை இவ் வாறு ஆன்மிக முறையில் விளக்குவது வெறும் உணர்ச்சி யின் வயப்பட்ட கொள்கையோ, மனிதனின் தனித்த கற் பனையோ அல்ல என்பது ஒயிட்ஹெட் (*Whitehead*), தாம்சன் (*Thomson*), ஆலிவர் லாட்ஜ் (*Oliver Lodge*), லாயிட் மார்கன் (*Lloyd Morgan*) ஆகியோர்போன்ற அறி வியல் தத்துவ அறிஞர்களின் நூல்களிலிருந்து விளங்கும்.

ஆனால் நாம் இத்துணைக்காலமாக உணராமல் தட வித் தேடிக்கொண்டிருந்த நிலையான உண்மைப் பொரு ளைப்பற்றி அறிவியல் நமக்குப் புதியதோர் விளக்கத்தை அளிக்கிறது. அது பழைய விளக்கத்தைத் தள்ளிவிட

வில்லை. ஆயினும் தக்க காரணமின்றி வலியுறுத்தப்பட்ட பண்டைய கொள்கைகளை அசைக்கின்றது. உலக இயக்கத்திற்கு அடிப்படையாக ஒரு தெய்விக சக்தி உள்ளது என்ற உண்மையை ஏற்றுக்கொண்ட போதிலும், மனிதன் தனக்கெனக் கடவுளைப் பற்றிப் பலவகையாகக்கொண்ட கற்பனைகளைத் தகர்த்துவிடுகிறது. எல்லையற்ற உண்மைப்பொருளைப் பரலோகத்தில் வீற்றிருக்கும் உருவங்கொண்ட கடவுளாகக் கருதலாகாது, அல்லது, பாண்டங்களைச் செய்யும் குயவன் போன்ற படைக்கும் கடவுளாகவோ அல்லது திருந்தித் திரும்பிவரும் கெட்டமகனைக் (*Prodigal*) குறித்து இன்புறும் தகப்பனாகவோ கருதக்கூடாது. கடவுள் நம்முள்ளும் மற்றும் எல்லாவற்றுள்ளும் ஊடுருவி நிற்கும் பொதுவான உயிர்த்தத்துவம். அவர் அளவிடமுடியாதபடி அனைத்தையும் கடந்தவராக இருந்தபோதிலும் உலகை ஊடுருவித் தாங்குகிறார். கடலில் கரைந்த உப்பையும் மலரில் பரவிய நறுமணத்தையும் போல, அவர் உலகத்தோடு ஒன்றாக நிற்கிறார். செவ்வனே அமைக்கப்பட்ட திட்டங்களின் (*well established laws*) வாயிலாக அவர் செயலாற்றுகிறார். இந்தச் சட்டங்களினியக்கம் எந்த ஒரு தனிமனிதனுக்காகவும் நிறுத்திவைக்கப்படுவதில்லை. நாம் தவறான வழியில் சென்றால் இயற்கைக்கு அப்பாற்பட்ட காப்பாளர் (*supernatural deliverer*) ஒருவர் நம்மை மீட்க வரமாட்டார். சட்டத்தை மீறுபவருக்கு மன்னிப்பு இல்லை. சொன்ன சொல் எதையும் அழித்துவிட முடியாது. எடுத்துவைத்த ஓர் அடியையும் திருப்பிவைக்க இயலாது. எதிர் காலத்தை உருவாக்குவதில் எவ்வளவு சுயேச்சையாக இருக்கக்கூடுமாயினும், கடந்த காலம் உறுதியாக அமைந்துவிட்டது.

மனிதனது சிந்தையில் பல்வேறு வகைகளில் தோன்றுகிறார் கடவுள். உலகத்தில் கலந்தும் அதனைக் கடந்தும் உள்ளார் கடவுள்; உலகமும் கடவுளும் ஒன்றே; என்

றெல்லாம் வெவ்வேறு கருத்துக்களால் நம்மைத் திகைக்கச் செய்கின்றன, இந்துமதக் கொள்கைகள். ஆட்சியாளனில்லாத சட்டங்களையும் அதன் கூடவே காப்பாளர் ஒருவரிடம் நம்பிக்கையும் கூறுகிறது பௌத்தசமயம். பெரும்பாலும் சாதாரண மக்களது மனப்பான்மையையே கொண்ட ஆண் பெண் தெய்வங்களை நம்பியது பண்டைய காலசமயநெறி. மாருத நேர்மையின் தலைவரெனக் கடவுளைப் போற்றியது எபிரேய (*Hebrew*) சமயம். உருவமும் நம்முடன் உறவும் பெற்று எங்கோ இருக்கும் கடவுளைக்கூறி, நெருங்கிய உறவு கொள்ளும் அன்னை மேரி (*Medonma*) முதல் பரிசுத்தவான்களான இஷ்ட முனிவர்கள் (*patron saints*) அனைவரையும் வழிபடுகிறது கத்தோலிக்க சமயம். புரோட்டஸ்டண்ட் பிரிவினரோ உருவமுள்ள ஒரு கடவுளையே வழிபடுபவர். ஒருவனே தெய்வம் என்று அழுத்தமாகக் கூறுகிறது இஸ்லாமிய சமயம். தம்மைவிட உயர்ந்து, சிறந்து, வலிமைபெற்றுத் தம்மால் முற்றிலும் அறியப்படாததொரு உண்மையுடன் தமக்குள்ள தொடர்பை மேற்கூறிய பல்வேறு வகைகளில் மக்கள் கூற முயன்றுள்ளனர். மனித இயல்பின் வேறுபாடுகளை நாம் ஒத்துக்கொண்டால் இப்பல்வேறு கடவுட் கொள்கைகளும் பலவிதமான மக்களைக் கவர்கின்றன என்பதையும் எல்லாக் கொள்கைகளையும் ஒன்றுக்குவது முற்றிலும் பயனற்றது என்பதையும் எளிதில் அறியலாம். வேறுபட்ட எல்லாவிதக் கொள்கைகளும் அடிப்படையில் ஒரு கருத்துக் கொண்டுள்ளன; அதாவது விவரிக்கப் படாததும் விவரிக்கவொண்ணுததும் ஆகிய ஒரு மூல தத்துவம் உண்டென்பதே.

சமயவேறுபாடுகள் அடிக்கடி பகைமைக்கு வாய்ப்பாகக் கொள்ளப்படுகின்றன. மனித சமுதாயத்திற்கே பொதுவான ஒரு சமயத்தைத் தோற்றுவிக்கும் முயற்சிகள் உலகத்தின் அமைதியின்மைக்கும் துன்பத்திற்கும் காரணமாகவிருந்து வந்துள்ளன. தம் சொந்தக் கருத்தை

மற்றவர்களின் மேல் திணிப்பதில் கொள்ளும் பேரவா, சுயநல மனப்பான்மை உள்ளவர்களுக்கு இயற்கையாகும். நமக்கு மட்டுமே உண்மை சொந்தமாகவுள்ளது என்ற நம்பிக்கையும், பிரபஞ்சத்தின் உட்கருத்தைப் பற்றிய நமது எண்ணமே உண்மையானதென்ற நினைப்பும் தன்முனைப்பினுல் (*egotism*) ஏற்படும் பொய்த்தோற்றமாகும். ஒவ்வொரு சமயமும் மக்களின் ஆழ்ந்த மனப்பான்மையை விளக்குகிறது; அவர்களது அகநெறியையும் உயர் நாட்டத்தையும் காட்டுகின்றது. ஒவ்வொரு குழுவும் தன்னுள்ளே தெய்வத்தன்மையைக் கொண்டுள்ளது. அத்தன்மையினுள் வளர்கிறது. அது பிறரோடு தொடர்பு கொள்ளும்போது அவர்களுடைய எண்ணங்களையும் மாற்றிப் புதியவையாகச் செய்கிறது. பிறரிடமிருந்து நாம் ஏற்றுக் கொண்டதை மீண்டும் அப்படியே கையாள்வதைவிட தக்கபடி மாற்றி அமைப்பது மேன்மையானது. மனித இன முழுவதற்கும் பொருத்தமான சமயம் ஒன்றுதான் என்ருல் அது உலகின் ஆன்மிக வளத்தைக் குறைத்துவிடும். மனத்தின் மலட்டுத் தன்மையையும், மனிதரின் ஆன்மா வளர்ச்சியின்றித் தேங்கிநிற்கும் நிலையையும் தடுக்க நாம் விரும்பினுல் வரலாற்றை அடிப்படையாகக்கொண்ட எந்தச் சமயத்தையும், மறுக்கவோ அதற்கு உரிய மதிப்பளிக்காமலிருக்கவோ கூடாது. "கடவுட் சக்தியால் வழிநடத்தப்பட்ட அத்தனைமக்களும் கடவுளின் மக்கள் ஆவார்கள்."

ஆன்மிக சம்பந்தமாக ஒவ்வொருவரும் தமது மனச்சாட்சியின் வழியை பின்பற்ற வேண்டும். தன் விருப்ப நடக்கையை ஏற்பது தவறு நடக்கக்கூடிய தீங்கையும் ஏற்றுக்கொள்வதாகும். ஆனுல் அந்தத் தவறுதல்கள் தங்களாலேயே ஏற்படுபவை; அவை துன்பம் பயக்கும். எனினும் உண்மையைக் காணும் முயற்சிகள் என்ற வகையில் பயனற்றவையல்ல. ஆழ்ந்த சிக்கல்களைத் தீவிர

மாகச் சிந்திக்கும் இடையருத முயற்சியின் வழியாகவே அத்தவறுகளைத் திருத்தலாம்.

வருங்கால சமயம் பரந்து விரிந்ததாக இருத்தல் வேண்டும்; மதப்பற்றுள்ள அனைவரையும் தன்னுள் அடக்கியதாக இருத்தல் வேண்டும். அதே நேரத்தில் கொள்கைகள், கருத்து - ஓவியங்கள் ஆகியவற்றைப் பொருத்த அளவில் அவர்களுக்கு முழு உரிமை அளிக்க வேண்டும். ஏனெனில் சமயம் என்பது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்றினைப்பற்றிய விளக்கமாகாது. அப்படிக் கூறுவதை விடச் சமயம் ஆன்மாவின் ஒருபோக்கு, மனத்தின் ஒரு உணர்வு நிலை எனலாம்.

நாம் மதிப்பிடப்பெறுவது நமது நம்பிக்கை, கொள்கை இவற்றின் நுட்பங்களைக் கொண்டல்ல; நமது வாழ்க்கை, ஒழுக்கம் ஆகியவற்றைக் கொண்டேயாகும். சமயப்பிரிவுகளில் எதைச் சேர்ந்தவராயினும் மதத்தில் நம்பிக்கையுடையவர் ஒரேவித நோக்கத்தையும் மனப் பான்மையையும் கொண்டவர்களாக இருப்பர். அவர்கள் எதிர்பாராது அதிருஷ்டவசமாக ஏற்படும் நிகழ்ச்சிகளால் நிலைகுறையாத மன உறுதியைப் பெற்றிருப்பர். அமிழ்த்தி விடும் கேடுகளினுலும் வெல்லமுடியாத ஆன்மாவின் சிறப்பே ஆன்மிகத்தின் சாரமாகும். வலிமையுள்ளவர்கள் அவர்கள் வென்ற உலத்தைவிட மேம்பட்டவர்கள். அவர்கள் குண்டுமாரி பொழிந்தாலும் உண்மையே பேசுவர். துண்டிக்கப்பட்டாலும் துன்புறுத்தப்பட்டாலும் பழிக்குப்பழி வாங்கக் கருதார். எல்லாவிதப் பற்றுக்களையும் தன்னலத்தையும் மடமையென்றும், தேவையற்றவையென்றும் கருதுவர். உலகப் பொதுநோக்கை உடையவர். அதனுலே ஏற்படும் இழப்பைக் கணிக்காத தியாகமும் கைம்மாறு வேண்டாது தம்மையே ஈதலும் அவர்தம் அன்றுட வாழ்க்கையாகும். தமைமயே கொடுக்கும் அவர்களது வீரமும் சமநிலையும் மனிதத்தன்மைக்கு அப்பாற்பட்டதென்றே, திடனற்ற மனமுள்ள இந்தியருக்கும், தோல்வி

யடைந்த மக்களாகிய கலிலியாவின் (*Galilee*) செம்படவர்களுக்குமே ஆறுதலளிக்கக்கூடிய உயர்ந்த குறிக்கோள்களென்றே நம்மில் பலரும் கருதுகின்றோம். அவற்றை நடைமுறையில் அடையமுடியாதென்று ஒதுக்கித் தள்ளிவிடுகிறோம். ஆனால் ஒவ்வொரு சமயமும் பாடுடைய வாழ்க்கையையும் தன்னொடுக்கத்தையும் வற்புறுத்தி இருக்கின்றது. சமயம் வெறும் புறக் கோலம் அன்று. எளிதாகப் பெறக்கூடிய மன ஆறுதல் உண்மையான சமயமாகாது இடையருது இன்பம் நாடுதலே வாழ்க்கை என்று கருதுவது சமய மறுப்புக்கு அடையாளமாகும். துன்பம் வாழ்க்கையின் தற்செயலான உடன்நிகழ்ச்சியன்று; ஆனால் அது வாழ்க்கையின் மையமானது எனலாம். வலியிலும் வேதனையிலும்தான் அருஞ்செயல்கள் நிறைவேறுகின்றன. வாழ்க்கையின் நோக்கம் இன்பம் (பிரேயஸ்) அல்ல; ஆனால் உண்மையான நன்மையை (சிரேயஸ்) அடைவதேயாகும். இன்ப வாழ்க்கையும் வாழ்க்கையின் இன்பமும் ஒன்றல்ல, துன்பம் நமது குறிக்கோளை அடைய உதவினால், சுக வாழ்க்கையைப்போல், அதுவும் இன்பமானதுதான். ஒருவனது குறிக்கோள்களை அடையப் பயன்படும் என்று அறிந்தால், மிகக் கடுமையாக வருத்தும் துன்பத்தையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளலாம். "உயர்வு நம்மையெல்லாம் கவருகிறது. ஆனால் அதனை அடையும் படிகள் அப்படியில்லை," என்றார் கெத்தே (*Goethe*) இவ்வுண்மையைச் சிறிய செயல்களில் நாம் அறிந்துகொள்ளுகிறோம். உடலை வருத்தல் காலப் போக்கை எதிர்த்து நடப்பதைவிடத் தீமையில் குறைந்ததாகவே பெண்டிர் பலருக்குத் தோன்றுகிறது. அவர்கள் அழகுபடுத்தும் நிலையங்களிலும் (*beauty parlour*) காலணிகள் விற்கும் கடையிலும் ஏற்படும் இன்னல்களை மனமுவந்து ஏற்கின்றார்கள். மனிதன் தன் சித்தத்தின் வழி நடப்பவன்; சுய சித்தத்தை உபயோகிப்பது மனித

வாழ்க்கைக்கு முதல் தேவையாகும். ஆனால் அவனது சுயசித்தம் பிரபஞ்சத்தின் தேவைகளுடன் இணைந்து போகவேண்டும். இவ்வகையில் பூசல் போராட்டம் இன்னல் முதலியன ஏற்படுகின்றன. இவை அனைத்தும் அன்றாட வாழ்க்கையில் நேருபவை. இக்கொள்கையின் விளக்கத்திற்கு இந்த ஆசிரியரது "இந்துவின் வாழ்க்கை நோக்கு" (*The Hindu View of Life*) என்ற நூலைக் காண்க.

தனி மனித உள்ளமென்பது வளர்ச்சியுறாத ஒரு பொருளாகும். இது விலங்குகளின் இயல்பூக்கங்களி னின்று முற்றிலும் விடுதலை பெறாவிடினும் அவற்றைத் திருத்தி உயர்த்திக்கொள்ளக்கூடிய திறமை பெற்றது. ஆன்மாவின் இன்றியமையாத தேவைகளை மனமிசைந்து ஏற்றுக்கொள்வதன் மூலமாயும் நமது இயற்கையின் விதிக்கு ஒத்தவாறு அதனைக் கட்டுப்படுத்துவதின் வாயிலாகவும் நாம் வளர்ச்சி பெறுகிறோம். நம் கவனத்தை வேறு திசையில் செலுத்தலும் தன்னிலையிழக்கும் மனத்தை மீண்டும் பயிற்றலுமே நம்மைப் புலன்களின் சிந்தனையிலிருந்து ஆன்மிக சிந்தனைக்கு மாற்றிக்கொள்ள இயலும். இதற்குத் தன்னடக்கமும் கட்டுப்பாடும் அவசியம் ஆகும். உயர்நிலை எய்தும் முயற்சியில் இயற்கையான மனிதன் காணும் வெற்றி ஒவ்வொன்றும் ஆசாபாசங் களில் சிக்கி அல்லலுற்றபோதும் உறுதியாகப் போராடிப் பெறுவதேயாகும். இவ்வாறு உறவு எய்துதல் ஆளுமை நிறைவுபெறுவதற்கு இன்றியமையாதது. இம்முயற்சியில் விரயம் அதிகமிருப்பினும் அதன் கைம்மாறு மிகவும் பெரிது. இவ்வாறு உயர்த்திக்கொள்ளுதல் எல்லா முன்னேற்றத்திற்கும் பொதுவான நிகழ்ச்சியாம். அமீபா (*amoeba*) தனது உணவை நாடிச் செல்வதிலிருந்து ஆன்மிகத்துறையில் முன்னேற ஆன்மா ஏற்கும் போராட் டம் வரை எல்லாம் குறித்த நோக்கமுடைய முயற்சிகளின் தொடர்ந்து படிப்படியான கோவையாகும். அவை

ஒவ்வொன்றிலும் இலட்சியத்தைத் தேர்ந்தெடுத்து அதற்கேற்ற வழிகளை அமைத்துக்கொள்ளுகிறோம். மனித நிலை ஒன்றில் மட்டுமே நாம் உணர்வோடும் ஆழ்ந்த யோசனையோடும் இவ்வாறு செய்யக்கூடும்.

மனிதன், இடம், காலம் போன்ற சந்தர்ப்பங்களின் அடிமையுமல்ல, தேவதைகளின் நோக்கற்ற விளையாட்டுப் பொருளுமல்ல. அகிலமெங்கும் செயல்படும் உயர்நிலைக்கு உந்தும் தூண்டல் எங்கும் உள்ளீடாக இயங்கி, மனிதனிடத்துச் சுய உணர்வோடு திகழ்கிறது. மனிதனுக்குக் கீழ்ப்பட்ட உலகப் பகுதியில் முன்னேற்றம் தானுக ஏற்படுகிறது’ ஆனுல் மனித உலகத்தில் அது அவன் எண்ணத்தினின்றே தோன்றுகிறது. உணரப்பெருத மாறுபாடுகளிருந்தவிடத்தில் நன்கறிந்த நோக்கம் காணப்படுகிறது. தான் எப்படி இருக்கிருன், எவ்வாறு இருக்கக் கூடும் என்ற இரண்டுக்குமுள்ள முரண்பாட்டை, வேற்றுமையை, உணர்வதன் பயனுக மனிதன் மட்டுமே அமைதியின்மை அடைகிருன். வாழ்க்கைக்கு ஒரு விதிமுறையை, முன்னேற்றத்தின் நியதியைத் தேடுவதனுல் மனிதன் ஏனைய பிராணிகளினின்று வேறுபடுகிருன்.

நம்மை நாம் மாற்றிக்கொள்வதன் வாயிலாகவே நாம் உலகத்தை மாற்றலாம். முன்னேற்றத்திற்கெல்லாம் உயிர்நாடி ஆன்ம வளர்ச்சி என்று கூறப்பட்டது சரியே. புது நாகரிகத்தை அமைப்பதின் பொறுப்பு அதிர்ஷ்டவசம் என்று விடவேண்டியதில்லை; அது சாதுரியத்தையும் பொருத்தது. இன்னமும் சாதிக்கவேண்டியது ஏராளமாக இருக்கிறது. பலதுறைகளிலும் உலகம் நிறைவு அடையாமலிருக்கிறது, அதன் முன்னேற்றத்தின் வேகத்தைக் குறைப்பதோ விரைவாக்குவதோ நம் கையில் இருக்கிறது. பரிணுமத்தின் படிப்பினை தெளிவானது. வாழ்க்கை, குறிப்பிட்ட ஒரு திட்டப்படி, திருப்திகரமான சிகரங்களைத் தொட்டுக்கொண்டு மேன்மேலும்

முன்னேற்றமடைந்துகொண்டே செல்வதில்லை. அது இங்குமங்கும் தயங்குகிறது, அலைகிறது, சிற்சில சமயங்களில் திடீரென்று முறிகிறது, அடிக்கடி பழைய நிலைக்கு மீளுகின்றது. இயற்கையின் போக்குகள் ஒருவகையிலும் சிக்கனமானவையெனச் சொல்ல இயலாது. தவருன வழியை மேற்கொண்டால் உடனடியாகவோ தாமதித்தோ ஒதுக்கித்தள்ளப்படுவோம் என்று கடந்த காலத்தின் வரலாறு அறிவுறுத்துகிறது. பிரபஞ்சத்தின் நோக்கத்தை உணர்ந்து அதனோடு நம்மை ஒன்றுபடுத்திக் கொண்டு நம்மில் ஒவ்வொருவரும் மேலான உலகத்தைத் தோற்றுவிக்கும் பெரிய பொறுப்பில் பங்கு பெறலாம். ஒவ்வொருவரும் தனிப்பட்ட மனித இயல்புகள் வாய்ந்தவராகக் குறிப்பிட்ட முறையில் உலகுக்கு நன்மையைச் செய்யக்கூடியவராவர். முழுநிறைவின் சாரம் தன்னை உணர்தலே. வாழ்க்கையை நிலையாகவும் முழுமையாகவும் பார்ப்பதனுல் அதில் நமக்கு என்ன இடம் என்று தெரிந்து கொள்ளுகிறோம். ஒவ்வொரு தனிமனிதனும் குணங்கள் செயல்கள் ஆகியவற்றின் சேர்க்கை. இவற்றின் மையப்புள்ளி வேறுபட்ட பல இடங்களில் எங்கேனும் இருக்கலாம். அம்மையத்தின் உயர்வு தாழ்வுக்கு ஏற்ப, அவரவரது ஒழுக்கம் ஆழமற்றோ அல்லது ஆழ்ந்தோ திகழும். அநுபவ அடிப்படைகள் எவ்வாறு இருப்பினும் மையத்தைத் தேர்ந்தெடுப்பதால் அவற்றை மீட்கலாம். சிந்தனை தியானம் இவற்றின் மூலமாய் நமது இயற்கையை இணைத்து ஒன்றுக்கும் ஒரு மையத்தைத் தேடி, அதன் பயனுகப் பிரபஞ்சத்தில் நமக்குரிய இடத்தை அடைந்து, நமது கடமைகளை (அவை எவ்வளவு ஈனமாயும் கடினமாயும் இருப்பினும்) செய்யும் வலிமை பெறுகிறோம். அதனுல்தான் அமைதியான தியானமும் தனிமையும் அவசியமாகின்றன.

அறவாழ்க்கை குறிப்பிடத்தக்கதும் சமூக மதிப்புள்ளதும் ஆகும். கேவலம் இயல்பூக்கங்களால் வினை

புரிவதோ அல்லது உணர்ச்சி வசப்பட்ட செயலோ நன்னடத்தையாகாது. அது ஒரு கருத்தைத் தழுவியோ அல்லது சிறப்பு வாய்ந்ததாகவோ இருத்தல் வேண்டும். மனித இயற்கையில் இன்னமும் பண்படாத பகுதிகள் உயரிய ஆன்மிக நோக்கங்களுக்கேற்ப அமைக்கப்பட வேண்டும். பொருள்களுக்குக் கொடுக்கப்படும் உருவமே இன்றியமையாததாகும். மனித வாழ்வின் எல்லா வெளிப்பாடுகளும் குறிப்பிடத் தகுந்தவைதான்; அவற்றில் ஒவ்வொன்றும் அதன் கருத்தையும் நோக்கத்தையும் கொண்டு மதிப்பிடப்படுகிறது. தொன்றுதொட்டுப் பழக்கமான ஒரேமாதிரியையோ அல்லது ஒரு குறித்த வழியையோ மட்டும் நாம் கைப்பற்றல் இயலாததாகும். ஒவ்வொரு மனிதனும் பிறமக்கள் பார்க்கும் நோக்கிலிருந்து மாறுபட்ட ஒரு நோக்கத்தோடு உலகத்தைப் பார்க்கிறான். எந்தக் குறிக்கோளை நாம் தேர்ந்தெடுத்தாலும் அதனுடைய தன்மையை அறிந்து அது நிறைவேறக்கூடும் என்று நம்பிக்கைகொண்டு ஒரு செயல்திட்டம் வகுத்து, துன்பத்தை ஏற்றுத் தன்னையே அர்ப்பணஞ் செய்யத்துணியும் ஆர்வத்தோடு அதை நிறைவேற்றப் பாடுபடவேண்டும். மேலும், நடத்தைமுறை நன்னெறியாக வேண்டுமாயின், அது பரிணமமுறை அடையக்கருதும் சமூகப் பாதுகாப்புக்கும் ஒற்றுமைக்கும் உதவவேண்டும். எந்த நடத்தைமுறை மனித இனத்தை அழிக்கிறதோ அல்லது பிளவை வளர்க்கிறதோ அதை நல்லொழுக்கமெனக் கருதமுடியாது. ஒவ்வொரு மனிதனையும் மதிப்பிற்குரியவன் என்று கருதுமாறு நம்மை அறவாழ்க்கை எதிர்பார்க்கிறது. ஏனையோரின் இருப்பு, உரிமை இவற்றை அங்கீகரித்து ஏற்று, அவர்களோடு ஒத்து நடப்பதனால் வளமுறச் செய்யப்பட்ட வாழ்க்கையே நல்வாழ்க்கையாகும். தங்களது குழந்தைகளை உண்பதிலிருந்து பினீஸியத் (*Ph enicia*) தாய்மார்களை மேலோக் (*Meloch*) தடுத்திராவிட்டால்

வேறொரு தெய்வம் அப்படிச் செய்திருக்கும். எல்லா மக்களும் சிறப்பியல்பு கொண்டவர்கள். ஒப்பற்றிருத்தல் நம்மனைவருக்கும் உள்ள பொதுவான குணம், நாம் எல்லோரும் பகிர்ந்துகொள்ளும் குணம். ஒவ்வொரு மனிதனும் தனது தனித்த நிறைவை அடைய இடமளிக்கும் நன்கு இணைந்ததொரு ஒற்றுமையே உலக இயக்கத்தின் நோக்கமாகும். இசைவும் துணிகரச் செயலுமே ஒழுக்க முன்னேற்றத்திற்கு மிகச் சிறந்த இலக்கணமாகும். ஒரு தனிமனிதனை எடுத்துக்கொண்டால் அவனிடம் ஏராளமான உணர்ச்சிகளும் தூண்டல்களும் மனித இயற்கையின் மூலப்பொருள்களாக இருப்பதைக் காண்கிறோம். இவ்வாறு அளிக்கப்பட்ட மூலதனத்தைத் தள்ளவும் அழிக்கவும் கூறுகின்ற ஒழுக்கமுறை சிறந்ததாகாது. கொடுக்கப்பட்டதை ஏற்றுக்கொண்டு அதை அடிப்படையாக வைத்து நாம் உயர் அமைப்புக்களைக் கட்டவேண்டும். கொடுப்பதை ஏற்பதிலும் இசைந்து போவதிலும் மட்டுமே மனிதன் ஒருபோதும் மனநிறைவு எய்துவதில்லை. முன்னேக்கியும் மேல்நோக்கியும் செல்லத்தூண்டும் ஓர் உந்தல் அவனது உள்ளத்தில் இருக்கிறது. இருக்கும் நிலைமையை அப்படியே காத்தல் மட்டும் வாழ்க்கையின் முடிவான குறிக்கோள் ஆகாது. ஆனால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலே இக்குறிக்கோளாகும். வளமுற்ற வாழ்க்கையை அடையும் பொருட்டும் மேன்மேலும் நெடிது வாழ்ந்து தன் மனித நிலையையே மிஞ்சிவிட அவாவுகிறான். அறவாழ்க்கையென்பது சூழ்நிலைக்கு ஒத்துப்போதல் என்றே வரையறுக்கப்பட்டால், சூழ்நிலை மாறிக்கொண்டிருக்கும் வரையில் அது ஒரு நிலைப்படமுடியாது. கடந்த காலத்தில் இருந்த வாழ்க்கை வகைகள் மீண்டும் திரும்பிவர முடியாது. திரும்பக்கூடுமாயினும், அவற்றை வரவழைப்பது விரும்பத்தக்கதல்ல. இராஜபுத்திரப் போர்வீரனையும் வரலாற்று இடைக்கால வீரனையும் (*Medieval knight*) போன்ற வீரர்கள் நவீன

கால நிலையில் தோன்றமுடியாது. மாறுதல் இல்லாத ஒரு சூழ்நிலை நமக்கு இருக்கிறதென்று ஒத்துக்கொண்டாலும் நமது பிரச்சினை தீர்ந்துவிடாது. ஏனெனில், நமது குறிக்கோள்கள் எப்பொழுதும் மாறிக்கொண்டே இருக்கின்றன. ஒழுக்க வாழ்க்கையின் சாரம் நாம் சூழ்நிலைக்கேற்ப நடப்பது என்று சொல்வதைவிட, நம்முடைய குறிக்கோள்களுக்கு மேன்மேலும் அதிகமாக இடம்தரு மாறு சூழ்நிலையை அமைப்பதென்று சொல்லலாம். துணிகரச் செயலில்லாமல் இசைதலும், மாறுதல் இல்லாமல் ஒத்துப்போதலும் ஒருவகையான நிறைவுநிலையையோ அமைதியையோ அளிக்கலாம். ஆனால் அது மனிதனின் முழுநிறைவு நிலையாகாது, ஆன்ம அமைதியுமாகாது. உறுதியான சிப்பியையுடைய நத்தையைப்போலச் சூழ்நிலைக்குத் தக்கவாறு திறம்படத் தன்னைப் பொருத்திக் கொள்வோனை ஒழுக்க வீரன் எனலாகாது. உலகம் இருக்கவேண்டிய நிலைக்கு வெகு அருகில் வரக்கூடிய அளவுக்குத் தன் உலகத்தை எவன் உயர்த்திக்கொள்ளுகிறானோ அவனையே ஒழுக்கவீரனைக் கொள்ளவேண்டும். நன்கு ஒத்துப்போதலில் அழகுண்டு என்பதில் ஐயமில்லை. ஆனால் மாறிக்கொண்டேயிருக்கும் பல்வேறு நிலைகளுள்ள உலகத்தில் அது நிலைத்து நிற்கமுடியாது. களங்கமற்ற பச்சிளம் குழந்தையின் அழகு சுறுசுறுப்பான வாலிபத்திற்கு இடம் தருகிறது. அவ்வாலிபம் காலப் போக்கில் முதிர்ச்சி நிலையின் கண்ணியத்திற்கு இடம் தருகிறது. இவ்வாறே படிப்படியாக நிகழ்கிறது. வாழ்க்கைப் பாதையில் ஓய்வென்பதில்லை. ஒவ்வொரு சாதனையும் மற்றொன்றுக்கு ஆரம்பமேயாகும்.

இக்கொள்கை மனிதனுடைய நோக்கம் ஆன்மா தன் நிறைவுபெறல் என்று நம்பும் பண்டைய கருத்துக்கு முரண்பட்டதென்பது வெளிப்படை. முந்திய நோக்கம் சமூகத்தின் மீட்சி என்று சொல்வதைவிடத் தனி மனிதனின் விடுதலை எனவே கொள்ளல் தகும். அனேமாக

சமயத்துறையில் அதிகார வர்க்கத்தினரின் செல்வாக்கின் மிகுதியே இவ்வாறு தனிமனிதனுக்கு முக்கியத்துவம் கொடுத்ததற்குச் சிறப்பான காரணமாக இருந்திருக்கலாம். சமூகம் தனது பழக்க வழக்கங்கள், மனித வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் முறைகள், நிறுவனங்கள் ஆகியவற்றை வலுப்படுத்த மதத்தைப் பயன்படுத்திற்று. ஆதலால் ஆன்மிக வளர்ச்சிக்கு இடம் காணாது பலர் சமூகத்தைவிட்டுப் பாலைவனத்திற்கோ, காட்டிற்கோ, மடத்திற்கோ, மலைஉச்சிக்கோ ஓடவேண்டியதாயிற்று. ஆகவே ஆங்காங்கு சிலர் நிறைவுநிலையின் சிகரத்தை அடைந்தனர் எனினும் சமூகம் தேக்கமுற்றது. தவிர இச்சிறுபான்மையோரும் உண்மையில் காக்கப்பட்டனர் என்று சொல்லுவதற்கில்லை. கேவலம், கோபம், அச்சம், துன்பம், அபாயம் முதலியவற்றினின்று மட்டுமல்ல, ஆனால் தனிமையிலிருந்தும் ஒதுங்கியிருத்தலினின்றும் நாம் காப்பாற்றப்படவேண்டும். மக்கள் அனைவரும் நன்னிலை எய்தக் கூடியவர் என்பதிலும் அவர்களது தெய்வத்தன்மை வளர்ச்சியுற வாய்ப்புக்கள் கொண்டது என்பதிலும் நம்பிக்கை வைத்தால் உலகமுழுவதும் இரட்சிக்கப்படும் வரையில் நாம் ஓய்ந்திருக்கலாகாது. மனிதன் நிறைவு எய்தக்கூடும், அவனிடத்தே தெய்வத்தன்மை பொருந்தியிருக்கிறது, தெய்விக வாழ்க்கையில் உயிருள்ளவையெல்லாம் புலப்படாததொரு பிணைப்பினில் திடமாகச் சேர்ந்திருக்கின்றன, என்பவை உண்மையான எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான உறுதிக்கொள்கைகளாகும். மன ஒற்றுமையும் வலிமையும் அடைந்த ஆன்மா, தன் சுயதிருப்தியிலோ செயற்படாத கருணையிலோ காலத்தைக் கழிக்காது, சுறுசுறுப்பான தொண்டில் தன்னை ஈடுபடுத்துகின்றது. இக்கருத்துடைய மனிதன், உலகம் இன்னல்பட்டு இரட்சிக்கப்படாது இருக்கிற வரையில் தன்னளவிலும் மன அமைதியோடு இருக்க முடியாது. வெளி உலகம் தன்னோடு பொருந்தியிருந்-

தாலன்றி ஒருவன் அகத்திலே முழு இயைவு பெற இயலாது. கடவுள் அரசு (*Kingdom of God*) எனப்படும் குறிக்கோள் நிறைவேருதவரை தூய்மை பெற்ருேர் அக் குறிக்கோளை உலகத்தில் தொடர்ந்து பரவச்செய்வதில் தங்கள் முழு ஆற்றலையும் செலுத்துவர். உலகம் காப் பாற்றப்படாதவரையில் ஒருவரும் உண்மையாகக் காக்கப்பட்டவர் ஆகார்.

நற்பண்பு என்பது தொடர்பாக மேன்மேலும் உயர்ந்துகொண்டு போகும் ஒன்றை நாடிச் செல்லுவ தாகும். தீய பண்பு என்பது தனக்குத்தானே மனத் திருப்தி பெறுவதாகும். சுய திருப்தியுறும் போக்கே தரம் குறைந்த மனத்தின் தவருத சின்னம். உயர்ந்த குறிக்கோளைப் பற்றிய உணர்வை இழத்தலே ஒருவனுக்கு ஏற்படக்கூடிய மிகவும் மோசமான நிகழ்ச்சி ஆகும். எவ்வளவு பாவியாக ஒருவன் இருந்தாலும் உயர்வுக்கு அறைகூவும் கூப்பாட்டை உணர்ந்தால் அவன் முன்னே றக்கூடும். மனச்சாட்சியின் குற்றச்சாட்டுகளில் முன்னேற் றத்திற்கான நம்பிக்கை இருக்கிறது. இக்குற்றச்சாட்டு கள் அடக்கப்பட்டுவிட்டால் நாம் சாவிலே வாழ்பவரா வோம். எவ்வளவிற்கு மிகுதியாக ஒருவன் வளர்ச்சி யடைந்திருக்கின்ருனே அவ்வளவிற்கு அவன் தன்னில் பெறும் மனநிறைவு குறையும். குறிக்கோள் முற்றும் நிறைவேறும்வரை இக்குறை நீடித்தே தீரும்.

சிறப்பும் சமூக மதிப்பும் பெற்ற எவ்வகையான வாழ்க்கையும் அறவழிப்பட்டதே. அதன் போக்கிற்கு ஏற்பக் குறிக்கோளைக் கட்டுப்பாட்டுடன் அடைய முற் படுவோமாயின் மனிதவாழ்வின் எந்த வெளிப்பாட்டை யும் நாம் ஒதுக்கித்தள்ள முடியாது. சீரிய குறிக்கோளுக் கும் மனித ஆன்மாவிற்குமிடையே உள்ள முழு ஒற்று மையானது மனித இயல்பில் எத்தனை வகையுண்டோ அத்தனை வகையான வடிவங் கொள்ளுகிறது.

தூய்மையை நாடும் உள்ளத்திறன் பல்வேறு வகைகளில் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும். "புகழ் வாய்ந்த தாகவும், நல்லதாகவும், அழகாகவும், வன்மையாகவும் உள்ள ஒவ்வொன்றும் தெய்விக சக்தியின் வெளிப் பாடென்று" பகவத்கீதை (*X-41*) கொள்கிறது. பிளேட் டோவின் (*Plato*) உருவ உலகத்தில் (*world of forms*) நம் உலகத்தின் பல்வேறு பொருள்களுக்கு ஒத்த கணக் கற்ற உருவங்கள் உள்ளன. துறக்கப் பேரரசில் (*Kingdom of Heaven*) எண்ணிலடங்கா வளமனைகள் உள்ளன.

உயர்வு நோக்கிச்செல்லும் கடின முயற்சியில் முடிவை நாம் அடையாவிட்டால் மனஞ்சோர வேண்டியதில்லை; விளையாட்டில் ஆட்டம் இன்றியமையாததே அல்லாது வெற்றி எண்களல்ல. கடமையைச் செய்வதே நமது வேலையாகும், அதைச் செய்விப்பதன்று.

தீமை என்பது ஒரு எதிர்மறையான கருத்து. அது நன்மையில்லாமை, அல்லது போதிய அளவு நன்மை இல்லாமையே ஆகும். வளர்ந்து கொண்டிருக்கும் நன்மையே இன்னும் நன்மை கடந்துசெல்ல வேண்டிய தொலைவைக் குறிக்கிறது. நன்மைக்கும் தீமைக்கும் உள்ள முரண்பாடு முடிவான தொன்றன்று. எல்லாப் பூசல்களும் நன்மைக்கும் அதிநன்மைக்கும், அல்லது தீமைக்கும் வலுத்த தீமைக்குமிடையே உள்ளன என்று கூறுவதே சரியானதாகும். நல்லதென்றும் கெட்ட தென்றும் தனித்த தொன்றில்லை. ஆனால் உயர்ந்தது தாழ்ந்தது என்றும், சிறந்தது, குறைந்தது என்றுமே பாகுபாடுகள் உள்ளன. பிறரது கொள்கையை ஒதுக்கி விட்டு நமது கொள்கையையே நிறைவேற்ற முற்படும் முயற்சியை நாம் கைவிடவேண்டும். எதிர்ப்போனை ஒன்றுக்கும் பயனற்றவன் என நீக்கிவிடக்கூடாது. ஆனால் அவனிடம் பரிவுவேண்டும், அவனைப் புரிந்து கொள்ளவும் வேண்டும். நாம் அன்புடன் மதிக்கும் குறிக்கோள்களுக்கு ஏற்படும் எதிர்ப்பை மனமுவந்து

இனிய முறையில் வரவேற்பது கடினம்தான். ஆனால் அதில்தான் தெய்விகத்தன்மை வாய்ந்தவர் வெற்றியடைகின்றனர். இருப்பதற்கும் இருக்க வேண்டியதற்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் கண்டு அவர் கலகம் விளைக்க மாட்டார். அவர் வாழ்க்கையை ஏற்றுக்கொள்வது, இருப்பதொன்றைப் பணிந்து ஏற்பதாகாது. ஆனால் அதனை மறுப்பவரையும் மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வதாகும். ஒருவகை வாழ்க்கைக்கு எதிராக மற்றொருவகை வாழ்க்கையை ஆதரிக்க முன்னிற்போரது மனக்குழப்பமோ அல்லது சோர்வோ அவருக்கு இல்லை. சகிப்பற்ற தன்மையே சமய மறுப்பு என்று அவர் கொள்வார். தம்மிடத்தில் இருப்பதாகக்கொள்ளும் உண்மையும் விருப்பு வெறுப்பின்மையும், எதிரியினிடத்தும் இருப்பதாக அவர் மதிப்புக் கொடுப்பார். தேசீயக் கடவுள் *(National God)* அல்லது பழிக்குப்பழிவாங்கும் போர்க் கடவுளிடத்து நம்பிக்கை வைக்காததும், அன்புடைய ஓர் உலகப்பொதுத் தெய்வத்தினிடம் பற்றுள்ளதுமான சமயம், எதிர்ப்பு இருக்கும்போதும் பொறுமையுடனும் மன்னிக்கத் தயாராகவும் இருக்கும்படி நம்மை எதிர் பார்க்கிறது. எவருடன் முரண்பட நேருகிறதோ அவருடனும் நயமாகவும் தூய்மையுடனும் நடக்கும்படி எதிர் பார்க்கிறது. நமது சமயத்தைச் சேராத எவனையும் சமய விரோதி அல்லது அறிவிலி என்று எண்ணவும், நமது ஒருபால் கொடிய எண்ணங்களைக் *(prejudices)* கடைபிடிக்காதவனை மூடன் அல்லது தீயவன் என்று எண்ணவும் இயற்கையான மனப்பான்மை நமக்குண்டு. பின்னணி, *(background)* இயல்புக்குணம் *(temperament)*, கல்வி, முன்வரலாறு *(historical antecedents)* ஆகியவற்றை நாம் ஒரு சிறிது புரிந்துகொண்டால் எவனும் ஏன் ஒருவகையான எண்ணத்தைக்கொண்டு நமக்கு வெறுப்பை உண்டாக்குகிறான் என்று அறிந்துகொள்ள முடியும். மாற்றானது எண்ணத்தைப் புரிந்துகொள்ளுதல்

என்பது அவனை மன்னிக்க மட்டுமன்றி அவனைப் பாராட்டவும், இறுதியாக ஓர் உயர்ந்த கூட்டுறவிற்குக் கொண்டு வரவும் பயன்படுவதாகும். இந்துப் புராணங்களில் இராவணனும் இரணியனும் தீமையே உருவெடுத்து வந்தவர்களெனக் கருதப்படுகிறார்கள்; ஆயினும் வீடுபெறத் தகுதியுள்ளவர்கள் என்றும் கருதப்படுகிறார்கள். ஏனெனில், அவர்களிடையே வீரத்தைப் பற்றித் தாங்கள் கொண்டுள்ள எண்ணங்களின்படி வாழ்க்கையை நடத்த வேண்டுமென்ற ஆர்வம்மிக்க முயற்சிகளைக் காண்கிறோம். இராவணனது எஃகு போன்ற மேல்தோற்றத்திற்கும், சீதையைக் கவரவும், இராமனைத் தோற்கடிக்கவும் அவன் மேற்கொண்ட தீவிர வெறிக்கும் அடியில் எண்ணற்ற நல்லுணர்வு நிறைந்த செயல்களையும் கண்ணியமான உணர்ச்சிகளையும் நாம் காண்கிறோம். சீதையின் ஆளுமைகுறித்து அவனுக்குக் குறிப்பிடத்தக்க மரியாதை இருந்தது. அவன் இராமனது பகைவனாக இருந்தானென்றால், ஆழ்ந்த பகையுணர்ச்சி ஆழமான புண்களிலிருந்தே பிறக்கின்றது என்பதையும் நாம் நினைவில் இருத்திக்கொள்வோமாக. நாம் புரிந்துகொள்ள முயலாத மக்களைவிட நாம் உயர்ந்தவர்கள் என்று கருதும் ஆணவ மனப்பான்மையை நாம் தடைசெய்யவேண்டும். வாழ்க்கையில் பயன்கூடிய செயலுக்கு முடிவில்லாத போக்கு வீடுகள் உள்ளன. அவற்றில் ஒவ்வொன்றும் தனிமதிப்பு வாய்ந்தது. ஒவ்வொரு செயல்முறையிலும் நமக்கு நன்மையான வகையும் கெடுதலான வகையும் உள. எந்தச் செயலாயிருந்தாலும் ஒவ்வொன்றிலும் நல்வழியிற் செய்வது, தவறான வழியிற் செய்வதென்று இரு வகைகள் உண்டு. கடவுளுடைய உலகத்தில் கலப்பற்ற தீமையென்று ஒன்றுமில்லை. பொதுவாகத் தீமையென்று கருதப்படுகின்ற ஒன்றால் நாம் எதிர்க்கப்படும் போது அநியாயமாகப் பாதிக்கப்பட்டதாகக் கோபங் கொள்வது கெட்ட செயலாகும். இப்படி நேருங்கால்

அதனை ஏற்றுக்கொள்ளுதலும் துணிவுடன் அதை வெல்லு தலுமே நமது மனப்போக்காக இருத்தல் வேண்டும். பூரண அன்பினுல் ஏற்படும் பரிவும் (*sympathy*) புரிந்து கொள்ளும் ஆற்றலும் கொண்டு நாம் உலகத்தில் தீமையை ஏற்றுக்கொள்ளவேண்டும். இது உயர்ந்தவர் தாழ்ந்தோருக்குக் காட்டும் இரக்கமுமன்று (*condescending charity*) மன்னிப்புமன்று; ஆனுல் இவ்விரண்டைக் காட்டிலும் எல்லையில்லாத அளவு பெரிதாகிய நீதியாகும். இந்த நீதி மனிதனை அவனிருக்கும் நிலையிலேயே ஏற்றுக் கொண்டு அவனது குறையிலும் வலிமையிலும் அவனுக்கு அன்பு காட்டுவதாகும். எப்படி எழில்மிக்க இயல்பு பெற் ரேரும் குற்றம் அல்லது பாவம் என்று உலகம் கூறு வதைச் செய்யுமாறு வலியுறுத்தப்படக்கூடுமென்பதை இந்த நீதி நமக்கு அறிவிக்கிறது. ஏவாளின் (*Eve*) செய் கையின் பலன்கள் துன்பகரமாக இருப்பினும் அந்த ஈடன் தோட்டத்திலிருந்த ஏவாளைவிட நம்மில் எவர் ஒழுக்கத்தில் மேம்பட்டவர் என்று நம்மை எண்ண முடியும்? அக்காலத்திலும் அந்நிலையிலும் நாம் இருந் திருந்தால் நாம் வேறுவிதமாக நடந்திருப்போமென்று உறுதியாகக் கூறமுடியாது. உலகில் கொடுமைமிக்கவன் எனப் பெயர் பெற்றவனுடைய உண்மையான நோக்கங் களையும் கண்டு ஒத்துக்கொள்ளுதல் ஒன்றே எவ்விதமான துணிகரமான ஒத்துழைப்புக்கும் சாதகமாகும். அதாவது பகைவனைச் சமாளிக்கச் சிறந்த முறை அவனை நம்புவதே யாகும். உண்மையான தெய்வத்தன்மை வாய்ந்த ஆன்மாவுக்கு அச்சமோ சினமோ கிடையாது.

"தீரம் படைத்தவன் ஒருவன் எந்த அளவிற்கு இயற்கைப் பொருள்களை உள்ளபடி அறிந்து கொள்ளு கிருனே அந்த அளவிற்கு அவன் அச்சத்திற்கோ கோபத்திற்கோ இடமில்லையென்றும், தன் கடமை நன்மை செய்து இன்புற்றிருப்பது மட்டுமே என்றும் உணர்வான்."

இதைக்கூறியவர் ஒரு இந்துத் துறவியல்ல; ஓர் ஐரோப்பியத் தத்துவ வல்லுநர். ஆனால் இந்த வாழ்க்கை "எவ்வளவு கடினமானதோ அவ்வளவு அரிது" என்று ஸ்பினோசா (*Spinoza*) ஒப்புக்கொள்ளுகிறார்.

மேலும், மிக உயர்ந்து வளர்ந்த மரங்கள் கூட விண்ணகத்தைத் தொடுவதில்லை. பலரும் அறிந்த பின்வரும் செய்யுள் கூறுவது முற்றிலும் உண்மையே.

"ஆன்ற சிறப்பிற் சான்றோ ரிடத்தும்
தோன்றும் குறைகள்; துகளுறு மனத்தின்
கீழோர் இடத்தும் வாழும் நன்மைகள்;
எனவே பிறரிடம் குறைபல எண்ணுதல்
ஒருசிறி தேனும் ஒவ்வா தாகும்."

நம்மில் நல்லவரிடத்தும் வலிவின்மை, இயலாமை, வழி வழி வந்த இயல்பூக்கம், சில குற்றங்கள், அல்லது நம்முடைய நற்குணங்களை வலியுறுத்துவதில் அடக்கமின்மை, இவைபோன்ற குறைகள் காணப்படுகின்றன. பிரபஞ்ச சக்திமட்டும் தீர்மானித்தால் இக்குறைபாடுகளைப் பயன்படுத்தி, பரிதாப முடிவுறும் வீரர்களைத் தோற்றுவிக்கலாம். இத்தகைய வீரர்கள் நமக்குப் பிடித்த மானவர்களாக இருக்கிறார்கள் என்றால் இதற்குக் காரணம் நாமும் அவர்களது பலஹீனத்தில் பங்குபெறுகிறோம் என்பதல்ல; எங்கும் காணப்படுகின்ற அவர்களது குற்றங்களுமல்ல; விதியே அவர்களது வீழ்ச்சிக்குக் காரணம் என்ற உணர்வுதான் நம்மை இவர்கள்பால் ஈர்க்கிறது. மாறமுடியாத அளவிற்குக் கெட்டவர்களென உலகம் கருதுவோர்களில் சிலர், தீயோர் இயல்புக்கு ஒவ்வாததும் சிறிதும் எதிர்பார்க்கப் படாததுமான நற்பண்புகளைத் தம்மிடத்தே காண்பித்து நம்மை வியப்புக்குள்ளாக்குகிறார்கள். வீழ்ச்சியுற்ற பெருமையையும் மீட்கப்பட்ட தீமையையும் உணர்த்தும் இச்செய்திகள் நமக்குக் கூறும் படிப்பினை பிறரைக் குறைகூறுவதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதே.

தீயகுணங்கள் சிக்கலான சமூக சக்திகளின் விளைவு எனக் காணலாம். அச்சக்திகளைத் தோற்றுவிக்க நாம் எல்லோருமே உதவுகிறோம் என்றாலும், நம்மில் யாரும் தனிப்பட்ட முறையிலும் நேரடியாகவும் அவற்றிற்குப் பொறுப்பாளியல்ல. எல்லாத் தோல்விகளும் ஒத்தொல் லோவின் (*Othello*) தோல்வியைப்போல் தடுக்கவொண் ணாதவையென்று பெரும் கலைஞர்கள் நமக்குக் காட்டு கின்றனர். தவிரவும், தகுதியற்ற செயல்களிற் பலவும் மூளையின் தவறுதல்களால் ஏற்படுகின்றனவேயல்லாது இதயத்தின் கேட்டினாலல்ல. அவைகள் கருத்துப்பிழை களேயன்றி ஒழுக்கப்பிழைகளல்ல. குற்றஞ்சாட்டுவதோ அல்லது தண்டிப்பதோ நமக்கு உதவி செய்வதில்லை. மேற்பரப்பிற்கு அடியில் ஒளிந்து கொண்டிருக்கும் உணர்ச்சிகளையும் அறிவீனங்களையும் கட்டுப்படுத்தித் தூய்மைப்படுத்தவேண்டும். இது, புது மதிப்புகளை ஏற் பதற்கும் அவற்றை அநுசரித்து ஒத்துப்போவதற்குமான நிதானமான பயிற்சியினாலேயேதான் ஏற்படும். பாவம் எனப்படும் ஒன்றனுக்கு உலகத்தில் ஓர் இடமுண்டு. வரலாற்று இடைக்காலச் சான்றோர் ஒருவர் வீழ்ச்சியை *beta culpa* (அதாவது "ஆசீர்வதிக்கப்பட்ட பாவம்") என்றார். ஏனெனில், அது தெய்விக அன்பை வெளிப் படுத்துவதற்குக் காரணமாயிருந்தது.

வழக்கமாக வந்துள்ள ஒழுக்கமுறைக்கு தற் போதுள்ள எதிர்ப்பு, மனச்சாட்சியினுடைய விரைவினைக் காட்டும் சின்னமாகும். ஒருசில மக்கள் தங்களுடைய பாரபட்சத்தை அகற்றிவிட்டு, தொன்றுதொட்டுள்ள பழக்கம் நமக்கு அளித்த நம்பிக்கைக்கு அப்பாற் பட்ட மிகப் பெரிய உண்மையை அடைவதால் தான் ஒழுக்க விதிகளில் மாறுதல்கள் பொதுவாக ஏற்படுகின்றன. ஆழ்ந்து சிந்திக்கும் நுண்ணறிவின் வியத்தகு செயலைவிட இனியதாகவும் ஏற்றதாகவும் சோம்பர் மிகுந்துமுள்ள சம்பிரதாய ஒழுக்கத்தை விரும்

பும் பிற்போக்காளரின் கண்களுக்கு எந்த ஒழுக்கச் சீர் திருத்தவாதியும் ஒரு தீயொழுக்கச் சக்தியாகவே தோற்ற மளிக்கிருர். ஏனெனில் ஒழுக்கமென்பது தற்போது நடை முறையிலிருக்கும் சமூக வழக்கமுறையைத் தவிர வேறல்ல. எவனொருவன் அவ்வழக்கமுறைக்கு மாருக நடப்பேன் என்று வற்புறுத்துகிருனே அவன் ஒழுக்க மற்றவன் ஆகிருன். எனினும் அடுத்த தலைமுறையில் அவனது ஒழுக்கமின்மை ஒழுக்கமென மதிக்கப்பட்டு, அதற்கு அடுத்த தலைமுறையில் அதுவே சம்பிரதாயத் தின் ஒரு பகுதியாக ஆகிறது. எந்தக் காலத்திலும் ஒரு சிலர் அக்காலத்து மிக உயர்ந்த வாழ்க்கைக் கருத்திற்கு முற்போக்காகவும், சிலர் பிற்போக்காகவும் இருக்க, பெரும் பாலோர் அதனை ஒத்து அநுசரிப்பதையும் நாம் காண்கி ரும். முதலில் கூறப்பட்டவர்கள் புரட்சிக்காரர்கள்; இரண் டாவது சாரார் குற்றவாளிகள். இறுதியில் குறிப்பிடப் பட்டவர்கள் சாதாரண மக்களாவர். எல்லா முன்னேற்ற மும் புரட்சிக்காரரால் ஏற்படுகிறது. வழக்கமுறையைப் பின்பற்றுபவர்கள் ஆராயப்படாத சூத்திரங்களைக் கொண்டு மனநிறைவடைவர். பிறரைப் பற்றிய அவ தூருன கதைகளைச் சுவைத்துக் கேட்பதில் அவர்கள் நேரங்கழிப்பர். இக்கதைகள் வாழ்க்கையின் உண்மையை எளிய சூத்திரங்களில் அடக்கமுடியாதென்று அடிக்கடி வெளிப்படுத்து கின்றன. உயர்ந்த நற்பண்புகளுக்குப் பெயர்பெற்றவர்களும் தவறுதலுக்கு ஏனேதானே என் றிருப்பவர்களுமான பரிசேயர்களால் (*Pharisees*) அதிக மாக உதவியில்லை. இயந்திரம் போன்று இயங்கி வாழ்க்கை நடத்துவது, கவர்ச்சியும் மென்மையும் கூடிய பசும் செடிகொடிகளில்லாத கற்பாறையின் மேல் அலைந்து திரிவது போன்றது. ஒழுக்கக் கோட்பாட்டில் அக்கறை கொள்வது நல்லது. ஆனால் அதில் கண்மூடித் தனமான பற்றுவைப்பது தீயது. அது நமக்கு வழி காட்டி, கலங்கரை விளக்கு; ஆனல் அதை நாம் ஒரு

தெய்வமாக்கிவிட்டால் அது நமது அறிவைக் குருடாக்கி ஒழுக்கக் கேட்டில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும். ஒழுக்க விதிகள் மீறக்கூடாத தூய்மையுடையவை என்று கொண்டால் எந்த முன்னேற்றமும் ஏற்படாது. வாழ்க்கை ஒரு துணிகர முயற்சி, அது வரையறுக்கப்பட்ட திட்டமல்ல. அது ஒரு விளையாட்டு; அவ்விளையாட்டின் விதிகளைத் திட்டமாக நாம் ஒருபோதும் அறிய முடியாது. நல்வாழ்க்கை நடத்த வரண்ட பொதுவிதிகள் உதவா. பரிணமத்தின் குறிக்கோள்களோடும் பிரபஞ்சத்தின் நோக்கத்தோடும் ஒத்துழைக்கும் உயிருள்ள மனத்திண்மை ஒன்றே இதற்கு உதவும். அறிவின் முன்னேற்றமும், நற்பண்பு, சமூக வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் முறைகள் ஆகியவற்றின் வரலாற்றைப் புத்திசாலித்தனமாகப் புரிந்து கொள்ளுதலுமே இக்கால அமைதியின்மைக்குக் காரணங்களாகும். தாங்கள் நம்பாத ஒரு மனச்சாட்சிக்குக் கீழ்ப்படிவதாகவும் பொருளற்ற ஒரு கடமையை நிறைவேற்றுவதாகவும், படித்தவர்களிற் பலர் எண்ணத் தொடங்கியுள்ளனர். நலமிக்க பழக்கங்களை உண்டாக்குவதில் அவாக்கொண்டு அவர்கள் தற்கால ஒழுக்க வாழ்வுக் கருத்துக்களை மீறுகிறார்கள். சராசரி மனிதனுடைய உணர்ச்சிகளுக்கும் பாரபட்சக் கொள்கைகளுக்கும் ஏற்படும் அதிர்ச்சி மட்டும் ஒரு புதிய பழக்கத்திற்குத் தகுந்த எதிர்வாதமாகாது. நம் முன்னோர்களை விட நாம் ஒழுக்கத்தளர்வுற்றிருக்கின்றோம் என்று சொல்லப்படும்போது இக்கூற்றை முழுதும் உண்மையென்றோ அல்லது மொத்தத்தில் நமக்குப் பெருமைக்குறைவு தருவது என்றோ நாம் ஏற்றுக்கொள்ளவேண்டியதில்லை. அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட பல விஷயங்கள் நம்மால் தவறெனக் கண்டிக்கப்படுகின்றன. நமது சுவைகள் மாறியிருக்கின்றன. நாம் மனைவியரை விற்ற காலம் ஒன்றிருந்தது; இச்செயல் சரியானதெனவும் கருதினோம். மென்மையான நற்பண்புள்ள செனக்கா (*Seneca*) அடி-

மைகள் சிலுவையில் அறையப்பட்டபோது அதிகமாக அமைதி யிழக்கவில்லை. அண்மைக்காலத்தில் நடந்த போர் சீசருடைய (*Caeser*) காலிக் படையெடுப்புகளை விட (*Gallic compaigns*) ஒரு சிறிதும் கொடுமையில் குறைந்ததன்று என்றாலும், சீசர் மிக எளிமையாகப் போர்களை நியாயமெனக் கூறுவதுபோல் நாம் கூறுவதில்லை. ஒழுக்கத் துறையில் விளக்குகள் மங்கியுள்ளன; விண்மீன்கள் அலைகின்றன. ஆனால் ஒருவகையில் நமது முற்கால வரலாற்றுப் பகுதிகளில் சிலவற்றைவிட நாம் திட்டமாகத் தாழ்ந்திருக்கிறோம். நமது குற்றம் நாம் ஒரு குறித்த முறைக்கு ஒத்துப்போகவில்லை என்பதன்று. ஆனால் மிகக் கொடிய சாதாரண நிலையிலிருந்து துன்புறுவதுதான் நமது குற்றம். நமது வாழ்விலும் சிந்தனையிலும் ஒரு குறிப்பிடத்தக்க அற்பத்தனம் இருக்கிறது. இக்கடுமையான குறைபாட்டிலிருந்து நமது தலைமுறை காப்பாற்றப்படவேண்டுமானால் எந்தத் துறையை நாம் தேர்ந்தெடுத்தாலும் உயரிய நிலையில் வீரமுடன் செயலாற்ற முயலவேண்டும். உறுதி, நெறிவழுவாமை, கட்டுப்பாடு, தியாகம், கருணை, சகிப்புத்தன்மை இவைபோன்ற பண்புகளின்றி வீரம் தோன்ற முடியாது. சுருங்கக்கூறின், ஏற்றுக்கொள்ளுதலும், துணிகரமும் உள்ள ஒரு விதியைக் கடைப்பிடிக்காத வரையில் வீரம் சாத்தியமல்ல.

## குடும்ப வாழ்க்கை

மனித வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளாகிய உடம்பு, உயிர், மனம், உணர்ச்சி, அழகு, ஒழுக்கம் முதலியன தூய்மையானவை. ஏனெனில் தெய்விக வாழ்க்கையை நோக்கி நாம் வளர இவையாவும் வழிகளாகும். நாம் உடலைப் புறக்கணிக்கவோ, உயிர்ச் சக்தியைப் பட்டினி போடவோ வேண்டியதில்லை. நமது இயல்பின் எல்லாப் பகுதிகளின் உயிர் நிலைகட்கும் போதிய பரிபூரண

மான வாய்ப்பு அளிப்பதை நாடவேண்டும். திருமணம் என்னும் நிறுவனத்தின் வாயிலாக உயர்ந்த வாழ்க்கையை உருவாக்கப் பால் உணர்ச்சிகளை மூலப்பொருள்களாக நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நம்மையறியாது இச் சக்திகளின் உந்துதலுக்கு அடிமையாவது வாழ்க்கை முறையையும் அதன் குறிப்பையுமே மறுப்பதாகும். அது வெறும் ஒழுங்கீனமும் அராஜகமும் ஆகும். .

ஒரு சிறந்த திருமணத்தில் இணைவிழைச்சுச் செயல் தூய்மைபெற்று உள்ளத்து எழிலின் வெளிச் சின்னமாகிறது. உண்மையான அன்பு நீடித்திருப்பதற்கு பொதுவான ஒரு பரந்த நோக்கம் தேவை. இந்நோக்கத்தை நாடி அடைவதில் காதலர்கள் தங்களை அர்ப்பணம் செய்ய முனையவேண்டும். கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொண்டு தங்களிடையேயுள்ள வேறுபட்ட இயல்புகளைக்கொண்டு ஓர் அழகான முழுமையைப் படிப்படியாக உருவாக்குகின்றனர். ஓர் உண்மையான உறவை வளர்க்க, கூட்டு முயற்சியை மேற்கொள்ள வேண்டும். வழியில் ஏற்படக்கூடிய இடையூறுகளை எதிர்த்துச் சமாளிக்கத் தயாராக இருக்கவேண்டும். அவர்கள் இந்தப் பணியில் வெற்றியடைய வேண்டுமானால் பொறுமை, தன்னடக்கம், சகிப்புணர்ச்சி, கருணை இவற்றைக் கைக்கொள்வதோடு எப்பொழுதும் விழிப்புடன் இருக்கவேண்டும். மனித உணர்ச்சிகள் அறிவினால் மாற்றியமைக்கப்பட்டாலும் இம்மாற்றம் ஒருபொழுதும் நிறைவு எய்துவதில்லை. அவனது மிகச் சிறந்த நிலையிலும், மனிதனைப் பகுத்தறிவுள்ளவனாக இருக்க ஓயாது பாடுபடும் ஒரு பிராணியென்று சொல்லலாமே யன்றிப் பகுத்தறிவின் நிறைவைப் பெற்ற பிராணியெனக் கூறமுடியாது. ஒரு வாழ்க்கை முறை என்ற வகையில், திருமணம் இன்பத்தைக் கொடுக்கும் அளவிற்குத் துன்பத்தையும் தருகிறது. திருமணம் ஒரு பூரண இன்பநிலை; இந்நிலையை

ஏதேனும் தடுக்க நேரிட்டால் அதை முடித்துவிடவேண்டும் என்ற பொய்க்கருத்தே திருமண விலக்குகட்குக் காரணமாகும். சாதாரணமாக நம்பிக்கைத் துரோகத்தாலோ, இருவரில் ஒருவர் இழைக்கும் உடலுறவுக் குற்றத்தாலோ திருமண விலக்குகள் ஏற்படுவதில்லை, ஆனால் பொருந்தா இயல்பினாலோ வாழ்க்கை விருப்பங்கள் வேறுபடுவதாலோதான் ஏற்படுகின்றன. திருமணம் என்பது ஒருவன் – ஒருத்தி என்னும் இருவரின் வளர்ச்சியை இடையூறுகள் வாயிலாகவும் காலந் தாழ்த்துவதன் வாயிலாகவும் பெருக்குவதற்கான ஒரு வாழ்க்கைமுறை என்று ஒப்புக்கொண்டால், ஒவ்வோர் இடரையும் மேற்கொண்டு முயற்சிசெய்யத் தூண்டும் ஓர் அறைகூவலாக எடுத்துக்கொள்ளவேண்டும். சிறந்ததொரு திருமணம் நமது நோக்கம் முற்றிலும் நிறைவேறியதைக் குறிக்கும். ஒருவர் மற்றவரைத் தவறுகப் புரிந்துகொள்ளலாம்; கொடிய மனநிலைகள் பெற்றோ உணர்ச்சி வயப்பட்டோ செயல்புரிந்திருக்கலாம்; கொனஷ்டைகள், வேற்றுமைகள் பெற்றிருக்கலாம்; இவை மட்டுமல்ல, ஒருவர்க்கொருவர் குற்றமிழைத்தவராகவே இருக்கலாம்— எப்படித்தான் இருப்பினும் ஒருவரையொருவர் பற்றி நிற்க வேண்டும் எனச் சிறந்த திருமணம் என்னும் நிலை எதிர் பார்க்கிறது. திருமண விலக்குகள் என்றும் இழிவு செய்பவையே. உடல் நலமும் இன்பமுமே வாழ்க்கையின் குறிக்கோள், அகவளர்ச்சியும் நிறைவும் அல்லவென்று கருதிக்கொள்ளும் வலிமை குறைந்ததும் வளர்ச்சி பெருததுமான இயல்புள்ள ஆன்மாக்களே திருமண விலக்கை நாடுவர். ஆழ்ந்த புண்பட்டிருந்த நிலையிலும், வளர்ச்சி பெற்ற முதிர்ந்த ஆன்மாக்கள் அற்பத்தனத்தை உதறி, மனவுறுதி தருமென்று துன்பத்தை ஏற்பர். ஆடவர்களை விடப் பெண்டிர் பொறுமையின் மிகுதியைக் காட்டி யிருக்கின்றனர். தாங்கள் விரும்புகிற ஆடவரின் பிழைகளையும் கடுங் குற்றங்களையும் கூட அவர்கள் மறந்து விடுவர்.

அவர்களிடத்துச் சிறந்ததோர் தெய்வத்தன்மை யிருக்கிறது; அதை நாமும் அடைவது நன்மையாகும்.

உயர்ந்த வாழ்விற்குக் குழந்தைகள் பெருந்துணையாவர். தம் மக்கள் மீது பெற்றோர் கொண்டுள்ள இயற்கையான அன்பு, அவர்கள் குழந்தைகளோடு கொள்ளும் உணர்ச்சியும் அனுபவமும் நிறைந்த சுறுசுறுப்பான தோழமையினால் வெளிப்படுகிறது. குழந்தைகளுக்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளைக் கவனியாது தங்களின்பத்தையே நாடித் திரியும் பெற்றோர்கள் குழந்தைகளை முற்றிலும் புறக்கணிப்பதும், அசட்டை செய்வதும் அண்மைக் காலத்திய விபரீத விளைவுகள். அரசினர் நடத்தும் குழந்தை வளர்ப்பு நிலையங்களைப் பற்றிக் (*state nurseries*) கேள்விப்படுகிறோம். அவை ஒருகாலும் மக்களால் விரும்பப்பட மாட்டா. பலவகைப்பட்ட தங்களுடைய வளர்ச்சிக்குப் பெற்றோருடைய அன்பும் புரிந்து கொள்ளும் தன்மையும் குழந்தைகளுக்குத் தேவை. பெற்றோர்களுக்கு மாற்றாக வேறெவரும் இருக்க முடியாது. பெற்றோர்களது ஆன்மிக வாழ்க்கை ஆழ்ந்ததாக இருக்கும் வரையில் அவர்கள் தங்கள் நிலையை இழந்து பிறருக்கு இடம் கொடுக்க இசையமாட்டார்கள். திருமண விலக்குகளை நாடுவோரில் பெரும்பான்மையோருக்குக் குழந்தைகள் இல்லை என்பதையே, திருமண விலக்குகளின் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. மக்கட் செல்வம் பெறவேண்டுமென்ற பேரவா பெரும்பாலான பெண்டிரிடத்தும், ஆடவரிடத்தும்கூட, தீவிரமாக இருக்கிறது. அது அழியாதவரையில் திருமணமென்பது வாழ்க்கை முழுதும் நீடிக்கும் பிணைப்பையே குறிக்கும்.

அறியாமையின் மேலும், புறக்கட்டாயத்தின் மேலும் அமைக்கப்பட்டதும், நிலையற்றதும், மூடிவைக்கப்பட்டதுமான பண்பு உண்மையான பண்பாகாது, என்று நவீன கால அமைதியின்மை நமக்கு எச்சரிக்கை செய்கிறது.

அறியாமையினால் ஏற்படும் கபடில்லாமையைவிட அறிவின் அடிப்படையில் தோன்றிய கட்டுப்பாடு மேலானது. ஒருதாரக் கொள்கை ஒரு சிறந்த குறிக்கோள் என்பதில் ஐயமில்லையாயினும் அது இலட்சக் கணக்கான பெண்டிர்மேல் இணைவிழைச்சு வாழ்க்கையில் வறுமையையும் விபசாரத்தையும் சுமத்துவதால் அதனை மீண்டும் ஆராயவேண்டும் என்று புதுமை மனத்தோர் வற்புறுத்துவது சரியே. கட்டுப்பாடற்ற திருமணத்தைப்போலவே கடமையும் கட்டுப்பாடுமுள்ள திருமணத்திலும் பொறுப்பற்ற தன்மை உண்டு. ஆடவருக்கும், பெண்டிருக்கும் பொதுவான ஒரேவிதமான ஒழுக்கக் கட்டுப்பாடு என்பது பொதுத் தரக் குறைவினால் அல்ல, ஆனால் தர உயர்வினால் ஏற்படவேண்டும். பெண்டிர், ஆடவர் நிலைக்குத் தங்களைத் தாழ்த்திக் கொள்வதற்குப் பதிலாக, பெண்டிர் நிலைக்கு ஆடவர் தங்களை உயர்த்திக்கொள்ளவேண்டும். இதுவரையில் பல தலைமுறைகளாக அவர்களைப் பாதித்த தண்டனைகளினின்றும் பெண்டிரைப் புதிய அறிவு விடுவித்திருக்கிறது. உண்மைகளை நம்பிக்கையுடனும் கனிவுடனும் நாம் நோக்கும் வரையில், எவ்வளவு அபாயகரமானவையா யிருப்பினும் இப் புதிய சுதந்திரமும் அறிவும் நம்மைப் பாழ்ப்படுத்த மாட்டா. மாறுதல்கள் ஏற்படுகின்ற இடைக்காலத்தில் விரும்பத்தகாத விளைவுகள் நமக்கு ஏற்படலாம் என்பது உண்மை. நவீன காலப் பள்ளிப் பெண்கள் முந்தைய தலைமுறைகளைக் காட்டிலும் இன்ப வாழ்க்கையைப் பற்றி அதிகமாக அறிந்திருக்கிறார்கள். புதுக் கருத்துக்களை அவர்கள் ஏற்று எடுத்துக் கூறுவது ஒழுக்கநெறி தவறுதவர்கட்குத் திகைப்பை அளிக்கிறது. இரு பாலாரும் சேர்ந்து பயிலும் கல்லூரிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் ஒழுங்கீனத்திற்குப் பல தூண்டுதல்கள் இருக்கின்றன.

பெண்களின் அமைதியின்மைக்குக் காரணம் அவர்கள் தங்கள் வாழ்க்கைத் துறையைத் தெரிந்துகொள்ளா

திருத்தலே. "மனிதனுடைய அன்பு அவனது வாழ்க்கையில் ஒரு பகுதி; அது பெண்ணின் முழு வாழ்வு" என்று பைரன் (*Byron*) கூறுகிறுர். குடும்பம் பெண்ணிற்கு உரிய இடம் என்று நாம் பொதுவாக நம்புகிறோம். ஆனுல் குடும்பங்கள் மறைந்துகொண்டிருக்கின்றன. இயந்திரங்களினுல் வீட்டுவேலேகள் குறைந்திருப்பதாலும் இல்லங்களின் ஸ்தானத்தை உணவு விடுதிகள் கைப்பற்றிக் கொண்டதாலும், ஏராளமான சக்தி போதுமான வேலே யின்றித் தேங்கியிருக்க இடம் ஏற்பட்டிருக்கிறது. எப்பொழுதும் இருப்பதைக் காட்டிலும் கணவன் அதிக அலுவலாய் இருக்கிறுன். மனேவிக்குச் சோம்பிக் கழிக்கும் காலம் மிகுந்திருக்கிறது. தன்னே மறந்து ஈடுபடக்கூடிய வேலேயின்மையால் அவள் மகிழ்ச்சியற்று, மன நோய்க்கு உட்பட்டு, பயனும் பொருளும் நோக்கமுமில்லாத வெறும் கழிவுப் பொருளாகிருள். பணமும் ஓய்வும் கொண்ட அவள் வேலேயற்ற தனது காலத்தை வேடிக்கை, மடமை, இன்பம், சுயதிருப்தி ஆகியவற்ருல் நிரப்பிக்கொள்ள முனேந்தால் அவளே நாம் குறைகூற முடியாது. அவளுடைய பழைய வேலே மறைந்துவிட்டது, புதிய வேலே வந்து சேரவில்லே. திருமணம் போதுமான அல்லது முழுநேர அலுவலாக இப்பொழுது இல்லே. மணமான பெண்களின் நிலேயே இவ்வாறு ஆபத்தாயிருந்தால், மணமாகாத பெண்கள், குழந்தையில்லாத கைம்பெண்கள், வயது வந்த பிறகோ மணமான பிறகோ பிரிந்து செல்லும் குழந்தைகளேப் பெற்ற தனிக் குடும்ப முறையைப் பின்பற்றி நிற்கும் சமூகத்துக் கைம்பெண்கள் ஆகியவர்களது நிலேமை இன்னும் மோசமாயிருக்கிறது. இத் துன்பத்திற்கெல்லாம் மூலகாரணம் பெண்டிருக்குப் போதுமான வேலே இல்லாததுதான். வெற்றுவாழ்க்கையின் வறுமை அவர்களே இயற்கைக்கு மாருன வழிகளில் விரட்டுகிறது. அவர்களுக்கு உகந்த தொழில்களே அளிப்பதுதான் நியாயமாகும்.

உடலின் இன்பப் பரவசத்தை உயர்த்திக் காட்டி வற்புறுத்தும் இன்றைய பழக்கம் தவருனது. பகுத்தறிவுக் கட்டுப்பாட்டின் வழியே செல்லாது நேரடியாக உணர்ச்சி ஊற்றிலிருந்து தோன்றும் செயல், மனிதனை ஆதி நிலைக்கு, பகுத்தறிவற்ற நிலைக்கு-ஏன், மிருகங்கள் நிலைக்குத் திருப்புவதாகும். கட்டுப்பாடு அறிவின் பாற்பட்டது. அதனிடத்தை உணர்ச்சி கைப்பற்றிவிடக் கூடாது. தன்னியல்பு வெளியீடும் (*Self-expression*) புலனுணர்ச்சியும் ஒன்ருகா. நாம் சுதந்திரமாக இருக்கவேண்டுமென்பதும், நம்முள்ளிருந்து எழாத அடக்குமுறைகளை ஒத்துக் கொள்ளக் கூடாது என்பதும் கொள்கை அளவில் மிகவும் சரி என்ருலும், முதிராத இளம் உள்ளங்களை இக் கொள்கையைக் கடைப்பிடிக்க அனுமதித்தால் ஆபத்து விளையும். அகக்கட்டுப்பாடுகள் புறக்கட்டுப்பாடுகளினின்றும் தோன்றுகின்றன. புறக்கட்டுப்பாடுகள் இனித் தேவையில்லை என்ற உயர்ந்த நிலையை அடைந்தவர்களே புறக் கட்டுப்பாடுகளுக்குக் கீழ்ப்படியாதிருக்க உரிமை உள்ளவர்கள். ஒருவன் சுதந்தரம் பெறுவதற்குமுன் தன்னைத் தானே கட்டுப்படுத்திக்கொள்ள அவனுக்கு உதவிசெய்ய வேண்டும். தங்களுடைய விருப்பத் தோன்றல்கட்கு உகந்தமாதிரி தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளும் வகையில் சிறுவர்களும் முதிர்ச்சி யடையாதவர்களும் தங்களுக்குத் தாங்களே நீதிபதியாக இருக்கக்கூடாது. திருமணத்தின் தன்மையையும், நோக்கத்தையும் பற்றித் தவருன குறிக்கோள்களைக்கொண்டு, எளிதாகவும் கவலையின்றியும் திருமணத்தை மேற்கொள்ளக்கூடாது. ஒரு மணி நேரம் மட்டுமே நிலைத்திருக்கும் திருமணத்தை "சட்ட பூர்வமானது" என்று புதுமையிற் புதுமைபேணுவோர் கூறுவது நகைப்பிற்குரியது. பரிசோதனைத் திருமணம் என்பது சட்டத்திற்கு உட்பட்ட விபசாரம் என்பதற்கு மறுபெயராகும். அம்முறை பண்டைக்கால சம்பிர

தாயத்தைப் பாராதது மட்டுமல்ல, மனித இனத்தின் எதிர்கால நோக்கத்தையும் பாராது விடுகின்றது. காம உணர்ச்சியின் நிறைவு ஒன்றே திருமணத்தின் குறிக்கோள், ஆன்மிக நிறைவு அன்று என அம்முறை கருதுகிறது. கட்டுப்பாடுகளை எதிர்த்துப் புரட்சி செய்வதில் கொள்ளும் உற்சாகத்தில் ஆடவரும் பெண்டிரும் மனப்பூர்வமாக அவ்விதத் திருமணங்களை ஏற்கலாம். ஆனால் அவர்கள் மனப்பக்குவம் அடையும்பொழுது, அவை இணைவிழைச்சுத் துறையிலோ சமூகத் துறையிலோ ஆன்மிகத் துறையிலோ தங்களுக்குப் பயன்தரத்தக்கவை அல்ல என உணர்வர்.

## பொருளாதாரத் தொடர்புகள்

ஒரு பொருளைத் தவருகப் பயன் படுத்துவது அதன் முறையான பயன்களைக் குறைத்துவிடாது. விஞ்ஞானம் நமது கைகளில் தொடர்ந்து கொடுத்துவரும் ஆற்றலையும் கருவிகளையும் தக்கமுறையில் பயன்படுத்திஞல் இயற்கையின் கொடிய கூறுகளினின்றும் மனிதன் மதிப்பனவற்றை நாம் பாதுகாத்துக்கொள்ளலாம். அடிமைகளை வைத்திருப்பதன் மூலம் பண்டைக்காலத்துக்கிரேக்கர்கள் பெற்ற பண்பாடு, இன்பம், இவற்றுக்கான வாய்ப்புக்களைச் சமூக முழுமையும் அடைய விஞ்ஞானம் துணைசெய்யும். ஆலைத் துணியைவிடக் கைத்தறித்துணி மேலானது என்ருே, மோட்டார் வண்டியைவிட மாட்டுவண்டி சிறந்ததென்ருே சமயம் கூறுவதில்லை. இயந்திரங்களுக்கு அடிமையாகும் நிலையை வளர்க்காமல் நாம் மிக்க விழிப்புடன் மட்டும் இருக்கவேண்டும். பசுமையான வயல்களையும் நீல வானத்தையும் சிறிதேனும் காணமுடியாதபடி இருட்டறைகளிலும், புகைமிகுந்த நகரங்களிலும் மனிதர்களை அடைக்கக் காரணமான இயந்திரங்களைப் பயன்படுத்தக் கூடாது.

நாம் நம்முடைய வேலையில் ஈடுபாடுகொள்ளா ததுதான் உழைப்பிற்கும்ஓய்விற்கும் இடையே வேற்றுமை தோன்றக் காரணம். மனத்தை இன்புறச் செய்யக்கூடிய வேலையில் அறிவு தீவிரமாகப் பயன்படுத்தப்படுவதில்லை. சமூகத்திற்கு வாழ்க்கைத் தேவைகளைத் தருவதற்காக நாம் சலிப்பைப் பொறுத்துக்கொள்ளுகிறோம். ஆனால் நாம் வேலையை இனிமையானதாகச் செய்யவேண்டும். தொழிலாளிகள் தொழிலின் பொது நிருவாகத்தில் அக்கறை கொள்ளவேண்டும்.

மனித நடத்தையை நிச்சயிக்கும் தேவைகள் இருவகைப்படும்; பொருள், இன்பம், பதவி, அதிகாரம் போன்ற பொருளாதார, உலகியல் தொடர்புடையவை ஒருவகை; நேர்மை, அறிவு, நியாயம், பரிவு, புரிந்து கொள்ளும் ஆற்றல், நீதி, தொண்டு ஆகிய சமூக, ஆன்மிகத் தொடர்புகொண்டவை மற்றொருவகை. நாம் செய்யும் வேலையைப் பொறுத்த அளவில் அது உலகியல் மதிப்புக்களாய் முறைப்படுத்தப்பட வேண்டிய ஒரு வியாபாரம் என்ற மனோபாவத்தைக் கைக்கொள்ளாது, சமூகத் தேவைகளைத் திருப்திசெய்ய நாம் சமூகத்திற்குச் செய்யும் பணி என்ற உணர்ச்சியையே கைக்கொள்ளவேண்டும். பல்வகைப்பட்ட தொழிலாளிகள் பிரிந்து தத்தம் வழி செல்லாது, தாங்கள் உயிருள்ள ஒரு குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற உயிர்ப்புள்ள உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஒருவரையொருவர் உணராமை என்ற குறையைத் தவிர்த்து, தனிப்பட்டவரிலும் குழுவிலும் மனித ஆன்மிக வாழ்க்கை ஒற்றுமையென்ற உயிர்ப்புள்ள பரந்த உணர்ச்சியை அடையவேண்டும். பல்வேறு வகையில் செயல்படும் அமைப்புக்கள் ஒரே தொகுதியை அடைய வேண்டும். பல்வேறுவகையில் செயல்படும் அமைப்புக்கள் ஒரே தொகுதியைச் சார்ந்தவை என்ற ஒற்றுமை உணர்ச்சியை வளர்த்துக்கொள்வதோடு அவை ஒன்றை ஒன்று

சார்ந்துள்ளவை என்ற உணர்வால் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

செல்வமே அனைத்தும் ஆகாது. மிகச்சிறந்த பொருள்களை அதனால் விலைக்கு வாங்கமுடியாது. மன இன்பம், இதய மகிழ்ச்சி, போதுமென்ற மனம், நல்லெண்ணம் ஆகிய மிக விரும்பத்தக்க உடைமைகளைப் பணத்தால் பெறமுடியாது. பயன்தருவனவற்றைப் பேணுவது ஒன்றே வாழ்க்கையில் இன்றியமையாத ஒரு வழிபாடன்று. மனிதர்கள் வெறும் தொழிலாளர்களுமல்ல, செல்வத்தைப் பெருக்குபவர்களுமல்ல. அவர்கள் மனித இயல்பு உள்ளவர்களே; எழிலில் நாட்டம், மனப்பக்குவம் போன்ற உயர் மதிப்புக்கள் அவர்களைக் கவர்கின்றன. மன அமைதியும், சுதந்திரமும் நமக்கு உதவமாட்டா. மனிதனுடைய பொருள் நிலையைச் செம்மைப் படுத்தும் ஆவலில், மனிதவாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் முறைகளை மாற்றுவதிலும் இன்றைய வாழ்க்கையின் சிக்கலான அமைப்புக்களின் வெளி உருவை மாற்றுவதிலும் நாம் முனைந்துவிடுகிறோம். ஆனால், மனிதன் விரும்பத்தக்கவற்றின் தன்மையும் அளவும் உயர்த்தப்படாதவரையில் சமூக வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் முறைகள், இயந்திரம்போல் தொழில்புரியும் அமைப்புக்கள் ஆகியவற்றின் முன்னேற்றம் நமக்கு உதவி செய்யா. விஞ்ஞானம் வாழ்க்கையின் வறுமையைப் போக்கவும், ஓய்வைப் பெறவும் உதவுகின்றது; ஆனால், நாம் ஓய்வைச் சரியான முறையில் பயன்படுத்தக் கற்றுக்கொள்ளவேண்டும். சரியான கல்வி நமக்கு இதற்கு உதவக்கூடும்.

## அரசியல்

மக்களாட்சி என்பதற்குச் சரியான பொருள் சமுதாயம் தன்னைத்தானே ஆண்டுகொள்ளுதல் என்பதாகும். மிகக் குறைந்த அளவில் நாம் ஆளப்படுவதே சிறந்த ஆட்சி. மனித இயற்கையின் இலட்சியக்கண்கொண்டு

பார்க்கர் தவர்கள் அரசினரின் ஆதிக்கம் மிக வேண்டும் என்று வேண்டுகிருர்கள். மனித இயற்கையில் உள்ள காட்டு மிராண்டித்தனத்தைவிட, அதன் பெருந்தன்மை நம்மை அதிகம் ஈர்க்குமாஞல், புற நிருவாக அமைப்புக்களை நம் இயற்கைக்குத் தடையென நாம் கருதமாட்டோம்.

மக்களாட்சி பொதுமக்களது சித்தத்தையே அரசு (*General will as sovereign*) என்று கருதுவதாகச் சொல்லப்படுகிறது. ஆஞல், சுங்கவரிச் சீர் திருத்தம் (*tariff reform*) அல்லது இந்திய அரசியலமைப்புத் திட்டம் போன்ற நுட்பமான பிரச்சினைகளை மக்கள் சித்தத்தைக்கொண்டு தீர்மானிக்க முடியாது. உண்மையான மக்களாட்சியாக இல்லாததஞல்தான் பல நாடுகளில் மக்களாட்சி வெற்றியடைந்திருக்கிறது. மக்களாட்சியென்பது இன்னமும் ஒரு குறிக்கோளாகவே இருந்து வருகிறது. அதை ஒரு செயல்முறைத் தத்துவமாக நாம் ஏற்றுக்கொள்ளும்போது மனித ஆளுமை என்பதற்கே சொந்தமான - பறிக்கமுடியாத (*inalienable*) உரிமைகள் இருக்கின்றன என்றும், பிறர் எப்பாலவராயினும் எத்துறையினராயினும் அவர்களோடு உறவாடும்பொழுது அவ்வுரிமைகளை மதிக்க வேண்டும் என்றும் கருதுகின்ரேம். தனித்தன்மை தூய்மையானது. ஒவ்வொருவனும் தனது இயற்கையை வளர்த்துக்கொள்ள அனுமதிக்கப் படவேண்டும். ஒவ்வொரு மனிதனும் தன்ஞல் எட்டிப் பிடிக்கக்கூடிய மிக உயர்ந்த நிலையின் அருகில் செல்ல இயலுதல் வேண்டும். பிறவி இயல்புகள், சிறப்பியல்புகள் அல்லது தனிப்பட்ட முயற்சிகள் எவ்வாறு இருப்பினும் எல்லா மனிதரும் தத்துவம், இலக்கியம், கலை, அறிவியல், சட்டம், அரசியல் ஆகிய துறைகளிலுள்ள பொருள்களை மதிப்பிட ஒத்த தகுதியுள்ளவர்கள் என்பது மக்களாட்சியின் பொருள் அன்று. ஐன்ஸ்டைன் (*Einstein*) கண்ட சித்தாந்தத்தின் உண்மையைப் பொது வாக்கெடுப்பின் மூலம் நாம் தீர்மானிக்கமுடியாது. மனிதன் பகுத்தறிவு

படைத்தவன் என்பதனுலே அவ்வன் எப்பொழுதும் அறிவுகாட்டும் வழியே நடப்பான் என்பதோ, தனது அறிவைச் சிறப்பாக எல்லாத் துறைகளிலும் பயன்படுத்து வான் என்பதோ உறுதியில்லை. மக்களாட்சி என்ருல் நாம் அனைவரும் சமம் என்று பொருளில்லை. உடலிலும் அறிவிலும் மனிதர்கள் சமமாக இருக்கமாட்டார்கள். அவர்கள் பருத்தோ மெலிந்தோ, நெட்டையாகவோ குள்ளமாகவோ, பெரியவர்களாகவோ சிறியவர்களாகவோ இருப்பர். வேற்றுமைகளை என்றும் ஒழிக்க முடியாது. சமூக அமைப்பு எதுவும் முற்றிலும் சமமான வாய்ப்புக் களைத் தரமுடியாது என்பதும் உண்மையாகும். ஒருவன் வாய்ப்பைப் பெறுவது அவன் இருக்கும் சமூக நிலையை யும், அந்நிலையில் அவன் இயங்கும் முறையையும் பொறுத்தே இருக்கிறது. இருப்பினும் வாய்ப்புச் சமத்து வம் என்பது ஒரு சரியான சமூகக் குறிக்கோளாகும். அறியாமை ஏழ்மை என்ற தடைகளை நீக்கி, உயரிய கலை, இலக்கியம் ஆகியவற்றின் ஆழமான வேர்களை மக்களின் மனத்தில் புகுந்து பதியச் செய்யவேண்டும். நாட்டின் பண்பாட்டு நிலைமையை நாம் உயர்த்தவேண்டும். ஒவ் வொருவனும் தன்னை அறியவும், உணர்ச்சி, எண்ணம், செயல் ஆகியவற்றில் ஒற்றுமையை அடையவும் நாம் உதவவேண்டும். மக்களாட்சி ஒரு இயற்கை நிலையன்று. ஆனுல், அது முயற்சியினுலும் கல்வியினுலும் அடைய வேண்டிய ஒரு குறிக்கோள். ஓர் அரசியல் திட்டம் என்ற முறையில் அதன் தற்காலக் குறைபாடு என்ன வென்ருல் தனிப்பட்ட வாக்காளர் நேர்மையாகவும், அறி விற்கேற்பவும் நடந்து கொள்ளாததே. வாக்காளரின் அறிவும், தலைவர்களின் நேர்மையும் மேம்பாடு அடையும் பொழுது மக்களாட்சி அதிக வெற்றியுடன் இயங்க முடி யும். மக்களாட்சி பரிபூரண உயர்நிலைக்கு எவ்வளவு அதிகமாகக் குறைந்திருந்தாலும், நன்மைபுரிந்த எதேச் சாதிகாரம் நிலவிய சிறுகாலப் பகுதிகளை நீக்கிவிட்டுப்

பார்க்கும் பொழுது, முற்காலத்திய ஏனைய அரசு முறைகளைக் காட்டிலும் இதுவே சிறந்தது. வாக்காளர்கள் அலுவல்களை நடத்துவதில் கொள்ளும் பங்கின் மூலமாகக் குறைகூறலும் அதிருப்தியும் நிலைத்த தன்மையையும் வளர்க்கும்.

## சர்வதேச உறவுகள்

சம்பிரதாயக் கருத்துக்களைச் சொல்லுவதினாலும், கடவுளருளால் கிட்டும் என்ற நம்பிக்கையொன்றாலும் அழகிய சொற்றொடர்களாலும் மக்கள் பொது நல அரசை அடைந்துவிட முடியாது. நாடுகளிடையே சகோதரத்துவத்தையும் தோழமையையும் வளர்ப்பது இன்றியமையாத முன்னேற்பாடாகும். தவருக எண்ணுதலும், போலி நாட்டுப் பற்றும் இப்பொழுது ஆபத்தான வேலையைச் செய்துவருகின்றன. நாம் வெறுக்கும் நாடு நாம் அறியாத நாடாக இருக்கிறது. நியூமென் (*Newman*) குழந்தையாக இருந்தபொழுது நெப்போலிய யுத்தங்களில் கைதிகளாக்கப்பட்ட பிரெஞ்சுக்காரரை இலண்டன் வீதிகளில் நடத்திக்கொண்டு செல்வதைக் கண்டிருக்கிருர். அப்பொழுது திரண்டு வந்து வேடிக்கை பார்த்த ஆங்கிலேயக் கூட்டத்திலிருந்த சிலர் பிரெஞ்சு வீரர்களின் பெரிய மேலங்கியைத் தூக்கி உண்மையில் அவர்களுக்கு வால் இருக்கிறதா என்று பார்க்க முனைந்தனர் என்று அவர் கூறுகிருர். அவ்வளவு எளிதாகவும், தீவிரமாகவும் பிரெஞ்சுக்காரர்களை மனிதக்குரங்குகள் என்று ஆங்கிலேயர் நம்பினர். நம்முடைய பகைவர்களிடத்து, குரங்குகளின் வால்களைத் தேடாவிட்டாலும் அவற்றுக்கு இணையான தனித்த இன இயற்கைகளைக் காண்கிறோம். நம்முடைய பகைவர்கள் மனிதப் பிறவிகள் அல்லர், பேய்களின் அவதாரமே எனக் கருதுகிறோம். அண்மையில் இந்தியாவைப் பற்றி உணர்ச்சியைக் கிளறும் ஒரு நூல் கண்டோம். அதன்கண் இந்தியரனைவரையும்

குறைவுபடுத்தி, அவர்களை நிலவுலகினின்றே வெளியேற்றிவிடவேண்டும் என்றில்லாவிடினும் அவர்கள் நிரந்தர அடிமைகளாக இருத்தல் வேண்டும் என்று கொள்வது சரியென்று கூறப்பட்டிருக்கிறது. நாய்களைப்போல் சில சமயங்களில் மானக்கேடான பகுதிகளை முகர்வதற்குத் தான் நாடுகள் ஒன்றையொன்று அண்டுவதாகக் காணப் படுகின்றன என்று கார்லைல் (*Carlyle*) கூறிய குத்தலான உருவகம் இன்னும் உண்மையாகவே இருக்கிறது என அஞ்சுகிறேன். உலக அமைதி பண்பட்ட மனிதர்களின் உள்ளங்களும் மனச்சான்றுகளும் நெருங்கி வருதலையும் அறிவிலும் குறிக்கோள்களிலும் கூட்டுறவு பெருகி வருதலையும் சார்ந்திருக்கிறதேயன்றி, கையெழுத்திடப்பட்ட தஸ்தாவேசுகள், ஏட்டளவில் உள்ள ஒப்பந்தங்கள், அரசியல் உடன்பாடுகள், பொருளாதார இணைப்புக்கள் ஆகியவற்றைச் சார்ந்திருக்கவில்லை. அண்டை நாட்டவருடன் நமக்கு வேறுபாடுகள் இருந்தபோதிலும், உலகியல் வெற்றி, வணிகச் செழிப்பு ஆகியவற்றில் நமக்கு ஈடுபாடு இருக்கும்வரை, பகிர்ந்து கொள்ளும்போது குறையாத ஆன்மிகக் கருவூலத்தையும் மன இன்பங்களையும் நாடும் பொழுது, மனித இயற்கை எங்கும் ஒத்தமுறையில் இயங்குவதையே உணருகிறோம். அவை மட்டுமே பொருளாதாரப் பூசல்களின் கசப்பைக் குறைத்து, உலகப் பாதுகாப்பிற்குள்ள ஒரே வழியான மன ஒற்றுமைக்கும், ஒத்துணர்வுக்கும் நம்மைத் திருப்பும்.

எண்ண ஒற்றுமையையும், உணர்ச்சி ஒற்றுமையையும் பேணி வளர்ப்பதோடு போரைப்பற்றிய மக்கள் மனப்பான்மையையும் மாற்றியமைக்க வேண்டியிருக்கிறது. மக்கள் தங்கள் குறிக்கோள்களை எய்த என்றுமே போர்களை நம்பியிருந்தனரென்றும், இனியும் அவ்வாறே நம்பிக்கை கொள்வர் என்றும் ஐயக்கொள்கையினர் கூறுவதை நாம் நம்பத் தேவையில்லை. மனிதப்புலாலுண்ணும் பழக்கத்தை ஆதரிப்பவர்கள் இவ்வாறுதான் கூறினர். மனித

இனம் எப்பொழுதுமே மனித ஊனைத் தின்று வந்திருக்கிறது; இனியும் எப்பொழுதும் அவ்வாறே செய்யும் என்றனர். அடிமைத்தனம், ஒருவரோடொருவர் பொருதுதல் இவை போன்றவற்றை ஆதரித்தவர்கள், இவ்வாறுதான் கூறினர். மனிதர்களின் மனத்தை மெல்ல மாற்ற முடியும். சமாதானக் கொள்கை அல்லது அனைத்துநாட்டு இணைப்புக் கொள்கை என்பது கம்பியில்லாத் தந்தியையோ தொலைபேசியையோ போல உலகம் திடீரென்று ஏற்று உபயோகிக்கக் கூடிய விஞ்ஞான சாதனமல்ல. அது ஒரு நுண்ணிய செடி; அதை வளர்க்க அதிகக் காலம் தேவைப்படுகிறது. அதன் வளர்ச்சிக்குப் பொறுமையும், சகிப்புத்தன்மையும், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளுதலும், பணிவும் தேவை. குழவிப் பருவமுதல் மனித குலத்தின் ஒருமையில் நம்பிக்கை வைக்கும்படி மக்களை நாம் பயிற்றுவிக்கவேண்டும். அவர்களிடையே அமைதியை விரும்பும் மன உறுதியை வளர்த்து, போரென்பது தானே பிளவுற்ற வீட்டைக் குறிக்கும் என அறிவுறுத்த வேண்டும். கடவுளும் இயற்கையும் தெளிவுற ஒன்றுக இருக்கவேண்டும் என்று கருதிய ஒன்றில் போர்கள் செயற்கை விரோதங்களை ஏற்படுத்துகின்றன. "நீங்கள் உடன்பிறந்தோராக இருக்கும்பொழுது, ஒருவருக்கொருவர் ஏன் தீங்கிழைத்துக்கொள்கிறீர்கள்" என்பது உன்னதத் தக்கது. ஒருசிலருக்குப் பெருத்த கொள்ளை இலாபத்தையும் பலருக்குத் துன்பத்தையும் தரும் பண்படாத போருக்கத்தின்மேல் ஒரு போலிக் கவர்ச்சியை மனித அறிவு ஏற்றியிருக்கிறது. அதை வெளிப்படுத்த விடவேண்டும். வாழ்க்கை தூயதென்ற தீவிர உணர்ச்சியை நாம் வற்புறுத்தவேண்டும். போர்கள் கொடுமைக்கு நம்மைப் பழக்கப்படுத்தி, நாகரிகம் அடக்கத் திணறிக்கொண்டிருக்கும் கசப்பான உணர்ச்சிகளைப் பொதுமக்களின் மனத்தில் தூண்டிவிடுகின்றன என்பதை நாம் உணரவேண்டும். உடல் பற்றிய அல்லது வேறுவகையான கொடுமை, மக்க

ளது தாழ்ந்த வேட்கை இயல்புகளின்றும் தோன்றுகிறது. அதற்கு ஒருவித முக்கியத்துவமும் கிடையாது என்பது மட்டுமல்ல; அது சமூக மதிப்பெல்லாவற்றையும் அழிக்கக் கூடியது.

நமது நாட்டின் கொள்கையை முதலிலும் இறுதியிலும், எப்பொழுதும் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தும் நாட்டுப் பற்றுனது மயக்கி, மனித குலத்தின் உயர்ந்த நோக்கத்தை நம் கண்ணிற்குப் புலப்படாது மறைக்கின்றது. சிகாகோ டிரிப்யூன் (*Chicago Tribune*) என்ற செய்தித்தாள், "நமது நாடு, அயல் நாடுகளுடன் உறவாடும் பொழுது அது எப்பொழுதும் நேர்வழியில் நடக்கட்டும். எப்படியாயினும், சரியோ தவறோ, நமது நாடு" என்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. நாட்டுப்பெருமை, தன்மதிப்பு ஆகியவற்றிற்குத் தக்க இடம் உண்டு என்பதை இங்கு மறுக்கவில்லை. நாட்டுச் செருக்கும், விட்டுக்கொடாத தன்மையுமே பெருந்தீங்கு விளைவிக்கும். போலி நாட்டுப்பற்றே எல்லாவற்றையும் மன்னித்து நாட்டை ஒழுக்க விதிக்குப் புறம்பாக ஆக்கு கிறது. நாடு தவறிழைக்க முடியாது; அதைக் குறைகூற யாருக்கும் உரிமை யில்லை; அது தொடுக்கும் போர்களெல் லாம் நேர்மையானவை என்றெல்லாம் கருதுகிறது. அரசே 'முழுமுதற் சக்தி' என்ற இக்கொள்கை நாத்திகத் துக்கு இணையாகும். எனினும் இதுவே இக்காலப் புது உலகச் சமயமாகிறது. தன்னைப் பின்பற்றுவோர் தான் நினைத்தவற்றை யெல்லாம் செய்யவேண்டுமென்று இது எதிர்பார்க்கிறது. வேறெந்தச் சமயமும் இங்ஙனம் காரணமின்றி ஏராளமான மக்களைப் பலிகொடுக்க எதிர் பார்த்ததில்லை. இனம், நாடு ஆகியவற்றுக்கு அப்பாற் பட்ட மனிதகுலம் முழுவதையுமே மீட்கும் எண்ணம் கொண்டிருக்கின்றனர் போல்ஷவிக்குகள், (*bolshevists*) பொதுவுடைமையர். ருசியாவை ஒரு நாடாகக் கருதாது, தங்களது நம்பிக்கையைப் பரப்ப உதவும் ஒரு

சமயமாகவே கருதுகிறார்கள். குறுகிய மனப்பான்மையை வளர்க்கும் நாட்டுப் பற்றின் வலிமையைத் தளர்த்தும் வகையில், அவர்கள் சரியான திசையை நோக்கிச் செல் கிறார்கள். லெஸ்ஸிங் (*Lessing*) சொன்னார்: நாட்டுப் பற்று ஒரு வீரமான வலிமைக்குறைவு. அது இல்லாமல் இருப்பது நல்லது. வலிமையை விட உயர்ந்ததொரு விதி இருக்கிறது. நாட்டுப்பற்று எனும் ஆணவத்தைவிட ஓர் உயர்ந்த அன்பு இருக்கிறது. ஒருவருடைய சொந்த நாட்டிற்கு விசுவாசமாக இருப்பது அதைவிடப் பெரிதான மனிதகுல முழுமைக்கும் விசுவாசமாக இருப்பதோடு முரண்படாது. நாடுகள் மனித குலத்தின் இயற்கையான பிரிவுகள். அவற்றில் ஒவ்வொன்றும் தனது தனித்த கடந்த காலத்து வரலாறு பற்றிய வழக்கமுறைகளின் உந்தும் சத்தியால் முன்னுக்குச் செலுத்தப்படுகிறது. அளவுக்கு மிஞ்சி தனிப்பட்ட ஒன்றுக்கே ஆட்படுவது ஆபத்தானது. ஒருவன் தான் பிறந்த பொன்னாட்டைப் புகழ்வது தற்புகழ்ச்சியைப் போலவே கீழ்த்தரமானது என்று கருதப்படவேண்டும். கீழ்த்தரமான வணிகத் தரகர்களைப்போல் நம்முடைய சொந்த வாழ்க்கை அமைப்புகளையும், கொள்கைகளையும் புகழ்ந்து கொள்வ தில் பயனில்லை. நாட்டுப்பற்று வெற்றுப் புகழுமன்று, சகிப்புத் தன்மையற்ற நிலையுமன்று.

உலக ஒற்றுமையை ஏற்படுத்த இருவழிகள் இருக் கின்றன. அவை உலக ஆதிக்கம் அல்லது உலகப் பொதுநல அரசு என்பன. முன்னதை அடையப்பெற முடியாது; ஏனெனில், அதற்கு நாட்டுப்பற்று நிலையான தடையாக இருக்கிறது. உயிர்போகும் அளவிற்குப் போரிட்டாலன்றி இக்கனவு நிறைவேறாது. அப்போரில் உலகம் அழிந்துவிடலாம். ஒரு பெரிய இனம் தனது பெருமையை நிரூபிப்பதற்காக எஞ்சிய உலகம் ஏன் அழிக்கப்படவேண்டும்? போர்முறைகள் மிகுந்த அழிவை உண்டாக்குபவை, மிகவும் கொடியவை; எந்தப்

பேரரசும் உலகத்தின் மற்ற பகுதிகளை வெல்ல வசதிகளோ, வலிமையோ பெற்றிருக்கவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக இவ்வுலகத்தைப் படைத்தவன் மனித குலத்தை முற்றிலும் இணைந்த ஒரு தொகுதியாக ஆக்கவில்லை. நாடுகளைப் பல வேறுபட்ட இனங்களைக் கொண்டவைகளாக ஆக்கியிருக்கிருன். ஆனால், தேசீயக் கொள்கைகளை உயர்ந்த இணைப்பிலும் அனைத்து நாட்டு முயற்சியிலும் சேர்ப்பதற்கு மிக எளிய, அறிவுக்குப் பொருத்தமான முறையொன்று உளது. இப்பெரு முயற்சியில் ஒவ்வொரு நாடும் தனது பங்கைச் செவ்வனே செய்ய வேண்டும்.

மனிதகுலம் ஒழுங்குபடுத்தப்பட்ட தேசீயத் தொகுதிகளால் ஆக்கப்பட வேண்டும். அனைத்து நாட்டமைப்பு *(International order)* நீதியை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். ஐரோப்பாவின் வழியை ஆசியா வெற்றிகரமாகப் பின்பற்றிப் பொருளாதாரச் சுரண்டலையும் அரசியல் படையெடுப்பையும் எதிர்த்தால் ஐரோப்பாவின் நிலை ஆபத்தாக முடியும் என்று எண்ணுவது ஒரு விந்தையான தருக்க வகையாகும். நமது நாட்டுப்பற்று தெய்வங்களின் திருவுள்ளம், மற்றவர்களுடைய நாட்டுப்பற்று சாத்தானின் வேலை. நடைமுறையிலுள்ள சுரண்டல் வகைகளை எந்த நாடாவது ஏற்க மறுத்தால் அந்த நாட்டை நாம் ஓர் அபாயமென்று கூறுகிறோம். உலகத்தின் பாதுகாப்பு சில நாடுகளின் அடிமைத்தனத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. ஆனால், எல்லாருடைய விடுதலையின்மேல் அது அமைக்கப்பட்டிருக்கிறது. அனைத்துநாட்டுக் கூட்டுறவுக்குத் தேசீய விடுதலை இன்றியமையாத முன்தேவையாகும். ஒவ்வொரு மக்களின் நுண்மாண் நுழைபுலமும் அங்கீகரிக்கப்பட உரிமை கொண்டது. எல்லா நாட்டினருக்கும் விடுதலை அளிப்பது முழு உலகத்தின் நோக்கமும் முயற்சியுமாய் இருத்தல் வேண்டும். உலகத்தின் சில பகுதிகள் மற்ற பகுதிகளை

விடப் பின் தங்கி இருக்கக்கூடும். பின் தங்கியவர்களுடைய குறைபாடு நமது வாய்ப்பாகப் பயன்படுத்தக் கூடாது. தன் அயலான் உதவியற்று இருக்கும்பொழுது அவனது நிலையைத் தனக்கு ஏற்றவகையில் பயன்படுத்திக்கொள்பவனை எவ்வாறு நேர்மையாளர் குற்றவாளியாகக் கருதுவரோ, அவ்வாறே ஒருநாடு வலிமை குன்றிய தன் அண்டைநாட்டை அச்சுறுத்தினலும் அந்நாட்டைக் குற்றவாளியாகக் கொள்வர். தனி மனிதர்களைப் போலவே நாடுகளும் ஒத்துணர்வை எதிர்நோக்கி இருக்கின்றன. நீண்டகால அழுக்காறுகள் முதலியவற்றிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளப் பாடுபடும் மக்களிடம், அரசியல் துறையில் முன்னேற்றம் அடைந்துள்ள நாட்டவர் ஒத்துணர்வையும், தொண்டு மனப்பான்மையையும் காட்டவேண்டுமேயல்லாது, அதிகாரத்தையும் கீழ்நிலையிலுள்ளோருக்குக் காட்டும் பரிவையும் காட்டக் கூடாது. கீழைநாடுகளின் விழிப்பை ஐரோப்பாவின் தீங்காகக் கருதலாகாது. சீனு கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்தியா விடுதலைபெறும் காலம் அணுகி விட்டது.[1] துருக்கி, பாரசீகம், ஆப்கானிஸ்தானம் ஆகிய நாடுகள் வேகமாக நவீன நிலைபெற்று வருகின்றன. இவையெல்லாம் உலகத்தின் நன்மைக்கே. பிற நாடுகளை மனத்துட் கொள்ளாது எந்த நாடும் வாழ முடியாது. நாடுகளிடையே ஒன்றையொன்று தழுவி நிற்கும் தொடர்பு விரைவாக மிகுந்து வருகின்றது. மனித குலத்தின் விதியில் நமக்குள்ள நம்பிக்கை அடக்குமுறையையும், அநீதியையும் காணுமிடமெல்லாம் எதிர்த்துப் போரர்ட நமக்குள் ஓர் உற்சாகத்தை மூட்ட வேண்டும்.

தகுதியான குறிக்கோள்கள் மட்டும் போதா; செயல் நுணுக்கமும் தேவை. பொதுமக்கள் கருத்திற்கு அறிவு மெருகிட அனைத்து நாட்டுச் சங்கமும், கெல்லாக் (*Kellog*

---

[1] In a sense this is prophetic as this book was first published long before India attained independence.

*Pact)* உடன்படிக்கையும் பயனுள்ள கருவிகள். இருந்த போதிலும், இச்சங்கம் நடைமுறை நிலைமையை நீடித் திருக்கச் செய்யவும், காக்கவும், நேசநாடுகள் திட்டமிட் டமைத்த ஒரு கருவியே என ஆழ்ந்து வேரூன்றி அதிகம் பரந்ததோர் ஐயப்பாடு நிலவி வருகின்றது. எல்லா நாடு களுக்கும் சுதந்திரம், பாதுகாப்பு ஆகியவற்றைக் கொடுக் கக்கூடிய மிகச் சிறந்த நிலைகளை அளிப்பதற்கே உழைக்க உறுதிகொண்ட ஓரமைப்பு இச் சங்கம் என்று பொதுவாக அது ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஒவ்வொரு நாடும் தற்காப்புக்காக, சந்தர்ப்பங்களைக் கொண்டு போர் மேற் கொள்ளுதல் தேவையா, இல்லையா என்று உறுதி செய்வ தற்கு அந்த நாட்டுக்குத்தான் உரிமை, என்று கெல்லாக் உடன்பாட்டை ஆக்கியோர் அதில் கூறியிருப்பது அவ் உடன்படிக்கையின் மதிப்பை மிகுதியும் குறைத்து விட்டது. போரை அரசாங்க முறையில் ஒரு கருவியாகக் கருதாது விட்டுவிடவேண்டுமானால் எவ்வித நிபந்தனையு மின்றி அவ்வாறு செய்யவேண்டும். நியாயமான போர் என ஒன்று ஒருபோதும் இருக்கமுடியாது. போரை அர சாங்க முறையில் ஒரு கருவியாகக் கொள்ளாது அதை நாம் விட்டுவிடவேண்டும். பாதுகாப்பின் பொருட்டு மேற்கொள்ளப்பட்டாலும் நாம் அதைச் சரியானது என்று கொள்ளக்கூடாது. பாதுகாப்பு என்பது எதிர்கால ஆபத்துக்களையும் தன்னுள் சேர்த்துக்கொண்டிருப்ப தாகக்கொண்டு அதன் காரணமாக ஆக்கிரமிப்பைச் சரி யென்று காட்டத்துணியலாம். யாவும் சாம்பல் நிறமாக உள்ள ஒரு நாட்டிலே ஒளிக்கும் இருட்டிற்கு மிடையே ஒரு கோடிட்டு வரையறுக்க முடியாது. மேலும் பலாத் காரம் உறுதியாக எதிர்ப் பலாத்காரத்தைத் தோற்று விக்கும். உண்மை நிலைபெற வாய்ப்பு இருக்காது. நாடு கள் தத்தம் பாதையில் சென்றுகொண்டிருக்கும்வரை

பூசல்கள் இருந்தே தீரும். தங்கள் பொருள்களை விற்க, புதியனவும் என்றும் விரிவடைவனவுமாகிய சந்தைகளைக் கண்டுபிடிப்பதில் உலகத்தில் நாடுகள் ஈடுபட்டிருக்கும் பொழுது, நிலவுலகின் மேற்பரப்பிலுள்ள ஒவ்வொரு சந்தியிலும் அவை போட்டியின்பேரில் ஒன்றையொன்று அவசியம் சந்திக்க நேரிடும். ஆனால், இந்தப் பூசல்களைப் பகுத்தறிவினால் தீர்த்துக்கொள்ள வேண்டுமேயன்றிப் பலாத்காரத்தினாலல்ல. ஒரு பொதுவான சட்டக் கோட்பாட்டை நாம் ஏற்படுத்த வேண்டும். உலகம் முழுவதும் ஒப்புக் கொள்ளும் தீர்ப்பை வழங்கக்கூடிய ஓர் உயர்ந்த நீதிமன்றத்தை அமைக்க வேண்டும். அதன் தீர்ப்புக்களை நிறைவேற்ற ஒரு காவற்படையை உருவாக்கவேண்டும். வல்லரசுகள் தங்கள் ஆட்சியில் உள்ள நாட்டில் இம்மியேனும் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லாதவரையிலும், தங்கள் ஆளுகை உரிமையை விடத்தயாராக இல்லாமல் அவசியம் நேர்கிறபொழுது அதைப் பலாத்காரத்தினால் காக்க முனைந்திருக்கும் வரையிலும், அனைத்து நாட்டு அமைப்பும், கெல்லாக் உடன்படிக்கையும் கேலிக் கூத்தாகும்.

சமயம் பற்றிய கருத்துவாதம் உலகம் கண்ட அரசியல் கருவிகளுக்குள் அமைதியை நிலைநாட்டக்கூடிய தகுதிவாய்ந்ததென்று நம்பலாம். கடமைகள்-உரிமைகள் ஆகியவற்றினாலேயே ஊன்றி நிற்கும்வரையிலும், மனிதருடைய முரணான விருப்பங்களையும் நம்பிக்கைகளையும் ஒற்றுமைப்படுத்த முடியாது. உடன்படிக்கைகளும், அரசதந்திரச் செயல்களும் உணர்ச்சியை அடக்கலாம். ஆனால், அச்சத்தைப் போக்கமாட்டா. உலகம் மனிதகுலத்தின் மேல் உள்ள அன்பினால் உந்தப்பட வேண்டும். முழு உலகத்தின் மாறுதலுக்குக் காத்திராமல் தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்தும், உலகம் ஒரே குடும்பம் என்ற

உண்மையை நிலைநாட்டக்கூடிய சமயவீரர்கள் நமக்குத் தேவை. ஸ்டாட்ஹோல்டரின் (*Stabtholder*) "செயல்முறையில் இறங்க எனக்கு நம்பிக்கை தேவை இல்லை, விடாமுயற்சியுடன் ஈடுபட வெற்றியும் தேவையில்லை" என்ற குறிக்கோளை ஒப்புக்கொள்ளும் சமய வீரர்கள் நமக்குத் தேவை.

கால் நூற்ருண்டுக்கு முன்னரே இங்கிலாந்திலுள்ள கேகன் பால், ட்ரென்ச் ட்ரூப்னர் எனும் வெளியீட்டகத்தாரின் புகழ்மிக்க "இன்றும் நாளையும்" என்ற தொடரில் முதன்முதல் பதிப்பிக்கப்பெற்று, பின்னர் இந்தியாவில் பம்பாயிலுள்ள 'ஹிந்த் கிதாப்ஸ்' எனும் பதிப்பகத்தாரால் 1948ல் வெளியிடப்பெற்றுப் பல பதிப்புகள் கண்ட "கல்கி அல்லது நாகரிகத்தின் எதிர்காலம்" எனும் இச்சிறு நூல் இலக்கியப் புகழ் பெற்றுச் சிறந்து விளங்குகிறது. மனிதன் தனது நனவு வாழ்க்கையில் பல்வேறு உணர்ச்சிகள் முரண்பட்டு நிற்பதைக் கவலும் நெஞ்சத்துடன் தீவிரமாக உணர்ந்திருக்கிருன். இன்றைய உளவியல் வல்லுநரும், மனிதனுடைய நனவு விருப்பங்களுக்கும் நனவு நிலையில் அறியப்படாத அடிமனத்து ஆசைகளுக்கும் இடையே மேலும் தீவிர முரண்பாடு உளதென்பதை வெளிப்படுத்தியிருக்கிருர்கள். குடும்பம், சமூகம், அரசியல், பொருளாதாரம், சமயம் முதலிய வாழ்க்கை நிலைகளிலும், அறிவியலின் முன்னேற்றமும் தொழில் துறையில் புதிய கண்டுபிடிப்புகளின் வெற்றியும் இருந்தும் குறைபலமுள்ள ஒரு நாகரித்தின் பின்னணியிலும் மனிதனை வைத்துப் பார்க்கிறபொழுது, அவனது ஆளுமைக்கு (*personality*) சால்பினையும் அமைதியையும் மீண்டும் கொணரக் கூடியது தனிப்பட்ட ஆன்மீகப் பண்பாடே எனலாம்.

நூற்பொருளை விளக்க இந்நூலாசிரியர் கையாளும் சுருக்கம், விளக்கவுரையின் சிறப்புக்கு ஒளி சேர்க்கிறது. நெஞ்சத்தின் உள்ளிருந்தெழும் "அந்த மெல்லிய சலனமற்ற தெய்வீகக் குரலைக்" கேட்போரெல்லாம் உய்யும் நெறியில் நம்பிக்கையும் துணையும் பெறுவர் என்ற நற்செய்தியினை டாக்டர் இராதாகிருஷ்ணன் வலியுறுத்துகின்ருர்.